# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2034 மார்கழி 05 சனிக்கிழமை (20-12-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:24


# பிரபா - ஹக்கீம் உடன்பாடு எப்போதோ முறிந்து விட்டது

## அரசியற்றுறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் கூறுகிறார்

கிளிநொச்சி,டிசெம்பர்20

**விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமுக்கும் இடையில் கடந்த ஆண்டு முற்பகுதியில் செய்துகொள்ளப் பட்ட புரிந்துணர்வு உடன்பாடு எப்போதோ முறிந்து விட்டது.**

**- இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கிறார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.**

கிழக்கு மாகாணத்தை சேர்ந்த - முஸ்லிம்கள் உட்பட 40 ஊடகவியலாளர்கள் யாழ். குடாநாட்டுக்கான இரண்டு நாள் விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்று வன்னி ஊடாகக் கிழக்குக்குத் திரும்பினர்.

வழியில், கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைச் செயலகத்தில் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனை அவர்கள் சந்தித்தனர். அப்போது முஸ்லிம்களின் பிரச்சினைகள் குறித்து முஸ்லிம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய பல்வேறு கேள்விகளுக்கு தமிழ்ச்செல்வன் பதிலளித்தார். அவ்வாறு பதிலளித்த சமயத்திலேயே மேற்படி புரிந்துணர்வு ஒப்பந்தம் முறிந்துவிட்டது என்ற கருத்தையும் அவர் வெளியிட்டார்.

மேற்படி சந்திப்பின்போது தமிழ்ச்செல்வன் குறிப்பிட்ட முக்கிய கருத்துக்கள் வருமாறு:-

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை தொடர்பாக நாம் முன்வைத்துள்ள வரைவில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் தொடர்பாக நாம் எதுவும் குறிப்பிடவில்லை என்று கூறுவது தவறு. முஸ்லிம் மக்களின் தீர்மானங்களை - அரசியல் எதிர்ப்பார்ப்புக்களை - அபிலாஷைகளை - நாம் அதில் முழுமையாக உள்ளடக்கவில்லை என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

எனினும், முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவம் தொடர்பாக அவர்களின் பிரதிநிதிகளுடன் கலந்துபேசி

(18ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சு விரைவில் தொடங்கும் என்கிறார் கதிர்காமர்

சென்னை,டிசெ.20

விடுதலைப் புலிகளுடன் சமரசப் பேச்சு விரைவில் தொடங்கும் என்று சென்னை வந்த ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் கூறினார்.

ஆலோசகர் கதிர்காமர் டெல்லி சென்றுவிட்டு விமானம் மூலம் சென்னை வந்தார். விமான நிலையத்தில் அவர் நிருபர்களுக்குப் பேட்டியளித்தார்.

இசையில் எனக்கு ஆர்வம் அதிகம். சென்னையில் நடக்கும் இசை விழாவில் கலந்துகொள்ள வந்துள்ளேன்.

இலங்கையில் பாதுகாப்பு அமைச்சின் பொறுப்பு ஜனாதிபதியிடம்தான் இருக்கும். பிரதமரிடம் மீண்டும் ஒப்படைக்கும் பேச்சுக்கே இடமில்லை. இது தொடர்பாக இலங்கை உயர் நீதிமன்றம் தெளிவாகக் கூறியுள்ளது. எனவே, பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதிதான் வகிப்பார்.

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே சமரசப்பேச்சு விரைவில் தொடங்கப்படவுள்ளது.

தமிழக மீனவர்களைக் கடத்திக் கொடுமைப்படுத்துவது போன்ற செயல்களில் இலங்கை இராணுவம் ஈடுபடாது. இதுபோன்ற செயல்களில் விடுதலைப் புலிகள்தான் ஈடுபடுவார்கள். இதற்கும், இலங்கை இராணுவத்திற்கும் எந்தவித தொடர்பும் கிடையாது.

- இவ்வாறு அவர் கூறினார்.

## மகாநாயக்கர் கருத்து

கொழும்பு,டிசெ.20

சுதந்திரத்தின் பின்னர் சீரான வழியில் சென்றுகொண்டிருந்த நாட்டை ஜே.ஆர்.ஜயவர்த்தனாவின் அரசமைப்புச் சட்டமே அழிவுப் பாதையில் தள்ளிவிட்டது. அந்த அரசமைப்புச் சட்டத்தை மாற்றாமல் நாட்டை மீட்டெடுப்பது ஒரு கனவாகும் என்று மல்வத்தை பீட மகாநாயக்கர் ரம்புக்வெல்லே ஸ்ரீ விபஸ்ஸி தேரர் கூறினார். கண்டி சிங்கள பௌத்த சிரேஷ்ட பிரஜைகளின் தேசிய அமைப்பின் பிரதிநிதிகள் குழு ஒன்று சில தினங்களுக்கு முன்னர் மாநாயக்கரை சந்தித்தபோதே அவர் இவற்றைக் கூறினார்.

பௌத்த சாசன அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்க வேண்டும் எனவும், ஜனாதிபதியும் பிரதமரும் பொது இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் என

(18ஆம் பக்கம் பார்க்க)

## திருகோணமலையில் குண்டு வெடிப்பு; பூட்டப்பட்டிருந்த கடை தீயில் எரிந்தது!

கன்னியா,டிசெ.20

திருகோணமலை மூன்றாம் குறுக்குத் தெருவில் சக்தி வாய்ந்த குண்டொன்று வெடித்ததால் பூட்டப்பட்டிருந்த கடையொன்று தீப்பற்றி எரிந்தது.

இந்தக் கடையின் அருகேயுள்ள மேலும் சில விற்பனை நிலையங்களும் சேதத்துக்கு இலக்காகியுள்ளன.

நேற்று அதிகாலை 12.35 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றதாக திருமலை பொலீஸார் தெரிவித்தனர். இச்சம்பவத்தில் எவரும் பாதிக்கப்படவில்லை.

குண்டு வெடிப்பால் கடை தீப்பற்றி எரிந்தபோது அயலவர்கள் திரண்டு வந்து தீயை அணைத்துள்ளனர். இதனால் மூன்றாம் குறுக்குத் தெருவிலுள்ள சில கடைகள் நேற்று மூடப்பட்டிருந்தன.

குண்டு வீச்சால் தீப்பற்றி எரிந்த கடையின் உரிமையாளர் கொழும்பு சென்றிருக்கிறார் எனத் தெரிவித்த பொலீஸார், அவர் திரும்பி வந்தவுடன் வாக்குமூலம் பெறப்பட்டு விசாரணை தொடருமெனவும் தெரிவித்தனர்.

## சுகாதார அமைச்சருடன் தமிழ் எம்.பிக்கள் சந்திப்பு

கொழும்பு,டிசெ.20

வடக்கு - கிழக்கைச் சேர்ந்த தமிழ் எம்.பிக்கள் சிலர் நேற்றுமுன்தினம் சுகாதார அமைச்சர் பி.தயாரத்னவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன், கிருஷ்ணபிள்ளை, ஆனந்தசங்கரி, சந்திரநேரு ஆகியோரே இச்

(18ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியிலும் இனி 'மொபைல் போன்'

பரந்தனில் புதிய தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையம் நேற்று திறந்துவைக்கப்பட்டது. இதன் ஊடாக - இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பிரதேசத்துக்கு 500 தொலை

(18ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியா எம் மக்களைக் கைவிடுமாயின் நாம் இந்தியாவைக் கைவிட்டுவிடுவோம்

## அமைச்சர் சந்திரசேகரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.20

இலங்கை இனப்பிரச்சினை என்பது விடுதலைப் புலிகளுடைய பிரச்சினை மட்டுமல்ல; இலங்கையில் வாழுகின்ற 35 லட்சம் தமிழ் மக்களுடைய பிரச்சினை. ஆகவே, யாரோ ஒருவரை நினைத்துக்கொண்டு இந்தியா எம்மைக் கைவிட்டுவிட முடியாது. அப்படி இந்தியா எம்மைக் கைவிட்டால் நாம் இந்தியாவைக் கைவிட வேண்டிவரும்.

- இப்படித் தெரிவித்தார் மலையகமக்கள் முன்னணித் தலைவரும் சமூக அபிவிருத்தி அமைச்சருமான பெ.சந்திரசேகரன்.

நாடாளுமன்ற உறுப்பினர் அவிநாயகமூர்த்தியின் சேவை நலன் பாராட்டுவிழா நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

இந்த நிகழ்ச்சிகள் நேற்று மாலை 4 மணியளவில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றன.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இங்குள்ள தமிழர்களுக்கு ஓர் ஆபத்து என்றால், அவர்களுக்காகக் குரல் கொடுப்பதற்காக மலையகத்தில் 15 லட்சம் தமிழர்கள் இருக்கிறார்கள். அதேபோல எங்களுக்கு ஒரு ஆபத்து என்றால் நீங்கள் குரல் எழுப்பவேண்டும்.

- இது புலிகளின் பிரச்சினை அல்ல; இலங்கையில் உள்ள அனைத்துத் தமிழர்களினதும் பிரச்சினை என்பதை இந்தியாவுக்கு நாம் தெளிவாகச் சொல்லி இருக்கிறோம்.

தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுபடவேண்டும். ஜே.வி.பி. என்ற அமைப்புக்கு 16 நாடாளுமன்ற ஆசனங்களைப் பெறமுடியுமென்றால், தமிழர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்தால் 40 இற்கும் அதிகமான நாடாளுமன்ற ஆசனங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறான ஒரு நிலையில் எந்தத் தேசியக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அது எமது காலடியிலே விழவேண்டிய அவசியம் ஏற்படும்.

மலையகத் தமிழர்களும், வடக்கு - கிழக்குத் தமிழர்களும், கொழும்புத் தமிழர்களும் ஒன்றாகச் சேர்ந்தால் இலங்கையை ஆட்டிப் படைக்கக் கூடிய பலத்தை உருவாக்கலாம். அதற்கான சரியான அடித்தளத்தை நாம் இப்போதிருந்தே உருவாக்க வேண்டும். நாங்கள் ஒன்றுபடுவதில் ஏதா

(18ஆம் பக்கம் பார்க்க)



தமிழ்க்காங்கிரஸ் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தியின் சேவை நலன் பாராட்டு விழாவில் பொன்னாடை போர்த்து வாழ்த்து தெரிவிக்கிறார்கள் அமைச்சர் பெ.சந்திரசேகரன் (இடது), கொழும்பு மாவட்ட எம்.பி. மனோகணேசன் (வலது) ஆகியோர். அருகில் குமரகுருபரனும் காணப்படுகிறார்.

## உயர் பாதுகாப்பு வலய விவகாரம்: அரச தரப்பு நியாயங்களைச் சமர்ப்பிக்க அவகாசம் கோருகிறார் சட்டமா அதிபர்

கொழும்பு,டிசெ.20

வலி. வடக்கில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்படாததை எதிர்த்து உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனித உரிமை மீறல் தொடர்பான வழக்கில் தமது தரப்பு நியாயங்களைச் சமர்ப்பிக்க சட்டமா அதிபர் கால அவகாசம் கோரியுள்ளார்.

வலி. வடக்கிலுள்ள உயர் பாதுகாப்பு வலயம் சட்டபூர்வமாக வர்த்தமானி மூலமாகப்பிரகடனம் செய்யப்படவில்லை. அந்தப் பகுதியில் மக்களை மீளக்குடியமர அனுமதி மறுப்பது அவர்களின் அடிப்படை உரிமையை மீறும் செயல். எனவே மக்கள் அங்கு மீளக்குடியமர அனுமதிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்று கோரி நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா உயர் நீதிமன்றத்தில் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு நேற்று நீதியரசர்களான சரத் என்.சில்வா, ஜே.ஜே.ஏ. என்.சில்வா, ஜே.சிஸ்ரா ஜயசிங்க ஆகியோர்முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சஞ்சய் இராசரத்தினம் தமது தரப்பு நியாயங்களை சமர்ப்பிக்க அவகாசம் கோரினார்.

இதையடுத்து விசாரணை அடுத்த மாதம் 28ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ம-3)

## வடக்கு – கிழக்கில் போரில் உயிரிழந்த இந்தியப் படையினருக்கு நினைவுத்தூபி!

### ஜனாதிபதியின் அனுமதிக்கு இராணுவம் காத்திருக்கிறது

கொழும்பு, டிசெ.20

வடக்கு - கிழக்கு கடமையின் போது உயிரிழந்த இந்தியப் படையினருக்கு நினைவுத் தூபி ஒன்று நிறுவ இலங்கை இராணுவம் யோசனை தெரிவித்திருக்கின்றது. இந்த யோசனை செயற்படுத்தப்பட ஜனாதிபதியின் அங்கீகாரம் கிடைக்கவேண்டும்.

இந்தியாவில் வெளியாகும்' இந்துஸ்தான் ரைம்ஸ்' பத்திரிகை இச் செய்தியை வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இந்தியக் கலைஞர்களின் ஒத்துழைப்புடன் இந்த நினைவுத் தூபியை இலங்கை இராணுவம் நிறுவவிருக்கிறது. தூபி நிறுவும் யோசனைக்கு ஜனாதிபதி அனுமதி வழங்கியதும், தூபி நிறுவும் இடத்தை தெரிவு செய்வதென இராணுவம் தீர்மானித்திருக்கிறது.

உயிரிழந்த இந்தியப் படையினருக்கு நினைவுத்தூபி நிறுவும் யோசனை நீண்ட காலமாக ஆராயப்பட்டு வந்தது. ஆயினும், இலங்கை இராணுவத் தளபதியின் சமீபத்திய இந்திய விஜயத்தின்போதே அது குறித்து முதன் முதலாகத் தெரிவிக்கப்பட்டது.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மினிபஸ் சாரதிகளின் போட்டாபோட்டியால் கல்வியங்காட்டில் நேற்று பெரும் களேபரம்!

## பொதுமக்கள் ஆத்திரம்; பொலீஸாருடன் மோதல்!

யாழ்ப்பாணம்,டிசெ.20

இரண்டு மினி பஸ்களிடையே ஒன்றை ஒன்று முந்திச் செல்வதில் ஏற்பட்ட போட்டாபோட்டி விபத்தில முடிவடைந்தது.

மினிபஸ் ஒன்றை முந்திச்செல்ல முயன்ற மற்றொரு மினிபஸ் வீதியில சென்றவர்களை மோதியதுடன் தொலைபேசி இணைப்புக் கம்பம் ஒன்றையும் மோதிச் சாய்த்தது.

கல்வியங்காடு சந்திக்குச் சமீபமாக பருத்தித்துறை வீதியில் நேற்று முற்பகல் 11.00 மணியளவில் இந்த விபத்து நிகழ்ந்தது.

யாழ். நகரில் இருந்து அச்சுவேலி நோக்ச் சென்றுகொண்டிந்த இரண்டு மினி பஸ்களே ஒன்றை ஒன்று வேகமாக முந்திச்செல்ல முற்பட்டன என்று கூறப்படுகிறது. முன்னால் சென்ற பஸ், தரிப்பிடத்தில் பயணிகளை ஏற்றுவதற்காகத் திடீரென நிறுத்தப்பட்டபோது அதனை முந்திச் செல்வதற்காக பின்னால் வேகமாக வந்துகொண்டிருந்த அடுத்த பஸ் கட்டுப்பாட்டை இழந்து வீதியல் முன்னால் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றையும் பாதசாரி ஒருவரையும் மோதிக் காயப்படுத்தியதுடன் அருகே உள்ள தொலைபேசி இணைப்புக் கம்பத்துடனும் மோதிநின்றது. இதனால் தொலை பேசிக் கம்பம் சாய்ந்தது; இணைப்பு வயர்கள் அறுந்தன; மினிபஸ் பலத்த சேதமடைந்தது.

மோட்டார். சைக்கிளை ஓட்டிச் சென்றவரான மண்டைதீவைச் சேர்ந்த சண்முகலிங்கம் கோகிலசிறி (வயது-28) என்பவரும் -

சந்தையில் பொருள்கள் வாங்கிக கொண்டு வீதிவழியே நடந்து சென்றுகொண்டிருந்தவரான கிருஷ்ணபிள்ளை இராசாத்தி (வயது-51) என்ற பெண்ணும படுகாயமடைந்தனர். இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

தொலைபேசி கம்பத்துடன் மோதுண்ட மினிபஸ்ஸில் பயணம் செய்த எவருக்கும் பெரிய காயங்கள் ஏற்படவில்லை.

இந்த விபத்து நடந்த சிறிது நேரத்தில் அங்கு திரண்ட பலர் விபத்தில் சம்பந்தப்பட்ட மினிபஸ்ஸை அடித்து நொறுக்கிச் சேதப்படுத்தினர். வீதியில் செல்வோரைக் கவனிக்காமல் தான் தோன்றித்தனமாக வாகனங்களை வேகமாகச் செலுத்திய பஸ் சாரதிகளையும், நடத்துநர்களையும் அவர்களில் சிலர் தேடித் தாக்க முற்பட்டனர்.

கலவரம் நடந்து கொண்டிருந்த போது அச்சுவேலியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த மற்றொரு மினிபஸ்ஸும் தாக்கப்பட்டது.

கோப்பாய் பொலீஸ் நிலையத்தைச சேர்ந்த பெரும் எண்ணிக்கையான பொலீஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து மக்கள் கூட்டத்தை அகற்ற முறபட்டனர். பஸ் தாக்கப்படுவதைத்தடுக்க பொலீஸார் முயன்றபோது அவர்கள் மீது கற்கள் வீசப்பட்டன. பதிலுக்குப் பொலீஸார் கொட்டன்கள் கொண்டு பொதுமக்களை அடித்து விரட்டினர். இதனால் அப்பகுதியில் பெரும் களேபரம் ஏற்பட்டது.

இளைஞர் குழுவினர் பொலீஸாரோடு வாக்குவாதப்பட்டனர். இதனால், அங்கு முறுகல் நிலை உருவாகியது. நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக சிலரை பொலீஸார் கைது செய்தனர். இதனையடுத்து பொலீஸாரோடு மோதலில் ஈடுபட்டவர்கள் அங்கிருந்து வெளியேறினர்.

நேற்றைய களேபரத்தின்போது கைவிடப்பட்ட பெரும் எண்ணிக்கையான சைக்கிள்களை பொலீஸார் எடுத்துச் சென்றனர்.

நேற்றைய விபத்தின் போது பொலீஸார் தங்கள் கடமையைச் செய்ய விடாது தடுக்கப்பட்டனர் என்றும் -

இது போன்ற சம்பவங்களின் போது தேவையற்ற விதமாக ஒன்று கூடி வேடிக்கை பார்ப்பதை பொதுமக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் -

கோப்பாய் பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

(ஐ-5-6-7-15-139-180)

## விபத்தில் காயமடைந்தவரின் தங்க நகைகள் அபேஸ்!

கல்வியங்காடுப் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் காயமடைந்தவரிடம் தங்க நகைகள் அபகரிக்கப்பட்டுள்ளன.

மண்டைதீவு 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சண்முகலிங்கம் கோகிலசிறி என்பவரின் நகைகளே அபகரிக்கப்பட்டன.

தான் அணிந்திருந்த சுமார் 3பவுண் பெறுமதியுடைய கழுத்துச்சங்கிலி, மோதிரம், கைச்சங்கிலி ஆகியவை அபகரிக்கப்பட்டுள்ளன என்று நகைகளைப் பறிகொடுத்த உரிமையாளர் தெரிவித்தார்.

விபத்தில் காயமடைந்து சுயநினைவு இழந்த நிலையில் கிடந்த இவர், ஓட்டோ ஒன்றில் யாழ் போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செலலப்பட்டார்.

சில மணித்தியாலங்களின் பின்னர் சுயநினைவுக்கு வந்ததும்தான் அணிந்திருந்த நகைகள் அபகரிக்கப்பட்டமை தெரியவந்துள்ளது.

(ம-7)

## வத்தளையில் கைக்குண்டு வீச்சு; ஒருவர் பலி!

வத்தளை, ஹுனுப்பிட்டிய பகுதியில இடம்பெற்ற கைக்குண்டு வீச்சுச் சம்பவம் ஒன்றில் ஒருவர் பலியானார்; 13 பேர் படுகாயங்களுக்கு உள்ளாகி ராகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஹுனுப்பிட்டிய பகுதியில் நேற்று முன்தினம் இரவு ஓர் இளைஞர் ஒரு கூட்டத்தினரை நோக்கி கைக்குண்டு ஒன்றை எறிந்துள்ளார். இதில் சாகல பெரேரா என்ற இளைஞர் பலியானதுடன் 13பேர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

கைக்குண்டை வீசியது மட்டுமல்லாமல் குறிப்பிட்ட இளைஞர் கோஷ்டியொன்றுடன் சென்று தாக்குதலிலும் ஈடுபட்டார் என்று பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய 13 இளைஞர்களை வத்தளைப் பொலீஸார் கத்திகள், பொல்லுகள், ஆகியவற்றுடன் கைது செய்துள்ளனர். தனிப்பட்ட விரோதமே இத்தாக்குதலுக்குக் காரணமாக இருக்கலாம் என்று வத்தளைப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுரவீர தெரிவித்தார். வத்தளைப் பொலீஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## உலர் உணவு விநியோக வழங்கற் கட்டளை

டிசெம்பர் மாத உலர் உணவு விநியோகத்துக்கான வழங்கற்கட்டளை கள் கூட்டுறவுச்சங்கங்களுக்கு இன் றும் நாளையும் வழங்கப்படும் என்று யாழ். செயலக திட்டப்பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை அறிவித்துள்ளார்.

எனவே, சகல கூட்டுறவுச்சங்கங்களும் வழங்கற்கட்டளைகளைப் பெற்று கிறிஸ்மஸ் பண்டிகைக்கு முன்னர் உலர் உணவு விநியோகத்தை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

(ம-10)





நல்லூர் பொதுச் சந்தைக்கு சமீபமாக, பருத்தித்துறை வீதியில் நேற்று வாகன விபத்து இடம்பெற்ற இடத்தில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

வீதியோரமாக உள்ள தொலைபேசி இணைப்புக் கம்பத்துடன் மோதிச் சேதமடைந்து நிற்கும் மினி பஸ்ஸை முதற் படத்தில் காணலாம். விபத்தை அடுத்து அங்கு பொலீஸாருக்கும் இளைஞர் குழுவுக்கும் இடையே ஏற்பட்ட களேபரத்தின் போது அங்கு ஆயுதங்களுடன் காணப்பட்ட பொலீஸாரை அடுத்துள்ள படத்தில் காணலாம்.

*(படம்: பொ. இராஜேஸ்வரன் - வலி.கிழக்கு செய்தியாளர்)*

# நெடுமாறன் விடுதலையை எதிர்த்து தமிழக அரசு உயர் நீதிமன்றில் தாக்கல் செய்த மனு நிராகரிப்பு

## மனுதாரர் சார்பில் வாதாடிய வழக்கறிஞருக்குக் கண்டனம்

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறனை பிணையில் விடுதலை செய்த சென்னை மேல் நீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்து தமிழக அரசு செய்த மேன் முறையீட்டை உயர் நீதிமன்றம் நிராகரித்துவிட்டது.

'பொடா' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கடந்த 17 மாதங்களாகச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த பழ.நெடுமாறனை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் பிணையில் விடுவிக்குமாறு சென்னை மேல் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை ரத்துச் செய்ய வேண்டும் என்று கோரி உடனடி விசாரணை மேன்முறையீட்டைச் செய்தது தமிழக அரசு.

தமிழக அரசின் சார்பாக வாதாடிய வழக்கறிஞர் நெடுமாறனை பிணையில் விடுவித்தால் சாட்சிகளை அவர் மிரட்டிக் கலைத்துவிடுவார் என்றும், தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு ஆதரவாகத் தொடர்ந்து செயற்பட்டுவரும் கூட்டத்தைச் சேர்ந்தவர் நெடுமாறன் என்றும், அவரை விடுதலை செய்வது வழக்கிற்குப் பாதகமாக முடியும் என்றும் கூறினார்.

'பொடா' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட நெடுமாறன், உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் கூறப்பட்ட வழிகாட்டுதல்கள், நெறிமுறைகளின் படியே பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என்று நெடுமாறன் சார்பாக வாதாடிய வழக்கறிஞர் கூறினார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், தமிழக அரசின் மேன்முறையீட்டை நிராகரிப்பதாக அறிவித்தனர்.

"சென்னை மேல் நீதிமன்றம் வழங்கிய பிணை அனுமதியில் எந்தவிதத்திலும் நாங்கள் தலையிடமாட்டோம். பிணை விடுதலைக்கு எதிரான தமிழக அரசின் இந்த மனு நிராகரிக்கப்படுகிறது" - என்று நீதிமன்றக் குழு கூறிவிட்டது.

தமிழக அரசின் மனுவை நிராகரித்தது மட்டுமன்றி, தமிழக அரசின் சார்பாக வாதாடிய வழக்கறிஞரை உயர் நீதிமன்றம் கண்டித்துள்ளது.

"இவ்வழக்கு குறித்த விவரங்கள அனைத்தையும் நாங்கள் நன்றாகப் பார்த்துவிட்டோம். 'பொடா'வைப் பயன படுத்தி அச்சமான சூழ்நிலையை உருவாக்க வேண்டாம். பழ.நெடுமாறனும் நமது ஜனநாயகத்தில் ஓர் அரசியல் வாதியே. அவருக்கென்று தனி அரசியல் கருத்து இருக்கக்கூடாதா? நீங்கள் தேவையில்லாமல் விஷயத்தை நீடித்துக்கொண்டே செல்கிறீர்கள். 'பொடா'விற்கு எதிரான முக்கிய குற்றச்சாட்டே, அது அரசியல் எதிரிகளுக்கு எதிராக தவறாகப் பயன்படுத்தப் படுகிறது என்பதே. இந்தப் பிரச்சினையை தற்பொழுது இந்த நீதிமன்றத்தின் முன் விசாரணையில் இருக்கும நெடுமாறனின் வழக்கில் விவரமாக பார்க்கத்தான் போகிறோம்" - என்று நீதிமன்றக் குழு எச்சரிக்கையுடன் கூறி தமிழக அரசின் மனுவை நிராகரித்தது.

# இந்திரா டி சில்வாவுக்கே பொலீஸ்மா அதிபர் பதவி

கொழும்பு,டிசெ.20

புதிய பொலீஸ்மா அதிபராக இந்திரா டி சில்வாவை நியமிப்பதற்கு சிபாரிசு செய்வதென நேற்றுமுன்தினம் இரவு கூடி அரசமைப்புச் சபை தீர்மானித்துள்ளது. இந்தத் தீர்மானத்தை அரசமைப்புச் சபை ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளது. ஜனாதிபதி ஓரிரு தினங்களில் பொலீஸ்மா அதிபருக்கான நியமனத்தை வழங்கவுள்ளார்.

இந்திரா டி சில்வா பதில் பொலீஸ்மா அதிபராகக் கடமையாற்றி வருவது தெரிந்ததே. பொலீஸ்மா அதிபர் பதவி கடந்த மூன்று மாதங்களாக வெற்றிடமாகவே இருந்துவருகிறது.

கடந்த ஒக்ரோபர் மாதம் 14ஆம் திகதி ரி.ஈ.ஆனந்தராஜா ஓய்வுபெற்றதையடுத்து அந்தப் பதவிக்கு பிரதி பொலீஸ்மா அதிபர் இந்திரா டி சில்வாவை நியமிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசமைப்புச் சபைக்கு யோசனை தெரிவித்தார். ஆனால், அரசமைப்புச் சபை அதனை நிராகரித்தது.

இந்த நிலையில், பொலீஸ்மா அதிபருக்குத் தகுதியான ஒருவரை நியமிப்பதற்காக பொலீஸ் ஆணைக்குழுவிடம் அரசமைப்புச் சபை அறிக்கை ஒன்றைக் கோரியிருக்கிறது. பொலீஸ் ஆணைக்குழுவின் அறிக்கையின்படி பொலீஸ்மா அதிபர் பதவிக்கு சேவை மூப்பு அடிப்படையில் சந்திரா பெர்ணாண்டோ முதலிடத்தில் இருக்கிறார் என்று அரசமைப்புச்சபை ஜனாதிபதிக்கு அறிவித்தது. எனினும், அந்த யோசனையை நிராகரித்த ஜனாதிபதி, இந்திரா டி சில்வாவை பொலீஸ்மா அதிபராக நியமிக்குமாறு அரசமைப்புச்சபைக்கு மீண்டும் அறிவித்தார். அதையடுத்து நேற்று முன்தினம் கூடிய அரசமைப்புச்சபை இந்திரா டி சில்வாவை பொலீஸ்மா அதிபராக நியமிப்பதெனத் தீர்மானித்தது.

# பாலியல் வல்லுறவு வழக்கில் குற்றவாளிக்கு 20 வருடச் சிறை

மல்லாகத்தில் 12 வயதுச் சிறுமியை கடத்தி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினார் என்று அதேயிடத்தைச சேர்ந்த தேவராசா நாகேஸ்வரன் மீது தொடரப்பட்ட வழக்கில் யாழ் மேல் நீதிமன்றம் அவருக்கு 20 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி நேற்று இத்தீர்ப்பை வழங்கினார்.

2000ஆம் ஆண்டு ஒக்ரோபரில் இந்த வல்லுறவுச் சம்பவம் இடம்பெற்றது. தேவராசா நாகேஸ்வரன் - அதே இடத்தைச் சேர்ந்த 12 வயதுச் சிறுமியைக் கடத்தினார் என்றும் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினார் என்று இரண்டு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன.

குறிப்பிட்ட நபர் நாட்டை விட்டு வெளியேறிவிட்டார். இதனால், அவர் இல்லாமலே வழக்கு விசாரணைகள் யாழ். மேல் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தன. நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் இரண்டும் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளன என்றும் 16 வயதிற்கு உட்பட்ட பெண்ணுடன் விருப்பத்துடனோ அன்றி விருப்பமின்றியோ உடலுறவு கொள்வது தண்டனைக்குரிய குற்றம் என்றும் தெரிவித்த நீதிபதி, குற்றவாளிக்கு முதலாவது குற்றச்சாட்டுக்காக 5 வருடக் கடூழியச் சிறைத் தண்டனையும், 2ஆம் குற்றச்சாட்டுக்காக 15 வருடக் கடூழியச் சிறைத்தண்டனையும் விதித்தார்.

குற்றவாளி பிடிபடும் சந்தர்ப்பத்தில் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ஒரு லட்சத்து 50ஆயிரம் ரூபா நஷ்டஈடு வழங்க வேண்டும் என்றும் உத்தரவிட்ட நீதிபதி, அவர் தற்போது வெளிநாட்டில் வசித்து வருவதால் அவருக்கு எதிராக பகிரங்க பிடியாணை பிறப்பித்தார். அதன் பிரதிகளை சகல இறங்கு துறைமுகங்களுக்கும் பொலீஸாருக்கும் அனுப்பிவைக்குமாறும் உத்தரவிட்டார்.

(ம-5)

### பிணையில்விட மேல்நீதிமன்றம் உத்தரவிட்டாலும்

# இரு வழக்குகள் நிலுவையிலிருப்பதால் நெடுமாறன் விடுதலையில் தாமதம்!

சென்னை,டிசெ.20

விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசினார் என்று தொடரப்பட்ட 2 வழககுகள் நிலுவையில் இருப்பதால், பழ. நெடுமாறன் விடுதலையாவதில் தாமதம் ஏற்படலாம்.

பத்தாண்டுகளுக்கு முன் கொடைக்கானலில் விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசினார் என்று திண்டுக்கல் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு விசாரணை செய்யப்பட்டு வருகிறது. அதேபோல, 'காவிய நாயகன் கிட்டு' என்ற புத்தகத்தை எழுதியதற்காக, ஆலந்தூா நீதிமன்றத்தில் மற்றொரு வழக்கு விசாரணையிலுள்ளது.

பத்தாண்டுகளுக்கு முன் தொடரப்பட்ட இவ்வழக்குகளுக்கு 'பொடா' சட்டத்தில் நெடுமாறன் கைது செய்யப்பட்ட பிறகே உயிர் கொடுக்கப்பட்டது. சிறையில் இருந்த நெடுமாறனை இவ்வழக்குகளிலும் கைது செய்துள்ளதாகப் பொலீஸார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்திவந்தனர்.

எனவே, 'பொடா' வழக்கில் பெற்றுள்ள பிணையைப் பயன்படுத்தி விடுதலையாக, இந்த இரு வழக்குகளில அவர் பிணை பெறவேண்டும். அதற்காக ஆலந்தூர், திண்டுக்கல் நீதிமன்றங்களில் நெடுமாறனின் வழக்கறிஞர்கள் பிணை மனுத் தாக்கல் செய்துள்ளனர். இம்மனுக்கள் மீதான விசாரணையின் பின்னரே நெடுமாறன் விடுதலையாகலாம்.


'பொடா' சட்டத்தின் கீழ் கைதாகி ஓராண்டாக தடுத்து வைக்கப்பட்டிருந்த நெடுமாறனை பிணையில் விடுவிக்க சென்னை மேல்நீதிமன்றம் உத்தரவிட்டிருப்பது தெரிந்ததே.

# குவாண்டனோமா கைதிகள் விவகாரம்; அமெ. அரசுக்குச் சட்டப் பின்னடைவு!

வாஷிங்ரன்,டிசெ.20

தீவிரவாதிகளைத் தடுத்து வைத்துள்ளமை தொடர்பான வழக்கில் அமெரிக்க அரசு சட்ட அடிப்படையில் இரு பின்னடைவுகளைச் சந்திக்க நேரிட்டுள்ளது.

ஆப்கானில் கைதுசெய்யப்பட்ட தலிபான் மற்றும் அல்கெய்டா சந்தேகநபர்கள் கியூபாவில் உள்ள அமெரிக்கப்படைத் தளமான குவாண்டனோமாவில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். 660 பேர் இவ்வாறு சிறை வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் அமெரிக்கப் பிரஜையான ஜோஸ் படில்லா என்பவரும் அடங்குவார்.



குவாண்டனோமா தடுப்பு முகாமின் ஒரு தோற்றம்

கதிரியக்க ஆயுதத்தைக் கடத்த முயன்றவர் என்ற சந்தேகத்தின் பேரில் இவர் சிகாகோ விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டார். இவர் உட்பட குவாண்டனோமாவில் உள்ள கைதிகளை 'அந்நிய அழிவு சக்திகள்' என்று அமெரிக்கா குறிப்பிடுகிறது. அவர்கள் மீது வழக்குத் தொடராமல், கால வரையறை ஏதுமின்றி சிறைவைத்துள்ளது.

மேற்படி கைதிகள் குறித்து மனித உரிமை அமைப்புகள் அமெரிக்க நீதிமன்றங்களில் மனுக்களை சமர்ப்பித்துள்ளன.

அவற்றில் ஒரு வழக்கில் அமெரிக்க பெடரல் நதிமன்றம், அமெரிக்கப் பிரஜை ஒருவரை, அவரது தாய் மண்ணில், அந்நியசக்தி என்று கூறித் தடுத்து வைத்திருக்க அமெரிக்க அரசுக்கு அதிகாரம் இல்லை என்று கூறியுள்ளது. அத்துடன் குவாண்டனோமா சிறையில் உள்ள கைதிகள் சட்டத்தரணிகளின் ஆலோசனை பெற அனுமதிக்கவேண்டும் என்றும் நீதிமன்றம் கூறியுள்ளது.

குவாண்டனோமா கைதிகள் சட்ட ஆலோசனை பெற அனுமதிக்கப்படவேண்டும் என்று கலிபோர்னிய மாநில நீதிமன்றம் சமீபத்தில் கூறியிருந்தது. அதனைத் தொடர்ந்து தற்போதைய தீர்ப்பும் வெளியாகியுள்ளது.

இதனால் அதிபர் புஷ்ஷின் நிர்வாகம் சட்டத்தின் அடிப்படையில் நெருக்கடிகளைச் சந்திக்க நேரிட்டுள்ளது. ஆப்கானிஸ்தானில் பிடிபட்ட கைதிகள் மீது நேரடியாக குற்றச் செயல்களில் சம்பந்தப்படுத்த ஆதாரங்கள் ஏதுமில்லை. அதனாலேயே அவர்களைக் காலவரையறையின்றி அமெரிக்க அரசு சிறைவைத்திருக்கிறது. ஆனால், அவர்களை இனியும் அவ்வாறு தடுத்து வைத்திருக்க முடியாத நிலை அமெரிக்க அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

(ஒ)

# நெடுமாறன் விடுதலைக்கு எதிர்ப்பு; அரசுக்கு நீதிமன்று கண்டனம்



தமிழகத்தில் 'பொடா' சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டிருந்த தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறனை பிணையில் விடுதலை செய்ததை எதிர்த்து தமிழக அரசு தொடுத்த வழக்கை உச்ச நீதிமன்றம் நேற்று நிராகரித்தது. தமிழக அரசின் நடவடிக்கையையும் உச்ச நீதிமன்றம் கடுமையாகக் குறைகூறியிருந்தது.

முதலில் தமிழக அரசு தனது மனுவில் நெடுமாறன் தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயகத்திற்கு ஆதரவளித்து வருகிறார். இந்த நிலையில் அவரை விடுதலை செய்தால் அவரால் சாட்சியங்களுக்குப் பங்கம் நேரலாம் என்று கூறப்பட்டிருந்தது.

இம்மனுவை விசாரித்த நீதிபதிகள் ராஜேந்திரபாபு, ஏ.ஆர்.லஷ்மணன், ஜி.பி.மாத்தூர் ஆகியோர் அடங்கிய அமர்வு மனுவிலுள்ள அனைத்து விடயங்களையும் நன்கு ஆராய்ந்துவிட்டதாகவும், வேண்டுமென்றே பயங்கரமான சூழல் இருப்பதைப் போன்ற எண்ணத்தை ஏற்படுத்தவேண்டாம் எனவும் தமிழக அரசைக் கேட்டுக்கொண்டது. நீதிபதிகள் ஜனநாயக நாட்டில் அரசியல்வாதிகள் தங்களுக்கென்று ஒரு கருத்துடன் இருக்கக்கூடாதா என்று தமிழக அரசிடம் கேள்வி எழுப்பினர்.

# நக்கீரன் கோபாலுக்கு பிணை அனுமதி



'பொடா' சட்டத்தில் கைதுசெய்யப்பட்டு சிறையில் இருக்கும் நக்கீரன் ஆசிரியர் ஆர்.ஆர்.கோபாலுக்கு சென்னை உயர்நீதிமன்றம் நிபந்தனை பிணை வழங்கியுள்ளது. நீதிபதிகள் பி.சண்முகம் மற்றும் ராஜன் ஆகியோர் அடங்கிய அமர்வு, இந்தப் பிணை அனுமதியை வழங்கியது.

நங்கீரன் கோபால் ஒவ்வொரு வாரமும் முதல்நாள் சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜராகவேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இருப்பினும் அவர் மீது மேலும் சில வழக்குகள் இருப்பதால் அவர் சிறையிலிருந்து விடுதலையாகி வெளியே வர வாய்ப்பில்லை என்று தெரிகிறது.

# "என்னைப் பற்றிக் கவலைப்படாதே; நீ பாதுகாப்பாக இரு" இரண்டாவது மனைவியுடன் சதாமின் கடைசி நிமிடங்கள்

பெய்ரூட்,டிசெ.20

"எனனைப் பற்றிக் கவலைப்படாதே; நீ பாதுகாப்பாக இரு"

இதுதான் சதாம் ஹுசைன் தனது இரண்டாவது மனைவி சமீராவை கடைசியாக சந்தித்தபோது கூறிய வார்த்தை.

தற்போது லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் உள்ள சமீரா இது குறித்து மேலும் கூறியிருப்பதாவது:-

அமெரிக்கா போர் தொடுக்கும் என்று சதாம் எதிர்பார்த்தார். ஆனால், போரில் வெற்றிபெற்று விடுவோம் என்றே அவர் நம்பினார். அதற்குத் தயாராக இருப்பதாகவும் அடிக்கடி அவர் என்னிடம் கூறியிருந்தார்.

அமெரிக்கப்படை ஈராக்கில் புகுந்தவுடன் பாதுகாப்பிற்காக ஏராளமான வீடுகளை அவர் ஒழுங்குசெய்திருந்தார். போர் ஆரம்பித்ததும் மன்சூர் நகரருகே உள்ள வீட்டில் சதாமும் நானும் எங்களது மகன் அலியும் தங்கியிருந்தோம். அங்கு ஒருவாரம் சதாம் தங்கினார். அதன்பின்னர், சதாம் எங்கு சென்றார் என்று எனக்குத் தெரியாது.

அமெரிக்கப்படைகள் முன்னேறியதால் நான் எனது மகனுடன் தியாலா நகரை நோக்கி சென்றுகொண்டிருந்தேன். துணைக்கு பாதுகாவலர்கள் வந்தனர். தியாலா செல்லும் வழியில் சதாமைப் பார்த்தேன்.

"அவர்கள் உள்ளே வரட்டும் பக்தாத்துக்குள் வளைக்க திட்டமிட்டுள்ளோம்"- என்று சதாம் என்னிடம் அப்போது கூறினார்.

அதன் பின்னர் தியாலா நகரில் என்னைச் சந்தித்த சதாம் அறைக்குள் என்னைக் கூட்டி சென்று கதறி அழுதார். தான் ஏமாற்றப்பட்டுவிட்டேன் என்று கூறினார்.

அதன் பின்னர் தியாலாவில் இருந்து புறப்பட்ட நானும் எனது மகன் அலியும் சிரியா எல்லையில் உள்ள மசூதி ஒன்றில் இருந்தோம். அங்குதான் நான் சதாமை கடைசியாகப் பார்த்தேன்.

அவர் என்னிடம் "பயப்படாதே" என்று கூறினார். அலியை முத்தமிட்டார். அவனிடமும் "பயப்படாதே" என்றே கூறினார்.

"என்னைப்பற்றிக் கவலைப்படாதே; நீ பாதுகாப்பாக இரு"- என்று கூறிவிட்டு சதாம் அங்கிருந்து சென்றுவிட்டார்.

எமது இறுதிச்சந்திப்பின் போது சதாம் எனக்கு அமெரிக்க டொலர்கள் அடங்கிய பணப்பெட்டியை வழங்கினார். அதில் 5மில்லியன் டொலர் பணம் இருந்தது. மேலும், ஒரு பெரிய பெட்டியை "இது உனக்கு தேவைப்படும் போது உதவும்"- என்று கூறி அவர் தந்தார்.

பக்தாத்தில் இருந்த சதாமின் பெரிய சிலை அமெரிக்கப்படையினரால் இழுத்து வீழ்த்தப்பட்ட பின்னர் 12 நாள்கள் கழித்து (2003 ஏப்ரல் 21) இந்தச் சம்பவம் நடந்தது.

லெபனான் எல்லைக்கு நான் பாதுகாவலர்களுடன் சென்றேன். எனது கடவுச்சீட்டில் எனது பெயர் ஹதீஜா என்று இருந்தது. அலியின் பெயர் ஹாசன் என்றிருந்தது.

லெபனான் சென்றவுடன் சதாம் தந்த இரண்டாவது பெட்டியைத் திறந்து பார்த்தேன். அதனுள் 10 கிலோ தங்கம் இருந்தது - என்று கண்ணீர் மல்கத் தெரிவித்துள்ளார்.

(ஐ)

# சதாம் மீது வழக்குத் தொடர அவரின் எதிரி நாடுகள் ஆர்வம்

சதாமுக்கு எதிராக ஈராக்கில் உள்ள அவரின் விரோதிகள் மட்டுமன்றி ஈராக்கின் அயல் நாட்டவர்களும் வழக்குத் தொடரத் தயாராகி வருகின்றனர்.

குவைத், ஈரான் மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் சதாமின் குற்றங்கள் தொடர்பான ஆவணங்களைத் தயாரிக்கும் பணியில் தற்போது ஈடுபட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

சதாம் மீது எந்த இடத்தில் விசாரணை நடந்தாலும் அந்த விசாரணையில் தங்கள் தரப்பில் சுமத்தப்படும் குற்றங்கள் இடம்பெறவேண்டும் என்று மேற்படி நாடுகள் கூறியுள்ளன.

குவைத் மீது 1990ஆம் ஆண்டு சதாம் போர் தொடுத்தார். அதனால், அந்த நாடு சதாம் மீது வழக்குத் தொடர ஆர்வமாக உள்ளது.

"எங்கள் நாட்டிற்கும், எங்கள் நாட்டு மக்களுக்கும் எதிராக சதாம் செய்த குற்றங்களுக்கான விரிவான ஆவணங்களைத் தயார் செய்யும்படி வெளியுறவு மற்றும் நீதித்துறை அமைச்சுகளுக்கு உத்தரவிட்டுள்ளேன்" என்று அந்நாட்டு பிரதமர் ஷேக் சபா அல் அகமது தெரிவித்தார்.

ஈரான் நாடும் சதாமுக்கு எதிரான குற்றங்களைச் சுமத்த தயாராகி வருகிறது. ஈரான், ஈராக் போரின் போது 3 லட்சம் ஈரானியர்கள் கொல்லப்பட்டனர். இது தொடர்பான கிரிமினல் குற்றச்சாட்டுகளை அந்நாடு தயார் செய்து வருகிறது.

"சதாம் செய்த கொடுமைகள் தொடர்பான ஆவணங்களை வெளியுறவு அமைச்சகம் தயாரித்து வருகிறது. ஈரானியர்களின் சட்டபூர்வமான கோரிக்கையை உரிய இடத்தில் நாங்கள் முறையிடுவோம்" என்று ஈரானிய அரசின் தகவல் தொடர்பாளர் அப்துல்லா கூறியுள்ளார்.

இந்த இரண்டு நாடுகளையும் தவிர 1991ஆம் ஆண்டு நடந்த வளைகுடா போரின்போது ஈராக்கின் ஸ்கட் ஏவுகணைத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட இஸ்ரேலும் சதாம் மீது வழக்குத் தொடர முனைப்புக் காட்டி வருகிறது.

அந்நாட்டு நாடாளுமன்றில் சதாம் மீது வழக்குத் தொடர்வது குறித்து விவாதிக்கப்பட்டது. தமது நாட்டின் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதற்கும் பலஸ்தீன தற்கொலைப் படையினருக்கு நிதியுதவி அளித்ததற்கும் சதாம் தண்டிக்கப்படவேண்டும் என்று அங்கு முடிவு எடுக்கப்பட்டது.

அதனால், இஸ்ரேலும் சதாம் மீது வழக்குத் தொடர்வதற்கான ஆவணங்களைத் தயார் செய்து வருகிறது.

# பக்தாத்தில் மீண்டும் குண்டுவெடிப்பு இரண்டு அமெரிக்கப் படையினர் பலி!

பக்தாத்,டிசெ.20

ஈராக்கியத் தலைநகர் பக்தாத்தில் நேற்று மீண்டும் குண்டு வெடித்தது. இதில் இரண்டு அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டனர். மேலும் இரண்டு படையினர் காயமடைந்தனர்.

அமெரிக்கப் படையினரின் வாகனத் தொடர் அணியைக் குறிவைத்து இக்குண்டுத் தாக்குதல் நடந்ததாக அங்குள்ள அமெரிக்கப் படையினர் தெரிவித்துள்ளனர்.

பக்தாத்தின் தென்பகுதியில் அமைந்துள்ள பலூஜா நகரிலேயே நேற்றுக் காலை இச்சம்பவம் நடந்தது.

வீதியோரமாக வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்றே அமெரிக்கப் படையினரின் வாகனத் தொடரணி அப்பகுதியை நெருங்கியதும் வெடித்துச் சிதறியதாக கூறப்படுகிறது.

இச்சம்பவத்தில் ஈராக்கிய சிவிலியன் ஒருவரும் கொல்லப்பட்டார். மேலும் 5 சிவிலியன்கள் காயமடைந்தனர் என்று பக்தாத் வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

குண்டு வெடித்த இடத்திற்கு அருகில் இருந்த கட்டடம் முற்றாகச் சேதமடைந்தது. அந்தக் கட்டடத்தில் இருந்த சிவிலியன்களே பாதிக்கப்பட்டனர். தாக்குலுக்கு இலக்கான அமெரிக்கப்படையினரின் வாகனமும் கடுமையாகச் சேதமடைந்தது.

குண்டு வெடித்த இடத்தில் கடும் தேடுதல் நடைபெற்றது.

சதாம் ஹுசைன் கைதுசெய்யப்பட்ட பின்னர் தாக்குதல்கள் குறையும் என்று எதிர்பார்க்கப்பட்டது

ஆனால், தொடர்ந்து அமெரிக்கப் படைக்கு எதிரான தாக்குதல்கள் நடந்து வருகின்றன.

(ஐ)

# ஈராக்குக்கு மேலும் 2 ஆயிரம் படையினர்

ஈராக்கில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடவென மேலும் 2ஆயிரம் படையினரை அனுப்ப அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. இதுகுறித்த உத்தியோக பூர்வ அறிவிப்பை பென்ரகன் நேற்று வெளியிட்டது.

சதாம் கைது செய்யப்பட்டாலும் தாக்குதல்கள் தொடர்வதன் காரணமாகவே மேலதிக படையினரை அங்கு அனுப்ப அமெரிக்கா திட்டமிட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

ஆனால் ஈராக்கில் தற்போது கடமையிலுள்ள படையினரை சுழற்சி முறையில் அமெரிக்காவுக்கு மீள அழைக்கவே இவர்கள் அனுப்பப்படவுள்ளனர் என்று பென்ரகன் கூறியுள்ளது.

அடுத்த வருட ஆரம்பம் முதல் இவர்கள் சுழற்சி முறையில் மீளப் பெறப்படுவர். அதற்கு முன்னதாக கிறிஸ்மஸை முன்னிட்டு 82ஆவது விமானப் படையணியைச் சேர்ந்த வீரர்கள் ஈராக்கில் இருந்து மீளப் பெறப்படுவர் என்றும் பென்ரகன் கூறியுள்ளது.

புதிதாக அங்கு அனுப்பப்படவுள்ள [illegible] யினர் தலைநகர் பக்தாத்தில் நிலைகொண்டிருப்பர் என்று அமெரிக்கப் படைத், தளபதி ஜெனரல் ஜோன் அபிசெ[illegible] தெரிவித்தார்.(ஐ)

# ஈராக் புனரமைப்புக் கூட்டத்தை அமெரிக்கா மீண்டும் ஒத்திவைத்தது!

ஈராக்கில் புனரமைப்புப் பணிகளை நடத்துவது தொடர்பாக விவாதிக்க இருந்த ஒப்பந்தக்காரர்களின் கூட்டத்தை அமெரிக்கா மீண்டும் ஒத்திவைத்துள்ளது.

எதிர்வரும் ஜனவரிமாதம் இக்கூட்டம் நடைபெறும் என்று பென்ரகன் செய்தித் தொடர்பாளர் நிக் கொல் மன் தெரிவித்தார்.

சதாம் கைதுசெய்யப்பட்ட பின்னர் ஈராக் புனரமைப்புப் பணிக்கான ஒப்பந்தங்களைப் பெறுவதில் பலநாடுகள் போட்டிபோடுகின்றன. குறிப்பாக ஈராக் போரை எதிர்த்த ஜேர்மனி, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகளும் புனரமைப்பு ஒப்பந்தத்தைப் பெறுவதில் முனைப்புக் காட்டுகின்றன.

பிரான்ஸ்,ஜேர்மனி,ரஷ்யா ஆகிய நாடுகள் ஈராக் தங்களுக்குத் தரவேண்டிய கடனை ரத்துச் செய்வதற்காகவே தமக்கு அந்நாட்டின் புனரமைப்பு ஒப்பந்தங்கள் வழங்கப்படவேண்டும் என்று அமெரிக்காவிடம் வலியுறுத்தியுள்ளன.

இதுகுறித்து மேற்படி நாடுகளுடன் பேச்சு நடத்தவென அமெரிக்க முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் ஐரோப்பாவுக்குச் சென்றுள்ளார். இவரது ஐரோப்பிய விஜயத்திற்கும் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதற்கும் எதுவித தொடர்பும் இல்லை என்று பென்ரகன் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். ஒப்பந்தகாரர்களின் கூட்டம் கடந்த 11ஆம் திகதி நடைபெறவிருந்தது. ஆனால், திடீரென அந்தக்கூட்டம் 19ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. இந்நிலையில் மீண்டும் அந்தக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

போரை எதிர்த்த ஜேர்மனி, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு புனரமைப்பு ஒப்பந்தங்களை வழங்கமுடியாது என்று ஜனாதிபதி புஷ் முதலில் அறிவித்திருந்தார். இந்த அறிவிப்பு சர்ச்சையைக் கிளப்பியிருந்தது.

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி உலகேஸ்வரன்

(நந்தாவில், கொக்குவில் - ஈசன்)

நந்தாவில் கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி உலகேஸ்வரன் நேற்றுமுன்தினம் 18.12.2003 வியாழக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் திலகவதியின் அன்புக் கணவரும் ஜெயதாரணி (தேசிய சேமிப்பு வங்கி, சுன்னாகம்), ஜெகனீவாசன் (A/L Commerce, கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சின்னத்தம்பி, சரஸ்வதி (செல்லாச்சி) ஆகியோரின் புதல்வனும் இரகுநாதன் (கனடா), ஞானசௌந்தரி (உடுவில்), பரமேஸ்வரன் (கனடா), ஜெகதீஸ்வரன் (சரஸ் புத்தகசாலை, யாழ்ப்பாணம்), சிவயோகநாதன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சாந்தமலர் (கனடா) கண்ணுத்துரை (சுதா புத்தகசாலை, கொக்குவில்), சுபத்திரா (கனடா), கந்தா (ஆசிரியை, கொக்குவில் இந்துக் கல்லூரி), ஜெயராணி (கனடா) ஆகியோரின் மைத்துனரும்,

கரம்பனைச் சேர்ந்த காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, விசாலாட்சி ஆகியோரின் மருமகனும் சோதிமதி (கொழும்பு), சரஸ்வதி (பிரான்ஸ்), துரைராசசிங்கம் (கொழும்பு), தனபாலசிங்கம் (பிரான்ஸ்), ரட்ணசிங்கம் (கோட்டக்கல்வி அதிகாரி, ஊர்காவற்றுறை), குலசிங்கம் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.12.2003) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நந்தாவில் அம்மன் வீதி, கோண்டாவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கண்ணுத்துரை (மைத்துனன்),
ஜெகதீஸ்வரன் (சகோதரன்).

*நந்தாவில் அம்மன் வீதி,*
*கோண்டாவில்.*
(26068)(24-12)

# பல்கலையில் கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம்,டிசெ.20

யாழ். பல்கலைக்கழக இளம் பொறியிலாளர் மன்றம் நடத்தும் 'இலங்கை -இனப்பிரச்சினைக்கான சம காலத்தீர்வு முயற்சியில் இந்தியாவின் நிலைப்பாடு' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக புவியியற் துறை மண்டபத்தில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் யாழ். பல்கலைக் கழக அரசறிவியற்றுறை விரிவுரையாளர் கே.ரி.கணேசலிங்கம் கருத்துரை வழங்குவார்.

(எ-8)

★ ★ ★

யாழ்ப்பாணம்,டிசெ.20

'வடபகுதிக் கடலில் இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினை - ஓர் நோக்கு' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு எதிர்வரும் 24 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு யாழ் பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். விஞ்ஞானச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி ஏ.சூசை ஆனந்தன் கருத்துரை வழங்குவார்.

(எ-8)

# கண்ணீர் அஞ்சலி



*இறப்பிட்டி ச... நிலையத் தலைவரும், சமூகசேவையாளருமான*

## சுப்பையா பரராஜசிங்கம் (அருமை)

*(உரிமையாளர், அருமை போசனசாலை, யாழ்.)*

அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பி.ரமேஷ்,
ரமேஷ் போட்டோ, புங்குடுதீவு-5.

89, பொற்பதி வீதி, கொக்குவில்.

# பதினோராம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 27 - 07 - 1951 | 20 - 12 - 1992 |



## திருமதி பிறைசூடி இராஜேஸ்வரி (வவா)

திதி: 20.12.2003

அன்னையில் கோயில் கண்டோம்
அன்பினில் வாழ்வு பெற்றோம்
கன்னலாய் கல்வி தந்தாய்
கருணையும் ஊட்டி வந்தாய்
தென்றலாய் வருடி நின்றாய்
தீயினில் போன காலம்
பதினொன்று ஆனதம்மா
அழுது உருகுகின்றோம்!

உங்கள் நினைவோடு நாம் வாழ்கின்றோம். இன்று உங்களை நினைத்து நல்லூரான் அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கணவர், பிள்ளைகள்,
சகோதரி, மருமகன்மார்,
பேர்த்தி.

62, செட்டித் தெரு,
நல்லூர்.
(26061)(35-12-16)







உதயன்

# தமிழர் தரப்பிலிருந்து வெளிப்படும் ஆதங்கம்

"ஈழத் தமிழர்களின் பிரச்சினைகளை பெரும்பான்மைக் கட்சிகள் தீர்க்கும் என்று இனியும் நம்புவதற்கு நாம் தயாரில்லை" - இப்படிக் கூறியிருக்கின்றார் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ்.

1983இல் ஈழத்தமிழர்களுக்கு எதிராகக் கொடூர இன வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்டபோது - அதை நியாயப்படுத்துவது போல - தமிழர்களின் அபிலாஷைகளுக்கு எதிரான வகையில் - ஆறாவது அரசமைப்புத் திருத்தம் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது.

பிரிவினைக்கு எதிராகச் சத்தியப்பிரமாணம் செய்ய வேண்டும் எனக் கட்டாயப்படுத்தியதன் மூலம் தமிழர்களை நாடாளுமன்றத்திலிருந்து வெளியேற்றுவதற்கு அத்திருத்தம் வகை செய்தது. அப்படி தமிழர்களை நாடாளுமன்றத்திலிருந்து கலைக்க வழி செய்த சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்காக பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இரண்டு பெரிய கட்சிகளும் ஒன்று சேர்ந்தன. அதுபோல இன்று தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறைக்கு அடிப்படையாகத் திகழும் பாதுகாப்பு அமைச்சைக் காப்பாற்றுவதற்காக ஆளும்கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் ஒன்றுபட்டிருக்கின்றார்கள். இந்தச் செயற்பாட்டின் மூலம் பெரும்பான்மைக் கட்சிகளின் சுயரூபம் வெளிப்பட்டுவிட்டது. இனிமேலும் இவர்களை நம்புவதற்கு நாம் தயாராக இல்லை. - இப்படி ரவிராஜ் எம்.பி.மேலும் கூறியிருக்கின்றார்.

நிதி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டின் மீது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு காட்டமாக எடுத்துரைத்திருக்கின்றார்.

அதுமட்டுமல்ல, வரவு - செலவுத்திட்டம் மீதான இறுதிவாக்களிப்பு நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சமயம் தமிழ்க்கூட்டமைப்பு எம்.பிக்கள் அதில் கலந்துகொள்ளாமல் நடுநிலை வகித்ததன் மூலம் தமது அரசியல்நிலைப்பாட்டையும் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.

விடுதலைப் புலிகளுடன் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே. முன்னணி அரசுக்கு இதுவரை காலமும் முண்டு கொடுத்து வந்தது தமிழ்க்கூட்டமைப்பு. எதிரணி வரிசையில் தமிழ்க்கூட்டமைப்பு எம்.பிக்கள் இருந்தாலும், அவர்களின் ஆதரவு தேவைப்படும் சமயத்தில் ரணிலின் அரசுக்குக் கிடைப்பது உறுதி என்று நன்கு தெரிந்திருந்ததால்தான் ரணிலின் அரசைப் பலவீனப்படுத்த எண்ணும் பல சக்திகள் தங்களின் முயற்சி வெல்லாது என்று உணர்ந்து இதுவரை காலமும் வாளாவிருந்தன.

நாடாளுமன்றத்தில் ரணிலின் அரசுக்கு, ஒரேயொரு பெரும்பான்மை ஆசனம் மட்டுமே உள்ளது. இருந்தபோதிலும், எதிரணியில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 15 எம்.பிக்களின் ஆதரவைத் தேவையான எந்தச் சந்தர்ப்பத்திலும் பெறக்கூடிய நிலையில் பிரதமர் ரணில் இருக்கின்றார் என்பதே அவருக்குத் தனிப்பலமாக விளங்கியது.

இப்போது, பட்ஜெட் வாக்கெடுப்பின்போது அரசுக்கு ஆதரவு வழங்கும்படி பிரதமர் மற்றும் அமைச்சர்கள் வற்புறுத்திக் கேட்டபோதும் கூட்டமைப்பினர் அதற்கு மறுத்துவிட்டனர்.

பட்ஜெட்டை ஆதரித்து வாக்களிக்க மறுத்தபோதிலும், அவர்கள் அதனை எதிர்த்தும் வாக்களிக்கவில்லை. வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் நடுநிலை வகித்ததன் மூலம், தற்போதைய அரசியல் விடயங்களை ரணிலின் அரசு கையாளும் முறை தொடர்பான தமது அதிருப்தியை அவர்கள் பிரதமர் ரணிலுக்கும் ஏனைய தலைவர்களுக்கும் தெளிவாகப் புரியவைக்கும் விதத்தில் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் சமாதான முயற்சிகள் தேக்கமடைந்திருக்கும் இன்றைய சூழ்நிலையில் அந்த முயற்சிகளை முன்னெடுப்பதில் அரசுத் தரப்பும் நிறைவேற்று அதிகாரத் தரப்பும் காட்டும் மெத்தனப்போக்குக்கு ஆட்சேபமும் ஆதங்கமும் தெரிவிக்கும் வகையில் தமிழ்க்கூட்டமைப்பு தனது செயற்பாட்டை வெளிப்படுத்தியிருக்கின்றது.

பட்ஜெட்டை எதிர்த்து வாக்களிக்காமல் இருந்ததன் மூலம் தற்போதைய சமாதான முயற்சிகளைத் தொடரும் எத்தனத்துக்கு வாய்ப்பளிக்கும் - ஆதரவு தரும் - சந்தர்ப்பம் வழங்கும் - ஒரு நிலைப்பாட்டையும் தமிழ்க் கூட்டமைப்பு எடுத்துக் காட்டியிருக்கின்றது.

இந்த வெளிப்படுத்தலின் தாற்பரியத்தைப் புரிந்து கொள்ளும் பொறுப்பு பெரும்பான்மைக் கட்சிகளின் தலைவர்களுக்கு உரியது.

# யாழ். பல்கலையில் சட்டத்துறை அடுத்த வருடம் முதல் இயங்கும்

யாழ்ப்பாணம்,டிசெ.20

யாழ். பல்கலைக்கழகத்தில் சட்டத்துறை அடுத்த வருடம் முதல் இயங்கவிருக்கின்றது.

சட்டபீடம் ஒன்றை ஆரம்பிக்க அனுமதிக்கும்படி பல்கலைக்கழக நிர்வாகமும், சட்டத்துறை சார்ந்தவர்களும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவைக் கோரி வந்தனர்.

இதனையடுத்து, சட்டத்துறையை ஆரம்பிக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இந்தத்துறை அடுத்த வருடம் முதல் இயங்க ஆரம்பிக்கின்றபோதும், அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் நடைபெறும் ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையிலிருந்தே மாணவர்கள் அனுமதிக்கப்படுவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் துறைக்கான ஆளணியைத் தெரிவுசெய்யும் பணிகளும் மற்றும் அத்துறையை இயக்குவதற்கான ஏற்பாட்டுப் பணிகளும் விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன என்றும் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் தெரிவித்தார். (எ-3)

# பதிவுத் திருமணம் முடிந்த பின்னர் தாலிகட்ட மறுத்தவருக்குத் தண்டனை!

யாழ்ப்பாணம்,டிசெ.20

நான் பதிவுத் திருமணம் செய்த யுவதிக்கு தாலி கட்ட மறுத்தார் இளைஞர் ஒருவர். இது தொடர்பான வழக்கில் மேற்படி யுவதிக்கு 4 லட்சம் ரூபாவை நஷ்டஈடாகச் செலுத்துமாறு இளைஞருக்கு யாழ். நீதிமன்றம் உத்தரவிட்டது.

சாவகச்சேரி, மட்டுவில் வடக்கைச் சேர்ந்த இளைஞர் ஒருவருக்கும் உரும்பிராய்ப் பகுதியைச் சேர்ந்த யுவதி ஒருவருக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. கொழும்பில் பதிவுத் திருமணமும் இடம்பெற்றது. அன்றிலிருந்து சுமார் 45 நாள்களின் பின்னர் யாழ்ப்பாணத்தில் சம்பிரதாயத் திருமணத்தை நடத்துவது என்றும் பெரியவர்களால் முடிவுசெய்யப்பட்டது. திருமண அழைப்பிதழ்களும் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டன. ஆனால், திடீரென்று மணப்பெண்ணைத் தனக்குப் பிடிக்கவில்லை என்று கூறிய மணமகன், திருமணத்துக்கு மறுத்தார். தன்னைவிட மணப்பெண் நிறம் குறைவாக உள்ளதாக அவர் காரணம் கூறினார். இருவரின் பெற்றோர்களும் பெரியவர்களும் அவரைத் திருமணத்துக்கு இணங்கவைக்கப் பெரும்பாடுபட்டனர். ஆனால், முயற்சிகள் தோல்வியடைந்தன.

இந்நிலையில், தனது பதிவுத் திருமணத்தை ரத்துச் செய்யும்படியும் தனக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்கு நஷ்டஈடு பெற்றுத் தரும்படியும் கோரி அந்த யுவதி வழக்குத் தொடர்ந்தார். இந்த வழக்கின் விசாரணை யாழ். நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

தன்னைவிட நிறம்குறைவான பெண்ணுடன் சேர்ந்து வாழ முடியாது என்றும் - தனது மறுப்பிற்காக எந்தத் தண்டனை தந்தாலும் அதனை ஏற்கத் தான் தயார் என்றும் -

விசாரணையின் போது சம்பந்தப்பட்ட இளைஞர் தெரிவித்தார்.

இதனையடுத்து, பதிவுத்திருமணத்தை ரத்துச்செய்து தீர்ப்பளித்த நீதிவான் இ.த.விக்னராஜா, பாதிப்படைந்த யுவதிக்கு 4 லட்சம் ரூபாவை நஷ்டஈடாக வழங்கும்படி இளைஞருக்கு உத்தரவிட்டார். (ஓ-5)

# புனரமைக்கப்படும் 3 தபாலகங்களும் ஜனவரி 14ஆம் திகதி திறந்துவைப்பு

யாழ். குடாநாட்டில் தற்போது விரிவுபடுத்தப்பட்டு வரும் மூன்று தபாலகங்களும் ஜனவரி 14ஆம் திகதி உத்தியோகபூர்வமாகத் திறந்துவைக்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு அஞ்சல் அதிபதி நாயகம் தமக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார் என யாழ்.மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் ச.சிவராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் மேலும் தெரிவித்ததாவது:-

அடுத்தமாதம் 14ஆம் திகதி முற்பகல் 11.30 மணிக்கு சாவகச்சேரி தபாலகமும், அன்றைய தினம் பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பிரதம தபாலகமும், மாலை 5.30 மணிக்கு காரைநகர் தபாலகமும் கொழும்பு அஞ்சல் திணைக்கள அதிகாரிகளால் திறந்துவைக்கப்படும்.

மேற்படி மூன்று தபாலகங்களின் விரிவுபடுத்தல் பணிகளில் 90 சதவீதமானவை பூர்த்தி அடைந்துள்ளன. இம்மாத இறுதிக்குள் எஞ்சிய வேலைகளும் பூர்த்தியடைந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

யாழ். தபாலகக் கட்டடத் தொகுதியில் அஞ்சல் பிராந்திய தகவல் திணைக்களம், பிராந்திய நிர்வாக அலுவலகம் மற்றும் பிராந்திய அஞ்சலதிபதி அலுவலகம் என்பன இயங்கும். இவையும் அன்றையதினம் உத்தியோகபூர்வமாகத் திறந்துவைக்கப்படும்.

மேற்படி திணைக்களங்களுக்கான தளபாடம் மற்றும் ஏனைய வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான ஒருதொகை நிதியினை அஞ்சல் அதிபதி நாயகம் ஒதுக்கீடு செய்துள்ளார் என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

## நாளை

மார்கழி 06
ஞாயிற்றுக்கிழமை
(21.12.2003)
திதி : திரயோதசி
முன்னிரவு 8.25 வரை
நட்சத்திரம் : விசாகம்
காலை 7.09 வரை.
அனுசம்
வைகறை 5.30 வரை.
சுபநேரம்: 9.24-10.54
ராகுகாலம்: 4.54-6.24
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

நீ தேடுகின்ற ஆத்மா உண்மையாகவே நீதான்.

# நாவலர் நினைவு முத்திரையை மீண்டும் வெளியிட்டு உதவுக!

## சங்குவேலி இந்துமன்றம் கோரிக்கை



யாழ்ப்பாணம்,டிசெ.20

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் நினைவு முத்திரையினை மீண்டும் வெளியிடுமாறு சங்குவேலி இந்துமன்றம், இந்துசமய விவகார அமைச்சிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுகுறித்து மேற்படி மன்றம் இந்துகலாசார அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சைவத், தமிழ் மறுமலர்ச்சியின் தந்தையாகவும், ஐந்தாம் குரவராகவும், தேசிய வீரராகவும் போற்றப்படும் நல்லூர் நாவலர் பெருமான் நினைவாக இற்றைக்கு சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஐந்துசதம் பெறுமதியான முத்திரை ஒன்று வெளியிடப்பட்டிருந்தது. அதுபின்னர் வெளியிடப்படவில்லை. இத்தகைய ஒரு பெரியாரின் முத்திரையை மீண்டும் வெளியிட ஏற்ற நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்று அதில் உள்ளது.

மேற்படி கோரிக்கைக் கடிதத்துடன் முன்னர் வெளியிடப்பட்ட முத்திரையும் ஒன்று இந்துகலாசார அமைச்சருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக இந்துமன்ற செயலாளர் ப.மகேந்திரதாசன் தெரிவித்தார். (எ-15)

# வயல்களில் நீர்மட்டம் குறைகிறது: நெற்செய்கை பாதிப்புறும் அபாயம்!

## விவசாயிகள் தரப்பில் கவலை தெரிவிப்பு

வலிகாமம் மேற்குப் பகுதியில் உள்ள பெரும்பாலான நெல் வயல்களில் நீர்மட்டம் குறைந்து வருகின்றது. இதனால், நெற்செய்கை பாதிப்புறும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக வட்டுக்கோட்டை, சங்கரத்தை, அராலி, சுழிபுரம், செட்டியார் மடம் போன்ற பகுதிகளில் உள்ள வயல் நிலங்களில் நாளுக்குநாள் நீர்மட்டம் குறைந்து வருகிறது.

இந்தப் பகுதிகளில் உள்ள குளவாய்க்கால்களுக்கு உரிய வகையிலான தடுப்புப்பலகைகள் பொருத்தப்படவில்லை. இதனால், மழைநீர் வீணே கடலில் கலக்கின்றது என்றும் -

இவ்வாறு வயல்களில் தேங்கும் வெள்ளமும் கடலைச் சென்றடைவதால் நெல்விளைச்சல் கேள்விக்குறியாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்றும் -

விவசாயிகள் தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில், தென்மராட்சிப் பகுதியில் போதிய மழை இல்லாததால் காலபோக நெற்செய்கை பாதிக்கப்படலாமென இப்பகுதி நெற்செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

காலம் தாழ்த்தி மழை பெய்ததால் நெல்விதைப்பு தாமதமாக நடைபெற்றது என்றும் -

இந்த வயல்களில் நீர் இல்லாததால் பயிர்கள் வாடும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் - அவர்கள் தரப்பில் மேலும் கூறப்பட்டது. (எ-117-161)





## பிரதான போதனைகள்

▲ பெண் பிள்ளைகளுக்கு சுயநம்பிக்கை தேவை. அப்பொழுது மற்றவர்கள் கேலி செய்யமாட்டார்கள்.
▲ பெண்பிள்ளைகள் சுயநம்பிக்கையுடன் இருப்பதோடு, கூட்டாகச் சேர்ந்தால் எந்தப் பிரச்சினையையும் தீர்த்துவிடலாம்.
▲ ஆண்பிள்ளைகள் தங்களைக் கேலி பண்ணுகிறார்கள் என்பதற்காக பெண்பிள்ளைகள் பாடசாலைக்குப் போகாமல் இருத்தலாகாது. அவர்கள் ஒன்றுபட்டு பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் வேண்டும்.

பிள்ளைகளுக்கு தங்களைப் பற்றிய நல்ல அபிப்பிராயம் ஏற்படுதல் வேண்டும். பிற்காலத்தில் அவர்கள் சுயநம்பிக்கையுடனும் சுயகௌரவத்துடனும் வாழ்வதற்கு அது அத்திவாரமாக அமையும். கேள்வி கேட்கும் பழக்கமுள்ள பிள்ளைகளும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் திறனுடைய பிள்ளைகளும் பிற்காலத்தில் சுயநம்பிக்கையுள்ளவர்களாகவும், கஷ்டமான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் திறமையுள்ளவர்களாகவும் திகழ்வார்கள்.

சுயநம்பிக்கையை வளர்ப்பதற்குத் தேவையான ஊக்குவிப்பையும் ஆதரவையும் பல பிள்ளைகள் பெறுவதில்லை. தங்களைக் குறைவாக மதிக்கிற சூழலில் அதிகமான பெண்பிள்ளைகள் வளர்கிறார்கள். அதனால் தாங்கள் பலவீனமானவர்கள் எனவும் ஆண்பிள்ளைகளைப் போல் திறமையுள்ளவர்களல்ல எனவும் பெண்பிள்ளைகள் எண்ணுகிறார்கள். இதன் விளைவாகப் பெண்பிள்ளைகளை குறைந்தவர்கள் என எண்ணும் மனப்பாங்கை ஆண்பிள்ளைகள் வளர்க்கிறார்கள்.

கேலிக்குப் பயப்படுவதனால் பெண்பிள்ளைகளின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்படுவதோடு அவர்களின் கல்வியும் பாதிக்கப்படுகிறது.

பாடசாலைக்குப் போகும் வழியில் ஆண்களின் தொல்லைகளுக்காளாக நேரிடும் என்ற காரணமும் பெண்பிள்ளைகள் தமது கல்வியை இடையில் நிறுத்துவதற்கு ஒரு காரணம். பாடசாலை தூரத்தில் இருந்தால் இது நடப்பது அதிகமாகவுள்ளது.

கேலியையும் சண்டித்தனத்தையும் சமாளிப்பதற்கு பெண்பிள்ளைகள் சுயநம்பிக்கையையும் மனோபலத்தையும் வளர்த்தல் வேண்டும். கூட்டாகச் செயற்படுவதே பெண்பிள்ளைகளுக்குச் சிறந்த தற்பாதுகாப்பு.



அனுசரணை: unicef

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு
அறை எண் 30,
யாழ். போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## திருமண சேவை

திருமண வைபவத்திற்கு ஏற்ற 2003 மொடல் கார் (**Perl Silver** நிறமுடையது) மற்றும் **AC** வான்களும் நாள் கணக்கிற்கு வாடகைக்கு உண்டு. தொடர்பு: **Joseph**, இல.72, றக்கா வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் (பொஸ்கோ பாடசாலைக்கு அண்மையில்). T.P.: 7080, 2597 (25903)

1965 ஆம் ஆண்டு, அச்சுவினி 2இல் செவ்வாய், சுவிஸ் பிரஜாவுரிமையுடைய, யாழ். வந்துள்ள மணமகனுக்கு அழகான மணமகள் தேவை. படத்துடன் தொடர்புகொள்ளவும். சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. துர்க்கா திருமண சேவை, இல.101/1, ஓட்டு மடம் வீதி, சிவலிங்கப்புளியடி (K.K.S. வீதி), யாழ்ப்பாணம். (26039)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1955 - எக்கவுண்டன், 1975 - சிவில் எஞ்சினியர், 1975 - MBBS டாக்டர், 1972 - ஆசிரியர், 1972 - கொம்பியூட்டர் லெக்சரர் ஆகியவர்களுக்கு அழகிய, பொருத்தமான மணமகள்கள் தேவை. தொடர்பு: கிருஷ்ணா திருமண சேவை, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (26057)

## விற்பனைக்கு

கலர் மீன்கள், மீன் தொட்டிகள், குருவி இனங்கள், கூடுகள், பொமேரியன் நாய்கள் என்பன விற்பனைக்கு உண்டு. 55 A, அரசடி வீதி, தட்டா தெருச் சந்தி, யாழ்ப்பாணம்.(26028)

சொற்ப காலம் பாவித்த YAMAHA - 50 (Y.C.L.S. மொடல்) சதுர லைட் மோட்டார் சைக்கிளும் A-35 சிமன்ஸ் கையடக்கத் தொலைபேசியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: சனி பி.ப. 2 மணியில் இருந்து ஞாயிறு வரையும் பார்வையிடலாம். M.A.கலிஸ்ரா, இல.28, மத்தியுஸ் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (26077)

## மலரும் நினைவுகள்

மூத்த எழுத்தாளர் "வரதர்" எழுதிய "மலரும் நினைவுகள்" இரண்டாம் பதிப்பு வெளிவந்துள்ளது. 60-70 ஆண்டுகளுக்கு முன்பு யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கைமுறை, பழக்க வழங்கங்கள் எப்படியிருந்தன? சுவையாகப் படியுங்கள். விலை ரூபா 150/-. எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். தொடர்பு: 226, கே.கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.(சி-32144)

## கல்வி

தரம் 6,7,8 எல்லாப் பாடங்களும் ஆங்கிலத்தில் ஓய்வுபெற்ற ஆசிரியரால் கற்பிக்கப்படும். **Visit Respectable Homes.** 33, பலாலி வீதி (இலுப்பையடிச்சந்தி தெற்கு), யாழ்ப்பாணம். (25787)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1973இல் பிறந்த, சதய நட்சத்திரம், 8 இல் செவ்வாய், ஜேர்மனியில் பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு அழகான மணமகள் தேவை. விள.இல. 2123 மே/பா. உதயன். (26017)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima, Broiler குஞ்சுகள் ரூபா 42/-, தொகைக்கு ரூபா 40/, அதிவிசேட பேட்டுக் குஞ்சுகள் 62/- 22.12.2003 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும். பருத்தித்துறை கிளையிலும் பெற்றுக் கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வரை), முத்திரை சந்தையடி, நல்லூர். (26014)

## மலசலகூடம் நிறுவ ஏற்பாடு

கோண்டாவில், புதுக்கோட்டைப் பகுதியில் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் வசித்துவரும் குடும்பங்களுக்கு அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் உதவியுடன் மலசல கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. (எ-7)

## மருதங்கேணியில் தேவைகளை இனம்காண நாளை கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.20

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணிப் பகுதியில் மேற்கொள்ளவேண்டிய புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் மீள் குடியமர்வு தொடர்பான தேவைகளை இனங்காணும் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மருதங்கேணிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். அரச அதிபர் செயத்மநாதன் தலைமையில் நடைபெறும் இந்தப் பயிற்சிப் பட்டறையில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், திணைக்களத் தலைவர்கள், இந்து கலாசார அமைச்சர், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

(எ-5)

## புனரமைப்புப் பணிகள் இடைநிறுத்தம்

வரணி,டிசெ.20

புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் மீளக்குடியமர்வு அமைச்சின் விசேட சட்டத்தின்கீழ் நடைபெற்றுவரும் புலோலி - வரணி பாலத்தின் புனரமைப்புப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

பாலத்தின் ஊடாக வெள்ளம் பாய்வதே இதற்குக் காரணம் எனக் கூறப்பட்டது. (எ-170)

---

We Serve

## இலவச நீரிழிவு, இரத்த அழுத்த மருத்துவ முகாம்

**மானிப்பாய் பரீஷ் லயன்ஸ் கழகம் 21.12.2003 ஞாயிறு காலை 9.00மணிமுதல் 1.00 மணிவரை மானிப்பாய் மகளிர் கல்லூரியில் இலவச மருத்துவ முகாம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.**

**இதில் பயன்பெற விரும்புபவர்களைக் கலந்துகொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

(25746)(34-24-12) **- மானிப்பாய் பரீஷ் லயன் கழகம்.**

---

## கண்ணீர் அஞ்சலி

யாழ். நாயன்மார்கட்டு ஸ்ரீ இராசராசேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள் ஆலய பரிபாலன சபை உறுப்பினரான

### பொ.ஐயாத்துரை (துரைசிங்கம்)

அவர்கள் 17.12.2003இல் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு, எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பரிபாலன சபையினர்,
யா/நாயன்மார்கட்டு,
ஸ்ரீஇராசராசேஸ்வரி(பேய்ச்சி) அம்பாள்.ஆலயம்.

(26053)(35-12-24)

---

டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை,
கிளிநொச்சி

## பணிநிலை வேண்டுகை

கீழ் குறிப்பிடப்படும் பதவிகளுக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தங்களால் சுயமாகத் தயாரித்த விண்ணப்பங்களை "பணிப்பாளர்" டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை, கிளிநொச்சி என்னும் முகவரிக்கு 25.12.2003 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரிலோ அல்லது தபாலிலோ அனுப்பிவைத்தல்வேண்டும்.

**1) தாதிகள், மருந்தாளர்:-**
வயதெல்லை:- **18-26**
தகைமை:- **க.பொ.த. (சா/த) இல் விஞ்ஞானம், ஆங்கிலம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.**

**2) எழுதுநர்:-**
வயதெல்லை:- **20-26**
தகைமை:- **க.பொ.த. (சா/த) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.**

**3) தட்டெழுத்தாளர்:-**
வயதெல்லை:- **20-26**
தகைமைகள்:- **க.பொ.த. (சா/த) சித்தியுடன் ஆங்கிலம், தமிழ் தட்டெழுத்தில் இரண்டு வருட முன்னனுபவம் இருத்தல் வேண்டும் (கணனி இயக்குநர் விரும்பத்தக்கது).**

**4) பரிசாரகர்:-**
வயதெல்லை:- **23 மேல்**
தகைமைகள்:- **க.பொ.த. (சா/த) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.**

**5) சுத்திகரிப்பாளர்:-**
வயதெல்லை:- **25 இற்கு மேல்**
தகைமை:- **8 ஆம் ஆண்டு கற்றிருத்தல் வேண்டும்.**

**7) காவலாளி:-**
வயதெல்லை:- **23-35**
தகைமை:- **8 ஆம் ஆண்டு கற்றிருத்தல் வேண்டும்.**

*குறிப்பு:* 1. தங்குமிட வசதிகள் செய்துகொடுக்கப்படும்.
2. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
3. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
4. மேற்குறிப்பிட்ட பணிக்கு முன்னனுபவம் கொண்டவர்கள் விரும்பத்தக்கது.

**பணிப்பாளர்,**
**டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை,**
**கிளிநொச்சி.**

(C32/140)(34-24-

---

## விநாயகர் விக்கிரகத்தை காணவில்லை

**சண்டிலிப்பாய் வடக்கு, அரசடி சித்திவிநாயகர் ஆலயத்திலிருந்த எழுந்தருளி விநாயகர் விக்கிரகம் 15.12.2003 திங்கட்கிழமை இரவு முதல் காணாமற்போய்விட்டது.**

**இது பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரிக்கு அறியத்தரவும்.**

மு.ஜயந்தி
சண்டிலிப்பாய் வடக்கு.
அரசடி சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையினர்.
சண்டிலிப்பாய். (26056) (25-12-17)

---

## கண்ணீர் அஞ்சலி

*எமது பாடசாலை ஆசிரியர்* **திரு.அ.செ.ற.பற்றிக்** *அவர்களின் அன்புத் தந்தையார்*

### P.L.பற்றிக்

*(ஓய்வுபெற்ற மேலதிக அரச அதிபர், யாழ்ப்பாணம்)*

அவர்கள் கர்த்தருக்குள் நித்திரை அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் செலுத்தி ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கொழும்புத்துறை இந்து ம.வி.
யாழ்ப்பாணம். (26555) (24-12) **- ஆசிரியர் கழகம்.**

---

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட டாக்டர்கள் சிபார்சு செய்வது

**றோயல் குளுக்கோஸ்**

100/% சுத்தமானது!

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல் றோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!

Royal Industries, Colombo. ☎.0112334603




ஏக விநியோகத்தர்கள்:

**சிவா நறுமணப் பூங்கா**

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். ☎: 021 222 2567

சத்திரத்துச் சந்திக்கு அருகில்

---

## வரவு செலவுத் திட்டம் - 2004

(255 ஆம் அத்தியாயமான) நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் 1979 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட 179(3) ஆம் பிரிவின் பிரகாரம் நிர்வாகக் கட்டளை இலக்கம்: 05, 10.12.2003 ஆம் திகதிய தீர்மானத்தின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட 2004 ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டம் 19-12-.2003 ஆம் திகதி தொடக்கம் ஏழு(7) நாள்களுக்கு அலுவலக நேரத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.
**18.12.2003** (C32135)(34-12-24)

மு.செ.சரவணபவ,
செயலாளர்,
நகரசபை சாவகச்சேரி.

---

## விசேட விலைக்கழிவு

**கருமாரி மோட்டோஸ்**

❖ லான்ட் மாஸ்டர் ❖ வாட்டர்பம்
❖ ஜெனரேட்டர் ❖ ஓட்டோ
❖ மீன்பிடி இயந்திர உதிரிப்பாகப் பாவனையாளர்களுக்கும்.

எமது வாடிக்கையாளர்களுக்கும்

**விசேட விலைக்கழிவு**

**01.12.2003 முதல் 31.12.2003 வரை**

இல. 281 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணத்தில்
இயங்கும்
எமது நிறுவனத்தின்

20 ஆவது ஆண்டு நிறைவு 10.12.2003 இல் வருகின்றமையால் இந்த விலைச் சலுகைகளை வழங்குகின்றோம் என்பதை அறியத்தருவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

(C/31553)(14-12-24) **- நிறுவனத்தினர்.**

# ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற எதற்கும் துணிந்துவிட்ட ஜே.வி.பி

**ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற ஜே.வி.பி. எதனையும் செய்யத் தயாரான நிலையிலுள்ளது. முதலாளித்துவக் கட்சியான ஸ்ரீல.சு.கட்சியுடன் கூட்டுச் சேர முண்டியடிக்கிறது. ஜே.வி.பி. - ஸ்ரீல.சு.கட்சி உறவு முயற்சிகள் குறித்த பிரபல பத்திரிகையாளர் சுனந்த தேசப்பிரியவின் கருத்துக்களின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

ஜே.வி.பி. இன்னமும் மாக்ஸிஸ, லெனினிஸ, சமதர்மக் கட்சியாகவே தன்னைக் காட்டிக் கொள்கின்றது. ஆனால், எல்லே குணவன்ஸ தேரரோடு மேடையேறும் விமல் வீரவன்ஸவின் வாயிலிருந்து மாக்ஸிஸவாத அடுக்குத் தொடர்களோ அன்றி அது பற்றிய சிந்தனைகளோ வெளிப்படுவதில்லை. அது பற்றிய அடுக்குமொழிகள் லால்காந்த போன்ற தொழிற்சங்க அமைப்புக்களின் தலைமைப் பதவி வகிக்கும் ஜே.வி.பியின் அரசியல் தலைவர்களிடமிருந்தே வெளிப்படுகின்றன.

ஜே.வி.பியினரால் மேற்கொள்ளப்படவுள்ள கூட்டு இணக்கங்கள் மாக்ஸிஸ அல்லது லெனினிஸத்தின் அடிப்படையிலா என்பது பற்றி இதுவரையில் எதுவிதமான பகிரங்க அரசியல் அறிக்கைகளும் வெளியிடப்படவில்லை. லெனின் முதல் மாஓசேதுங் வரையிலான சகல மாக்ஸிஸ அரசியல் தலைவர்களாலும் முதலாளித்துவ அரசியல் கட்சிகளுடனான இணைப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட சகல சந்தர்ப்பங்களும் அது பற்றிய அவர்களது கருத்துக்கள் முன்னதாகவே விளக்கப்பட்டுள்ளன.

எப்போதும் மாக்ஸிஸவாத அரசியல் கட்சிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ள, முதலாளித்துவ அரசியல் கட்சிகளுடனான கூட்டு இணக்கங்கள், தமது செயற்பாடுகளுக்கான உபமார்க்கமாகவே கருதப்பட்டுள்ளன. தந்திரமிக்க திட்டங்களாக அவை கருதப்படவில்லை. அதாவது, முதலாளித்துவ அரசியல் கட்சிகளோடு, மாக்ஸிஸவாத அரசியல் கட்சிகளால் மேற்கொள்ளப்பட்ட கூட்டு இணைப்புக்கள் தற்காலிகமானவையாகவே கருதப்பட்டன.

### முதலாளித்துவ கட்சிகள்

முதலாளித்துவ அரசியல் கட்சிகள் எத்தகைய நிறங்களில் அறிமுகமாகியிருந்தாலும் அவற்றின் நோக்கங்கள் ஒன்றாகவே இருந்தன. அதாவது, முதலாளித்துவக் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்துவதையே நோக்காகக் கொண்டிருந்தன. சமதர்மவாதக் கட்சியொன்று முதலாளித்துவக் கட்சியொன்றோடு தொடர்ந்து செயற்படமுடியாமைக்கு இதுவே காரணமாகும்.

புரட்சிவாத, சமதர்மவாத, மாக்ஸிஸவாதிகள் முதலாளித்துவக் கட்சியினரோடு இணைய முற்படுவது, முதலாளித்துவ ஜனநாயகத்தை வெற்றிகொள்வதன் மூலம் தாம் வெற்றியடையும் நோக்கிலேயேயாகும். ஆயினும், இத்தகைய சகல சந்தர்ப்பங்களின்போதும், கூட்டு இணைப்புக்கள் தற்காலிகமாகி அந்தக் கட்சிகள் இரண்டில் ஒரு கட்சி வெற்றிபெறுகிறது.

ஸ்ரீலங்கா அரசியலில் சமதர்மவாதத்தைப் புகுத்துவதே ஜே.வி.பியின் விருப்பமாகும். அவர்களது நிறம் சிவப்பு. அரிவாளோடு சுத்தியலையும் தமது சின்னமாகக் கொண்டுள்ளனர். ஜே.வி.பி. உலகை மாக்ஸிஸ வாதக் கண்களைக் கொண்டே நோக்குகிறது. இத்தகைய ஜே.வி.பி., இச்சந்தர்ப்பத்தில் ஸ்ரீல.சு.கட்சி போன்ற கட்சியோடு கூட்டுச் சேர முனைவதன் அர்த்தமென்ன?

### விளக்கமில்லாத செயற்பாடு

பகிரங்கமான பேச்சுகளிலோ நாடாளுமன்ற விவாதங்களின்போதோ ஜே.வி.பி. சார்புப் பத்திரிகையிலோ வேறு இணைந்த கலந்துரையாடல்களின்போதோ அவர்கள் கொண்டுள்ள அந்த அரசியல் நிலைப்பாடுகள் வெளிப்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. ஸ்ரீல.சு.கட்சியோடு கூட்டுச் சேர்வதற்கான அவர்களது பிரயாசையில் சமதர்மவாதத்தின் பங்களிப்பு ஏற்றும் சமுதாயத்தில் எத்தகைய கோணத்தில் செயற்படவுள்ளனர் என்பதற்கான விளக்கங்கள் முன்வைக்கப்படவில்லை. தமது இச்செயல்கள் மூலம் அவர்கள் வெறும் காட்சிப் பொருளாகவே சமதர்மவாதப் புரட்சியைக் கைக்கொண்டுள்ளார்கள் என்று கருதவேண்டியே உள்ளது. அதாவது, மாக்ஸிஸவாதத்திலிருந்தும் வெகு தூரம் விலகியுள்ளதாகவோ அல்லது தமது அரசியல் கொள்கை விளக்கங்களை மூடி மறைக்கும் தந்திரத்தைக் கையாள்வதாகவோ கருத வேண்டியுள்ளது.

### தேசப்பற்றாளர் அமைப்பு

இன்றைய ஜே.வி.பியின் அரசியல் போக்கு இவ்விரு காரணங்களையும் உள்ளடக்கிய ஒன்றாகவே தோற்றமளிக்கிறது. ஸ்ரீல.சு.கட்சி - ஜே.வி.பி. இடையிலான கூட்டிணைப்பைத் தேசப்பற்றாளர் அமைப்பின் ஒரு பகுதியாகவே ஜே.வி.பி. கருதுகிறது. தேசப்பற்றாளர் அமைப்பின் நிறம் சிவப்பல்ல, மஞ்சள் நிறமாகும். அதன் சின்னம் அரிவாளும் சுத்தியலும் அல்ல; பௌத்த தர்மசக்கரமாகும். அதன் கொள்கை நாடு பிரிக்கப்படுவதைத் தடுப்பதேயாகும். முதலாளி வர்க்கத்தைச் சுரண்டும் கொள்கையை அதுகொண்டிருக்கவில்லை.

ஐ.தே.முன்னணி அரசோடு இணக்கம் காண்பதற்கான சுயமான யோசனை ஜனாதிபதியால் நாட்டுமக்களிடம் வெளியிடப்பட்டது. அது பற்றிய கலந்துரையாடல்களின் விவரங்களும் அரச ஊடகங்களில் இடம்பெற்றன. இன்னமும் அக்கலந்துரையாடல்கள் தொடர்கின்றன. ஆனால், ஜே.வி.பியுடான கூட்டிணைப்புப் பற்றிய செயற்பாடு எத்தகையது என்பது பற்றி ஜனாதிபதியிடமிருந்தோ ரில்வின் சில்வாவிடமிருந்தோ இதுவரையில் கருத்தெதுவும் வெளியிடப்படவில்லை.

### முக்கிய கோரிக்கை

இதேவேளை, ஜே.வி.பி. மற்றும் தேசப்பற்றாளர் அமைப்பினால் முக்கிய கோரிக்கை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் அமைப்பினால் முன்வைக்கப்பட்ட யோசனைகள் பேச்சுகளிலிருந்து தவிர்க்கப்படவேண்டும் என்பதே அக்கோரிக்கையாகும். நோர்வே குழுவினர் சமாதானச் செயற்பாடுகளிலிருந்து நீக்கப்படவேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டது. இக்கோரிக்கைகள் ஏற்கனவே நிராகரிக்கப்பட்டுள்ளன. பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான இணக்கப்பாடு குறித்த யோசனைகளில் நோர்வேயின் உதவியுடன சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கும், விடுதலைப் புலிகள் அமைப்போடு பேச்சுக்களை மேற்கொள்வதற்கும் ஜனாதிபதி எழுத்து மூலமான ஆலோசனையைத் தெரிவித்துள்ளார்.

### சமாதான முயற்சியில் கருத்து வேறுபாடு

சமாதானச் செயற்பாடுகள் சம்பந்தமாக ஜே.வி.பி. கொண்டுள்ள கருத்துக்களுக்கும், ஜனாதிபதி கொண்டுள்ள கருத்துக்களுக்கும் இடையில் எதுவிதத் தொடர்புகளையும் காண முடியவில்லை. இத்தகைய நிலையில், ஜனாதிபதியைத் தம்பக்கம் ஈர்க்கும் தேசப்பற்றாளர் அமைப்பின் முயற்சி எவ்வாறு சாத்தியமாகும்? ஸ்ரீல.சு.கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் தேவைப்பட்டிருந்த, சமாதானச் செயற்பாட்டைத், திசைதிருப்பும் தொடர் முயற்சியும் செயலிழந்துள்ளது. அமைச்சுக்களைக் கைப்பற்றிய பின்னர் ஜனாதிபதியின் நிர்வாகத்திலும் கூட சமாதான முயற்சியைத் திசைதிருப்பும் செயற்பாடு கூட முடங்கியே உள்ளது. தற்போது சமாதானப் பேச்சுக்கள் இடம்பெறவில்லை என்பது உண்மைதான். ஆயினும், களத்தில் விடுதலைப் புலிகளுக்கும் பாதுகாப்புப் படைகளுக்கும் இடையிலான தொடர்புகள் அவ்விதமே உள்ளன. வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகளின் மாவீரர் தின நிகழ்வுகளும் ஜனாதிபதியின் நிர்வாகத்தின் கீழ் பாதுகாப்பு அமைச்சு உள்ள வேளையிலேயே நடந்து முடிந்துள்ளன. பொங்குதமிழ் நிகழ்வொன்றுக்குக்கூட தடையிருக்காது என்பதும் நிச்சயமே.

ஸ்ரீல.சு.கட்சி - ஜே.வி.பி. இடையிலான கூட்டின் பொருளாதார ஒழுங்குகளும் 1994 - 2000 வரையிலிருந்துள்ள ஒழுங்குக்கு அமைய மாற்றமடைவதற்கான சாத்தியமும் இல்லை. ஏனெனில், ஸ்ரீல.சு.கட்சியானது உலக மயமாக்கலின் செயற்பாடுகளுக்கும் கட்டுப்பட்ட முதலாளித்துவ பொருளாதார முறைமையை ஏற்றுக்கொண்டுள்ள கட்சியாக உள்ளதே காரணமாகும்.



### நோக்கம்

அவ்வாறாயின், உருவாக்கப்படவுள்ள கூட்டிணைப்பின் நோக்கமும் அதன் செயற்றிட்டங்களும் எதைக் கொண்டுள்ளன?

சிலவேளைகளில் விடுதலைப் புலிகள் அமைப்பின் யோசனைகளுக்கு நிகரான வேறொரு முக்கியமான முடிவாகக் கூட்டு அரசு அமையக்கூடும் என்பதே இதற்குப் பதிலாகும். அத்தகைய கூட்டு அரசொன்றின் கீழ் செயற்படுத்தப்படும் பொருளாதார, அரசியல், சமூக வியூகங்களைக் கொண்ட நடைமுறைச் செயற்பாடுகள் எவ்வாறு அமையக்கூடும்?

சமாதானம், பொருளாதாரம் மற்றும் சிறந்த நிர்வாகம் போன்ற வியூகங்கள் சம்பந்தமாக அவர்களால் உருவாக்கப்படும் இணைந்த முடிவுகள் இருக்குமாயின் அவற்றைத் தெரிந்து கொள்ளும் உரிமை இந்நாட்டு மக்களுக்குண்டு.

**சரா**

மறுபக்கத்தில், ஸ்ரீல.சு.கட்சியைப் போன்றே ஜே.வி.பி. தலைவர்களும் தத்தமது கட்சி உறுப்பினர்களின் அதிகபட்ச எதிர்பார்ப்புகளுக்காகவே இக்கூட்டு மேற்கொள்ளப்படவேண்டும் என்றே கருதுகின்றனர். மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு, அத்தகைய கூட்டிணைப்பு தேவையென்று அவர்கள் எண்ணுகின்றனர். இன்று விரிவடைந்துள்ள அரசியல் களத்தில் மீண்டும் அதிகாரத்துக்கு வருவதே முக்கியமாக உள்ளது.

ஜே.வி.பி. போன்றதொரு கட்சி அத்தகைய நோக்கில் திருப்தியடையுமா என்பது சந்தேகமே. இணைப்பின் மூலம் சுயமான தலைமைத்துவத்தைப் பெறுவதிலும் தனது கருத்தைப்பலப்படுத்திக் கொள்வதிலும் ஜே.வி.பி. செயற்படாதெனக் கருதுவது தவறானதாகும். இதிலுள்ள நியாயமற்ற தன்மை யாதெனில், இத்தகைய கூட்டிணைப்பு தனது கொள்கைகளில் ஒன்றாக "ஒற்றுமையும் போராட்டமும்" என்ற நிலைப்பாட்டைக்கொண்டுள்ளமையே ஆகும்.

ஸ்ரீல.சு.க. - ஜே.வி.பி. இணைப்பின் மூலம் சமாதானச் செயற்பாடு திசைதிருப்பப்படாதிருக்குமாயின் - பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகள் முதலாளித்துவக் கோட்பாடுகளைக் கடந்துசெல்லாதிருக்குமாயின் - அதன்மூலம் உருவாக்கப்படவுள்ள உண்மையான மாற்றம் என்ன?

ஜே.வி.பியினால் ஸ்ரீல.சு.கட்சி கைப்பற்றப்படுவதா?

ஸ்ரீல.சு.கட்சியினுள் ஜே.வி.பி. கரைந்து போவதா?

இவை சம்பந்தமான சந்தேகங்கள் ஏற்கனவே உருவாகியும் உள்ளன. ஜே.வி.பியின் வரலாற்றில் அது கரைசேர்வதற்காக மேற்கொள்ளப்படவுள்ள முக்கியமான கூட்டிணைப்பாக இதைக் கருதமுடியும். 1988-89 காலப் பகுதியில் நிலவிய ஸ்ரீல.சு.க. - ஜே.வி.பி. இடையிலான இணைப்பு உத்தியோகபூர்வமற்றதாகவே இருந்துள்ளது. அதுவும் 1989 ஆம் ஆண்டின் முற்பகுதியில் அந்தக் கூட்டு உருக்குலைந்து போய் விட்டது.

### கூட்டில் அனுபவம்

ஸ்ரீல.சு.கட்சிக்கு அத்தகைய கூட்டு இணைப்புகள் பழக்கப்பட்டவைகளாகும். பழைய இடதுசாரிகளைத் தனது நிழலில் இருத்திப் படிய வைத்த அனுபவமும் அதற்கு உண்டு. ஆனால், அது வேறுபட்ட உலக அரசியல் களியாட்டத்தினுள் சமதர்மவாதச் சுலோகங்கள் மூலம் அரசமைத்த விதமாகும். இன்று அத்தகைய பலமான அரசை உருவாக்குவது என்பது இன்றுள்ள நிலைப்பாடுகளுக்கு மத்தியில் மாத்திரமல்ல. எமது தேசிய நிலைப்பாடுகளுக்கு மத்தியிலும் மிகக் கடினமானதே.

இன்றைய ஸ்ரீல.சு.க. 1963 இல் இருந்துள்ள தேசிய சமதர்மவாதக் கட்சியல்ல. அன்று நாட்டில் அது பெற்றிருந்த நல்லெண்ணம் இன்று இல்லை. அதுபோன்றே ஜே.வி.பி. என்பதும் பழைமைவாய்ந்த இடதுசாரியுமல்ல. தமது அமைப்புக்காக உயிர்களை அர்ப்பணித்த பல்லாயிரக் கணக்கான துடிப்புள்ள உயிர்களோடு, முன்னோக்கிச் செல்லும் போராட்ட முனைப்புக் கொண்ட கட்சியாகும். அதற்கு என்.எம்.பெரேரா என ஒருவர் இல்லாதபோதும் விஜேவீரகள் உள்ளனர்.

ஸ்ரீல.சு.க - ஜே.வி.பி. கூட்டிணைப்பு மேற்கொள்ளப்பட்டு அது தீவிர அரசியல் சக்தியாக உருவாகுமானால் அதன்மூலம் உள்வாங்கப்படும் கட்சி உறுப்பினர்களும் வெளி ஆதரவாளர்களும் பல்வேறு குணம் கொண்டவர்களாக முற்றிலும் புதுமுகங்களாகவே இருப்பர். அரசியலில் ஈடுபட்டுள்ள எவருக்கும் அது புதுமையான சவாலாகவே அமையும். ★

# 'சரசவி சவிய' திட்டத்தின் கீழ் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு

'சரசவி சவிய' என்ற பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு மூன்று மாதகாலத்தினுள் தனியார்துறையிலிருந்து 2ஆயிரத்து 863 வேலைவாய்ப்புகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

யாழ். வர்த்தக சங்கத்துடனும் இந்தத்திட்டம் தொடர்பாகப் பேச்சு நடத்தியுள்ளோம். விரைவில் அங்கிருந்தும் இந்தத் திட்டத்தில் பட்டதாரிகளை பதிவு செய்யவுள்ளோம்.

'சரசவி சவிய' வேலைத்திட்டத்தின் தலைவர் நிமால் ஜயகொடி இவ்வாறு தெரிவித்தார்.

'சரசவி சவிய' என்ற பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்புத்திட்டம் தொடர்பாக விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாடு தொழில் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் 'சரசவி சவிய' திட்டத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர்களான ஷைபாரா, சேம்ஸ் டெம்டோ ஆகியோர் கலந்துகொண்டனர். நான்கு வர்த்தக சம்மேளனங்கள் இணைந்து இந்தத் திட்டத்தை முன்னெடுக்கின்றன. தனியார்துறையில் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

செய்தியாளர் சந்திப்பில் தலைவர் நிமால் ஜயகொடி மேலும் தெரிவித்ததாவது:-

இந்தத் திட்டமானது பட்டதாரிகளுக்கு அரச துறையில் வேலைவாய்ப்புப் பெற்றுக்கொடுப்பதற்கானதல்ல. இது முற்றுமுழுதாகத் தனியார் துறையில் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கும் திட்டமாகும்.

தனியார் நிறுவனங்கள் தங்களது நிறுவனத்தில் நிலவும், 2363 வெற்றிடங்கள் தொடர்பாக எமக்கு இதுவரை அறிவித்துள்ளன. அவற்றுக்கு நியமிக்க ஆட்கள் தேவை என்று எமது திட்டத்தில் அவை பதிவு செய்துள்ளன. எம்மிடம் 16 ஆயிரம் பட்டதாரிகளின் பதிவுகள் இருக்கின்றன. நிறுவனங்களில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஏற்ப பட்டதாரிகளுக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)



காரைநகர் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் பனம் விதை நடுகை செய்யும் திட்டத்தின்கீழ் காரைநகர் சாம்பலோடைப் பகுதியில் அண்மையில் பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டன. இதன்போது எடுக்கப்பட்ட படம் இது.

*(படம்: காரைநகர் செய்தியாளர்)*

## ஏழாலை வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்

### ஆத்மசாந்திப் பிரார்த்தனை பூஜையும் மதியபோசனமும்



**அமரர் கா.ஸ்ரீரங்கநாதன்**

செல்லாச்சி அம்மையார் வீதி,
சுன்னாகம்.

வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானத்தின் அரும்பெருந்தொண்டர் அமரர் கா.ஸ்ரீரங்கநாதன் அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நாளை (21.12.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு எமது ஆலயத்தில் நடைபெறும். இந்த ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அடியார்கள், அன்பர்கள், தொண்டர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் ஆத்மா அம்பிகையின் திருவடியை அடைந்து பேரானந்தப்பேறு அடைய அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

\- தேவஸ்தானம்.

## வடமராட்சியில் மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,டிசெ.20

வடமராட்சி லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச மருத்துவ முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் தம்பசிட்டி மெதடிஸ்த மிஷன் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்த மருத்துவ முகாமில் கண் பரிசோதனையும், பொது வைத்தியப் பரிசோதனைகளும் இடம்பெறும்.

(ஒ-ரி)

## மலசலகூடங்கள் அமைப்பு

அரியாலை, முள்ளிக் கிராமத்தில அகதிகளுக்கான ஐநா.தூதரகத்தின உதவியுடன் இருபத்தைந்து மலசலகூடங்களை நல்லூர் பிரதேச செயலகம் அமைத்துவருகின்றது.

அரியாலை, முள்ளிக் கிராமத்தில அடிப்படை வசதிகள் இன்றி வாழ்ந்து வருகின்ற மக்களின் பயன்பாட்டுக்கு என்றே இந்த மலசலகூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மலசலகூடமும் சுமார் 15 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்படுகின்றன.

## வாலிப கிறிஸ்தவ சங்கம் - யாழ்ப்பாணம்

### வருடாந்த அங்கத்தவர் ஒன்றுகூடல் - 2003

எமது நிறுவனத்தின் வருடாந்த அங்கத்தவர் ஒன்றுகூடலானது, எதிர்வரும் திங்கட்கிழமை 22.12.2003 மாலை 4.30 மணிக்கு யாழ்.Y.M.C.A. மண்டபத்தில் இடம்பெறும்.

**சகல அங்கத்தவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

பொதுச் செயலாளர்
யாழ்.Y.M.C.A.

(26022)(35-16-25)

## நெஞ்சைவிட்டகலாத நினைவலைகள்

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியை அழைப்பும் — 3 ஆம் ஆண்டு






| அமரர் தம்பு நாகமணி | | திருமதி நாகமணி தவமணி (இராசம்மா) திதி: சதுர்த்தி |
| --- | --- | --- |
| 11.04.1933 | மலர்வு | 10.06.1940 |
| 20.11.2003 | உதிர்வு | 15.12.2000 |

இன்று (20.12.2003) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும் மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நாவலர் சனசமூக நிலையம்,
நாவலடி,
உடுப்பிட்டி. (26021) (25-16)

\- குடும்பத்தினர்.



# பெரும்பான்மைக் கட்சிகள் தமிழர் பிரச்சினையை தீர்த்துவைக்குமென இனியும் நம்பத் தயாரில்லை

## தமிழ்க் கூட்டமைப்பு உறுப்பினர் ரவிராஜ் தெரிவிப்பு

அன்று அரசமைப்பின் ஆறாவது திருத்தச் சட்டத்தின் மூலம் தமிழர்களை நாடாளுமன்றத்தில் இருந்து வெளியேற்றுவதற்காக ஒன்றுகூடியது போல் இன்று பாதுகாப்பு அமைச்சைக் காப்பாற்றவும் ஆளும் கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் ஒன்றுபட்டுவிட்டனர்.

பெரும்பான்மை இனக்கட்சிகளின் சுயரூபம் வெளிப்பட்டுவிட்டது. இனி மேலும், இவர்களை நம்ப நாம் தயாராக இல்லை.

- இப்படிக் கூறினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ். மாவட்ட எம்.பியான நடராஜா ரவிராஜ்.

**ரவிராஜ் எம்.பி.**

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் நிதி அமைச்சுக்கான நிதி ஒதுககீடுகள் தொடர்பான விவாதத்தின்போதே ரவிராஜ் இப்படி ஆக்ரோஷமாகக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த இரண்டு வருடங்களாக யுத்தம் ஓய்ந்துவிட்டது; யுத்தச் செலவுகள் இல்லை. ஆனால், அரசோ பாதுகாப்பு அமைச்சுக்கு முன்னைய ஆண்டைவிட 5 வீதம் கூடுதலாக நிதியை ஒதுக்கியுள்ளது. சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டுவிட்டன. மீண்டும் யுத்தம் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்ச உணர்வு மக்கள் மத்தியில் தோன்றிவிட்டது. கடந்த இருபது வருடங்களாக கல்வி, சுகாதாரம் மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்குப் போதுமான நிதி ஒதுக்கப்படவில்லை.

'யுனிசெவ்' அறிக்கையில் வட பகுதியில் 94ஆயிரம் சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் உள்ளனர் - என்று குறிப்பிட்டுள்ளது. முன்பு, கல்விக்குச் சிறந்த இடம் யாழ்ப்பாணம் என்று சிறப்பாகக் கூறப்பட்டது. எங்களுடைய யாழ்ப்பாணத்தில் கல்வி கற்ற பல சிங்களத் தலைவர்கள் அமைச்சரவையிலும் அங்கம் வகித்துள்ளனர். இதை எண்ணியாவது வடபகுதிக் கல்வி அபிவிருத்திக்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஜனாதிபதியும் பிரதமரும் அதிகாரப் போட்டியில் சிக்கித்தடுமாறுகின்றனர். இவர்கள் இருவரும் இணைந்து சமாதான இலக்கை அடைய வேண்டும். "இரண்டு மொழிகள் ஒரே நாடு" என்றார் மூத்த அரசியல்வாதியான கொல்வின் ஆர்.டி.சில்வா. ஆனால், நீங்களோ ஒரே மொழி என்றீர்கள் அதனால், நாடு இரண்டாகிறது.

1994ஆம் ஆண்டு தமிழ் மக்கள் ஜனாதிபதியை ஆதரித்தனர். ஆனால, ஜனாதிபதியோ தமிழர்களை உதாசீனம் செய்துவிட்டார்.

- இப்படி ரவிராஜ் எம்பி. கூறினார்.

**சிவாஜிலிங்கம் எம்.பி.**

இதே வேகத்துடன் விவாதத்தை இழுத்துச்சென்றார் கூட்டணி உறுப்பினரான சிவாஜிலிங்கம். பாதுகாப்பு அமைச்சுக்கு நிதியை ஒதுக்குவதில் பேரினவாதக் கட்சிகள் ஒன்றுபட்டுவிட்டன. இவர்களுக்குப் பதிலடி கொடுப்பதற்காகவே வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாது வாசிப்பின்போது அதற்கு எதிர்த்து வாக்களிப்பது குறித்துச் சிந்திக்கின்றோம் என்று குறிப்பிட்டார்.

ஆனால், மற்றும் ஒரு தமிழ் உறுப்பினரான ஈ.பி.டி.பியின் மதனராஜா, தமிழ்த்தேசியக் கூட்டணியினர் மீது நேற்றுமுன்தினமும் பாய்ந்தார்.

கூட்டணித் தலைவர் ஆனந்த சங்கரி, பிரதி சபாநாயகர் பதவியைப் பெறக்கூடாது என்று சங்கரியருக்கு கூட்டணியினர் அழுத்தம் கொடுத்தனர். ஆனால், "வளர்த்த கடா மார்பில் பாய்ந்தது"போல் இன்று சபாநாயகர் ஆசனத்தில் இன்னொரு கூட்டணிக்காரர் மகிழ்ச்சியுடன் அமர்ந்திருக்கின்றார் என்று அவர் சாடினார்.

மதனராஜா பேசுவதற்கு முன் ரவிராஜ் எம்.பியே சபைக்குத் தலைமை தாங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. இதேபோன்று மாவை சேனாதிராஜாவும் பலமுறை சபை அமர்வுகளுக்குத் தலைமை தாங்கியுள்ளார்.

நிதி அமைச்சுத் தொடர்பான விவாதம் மிகவும் சூடாகவும், காரசாரமாகவும் நடைபெற்றது. நிதி அமைச்சர் பெயரளவில் மட்டுமே அமைச்சராக இருக்கின்றார். அவருக்கு நிதி அமைச்சில் எந்த வேலையும் இல்லை. அமைச்சின் செயலாளர் சரித்த ரத்வத்தையே அமைச்சர் போன்று செயற்படுகின்றார் - என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒட்டுமொத்தமாகக் கூச்சலிட்டனர்.

**ஊழல் பட்டியல்**

கண்டி மாவட்ட பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினரான மஹிந்தானந்த அளுத்கமகே, ஊழல்பட்டியல் ஒன்றையே சபையில் சமர்ப்பித்தார்.

அரச உயர் அதிகாரிகளும் அமைச்சர்களும் அரச வங்கிகளில் பல லட்சம் ரூபா நிதியை நிரந்தர வைப்பில் வைத்திருக்கின்றார்கள் என்றும், அவற்றுக்குக் கூடுதலான வட்டியை அவர்கள் பெறுகிறார்கள் என்றும் அவர் கூறினார்.

இக்கூற்றை அமைச்சர் அஸ்வர் வன்மையாகக் கண்டித்தார். அப்போது அமைச்சர் அஸ்வருக்கும் எதிரணியினருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

இதேவேளை, பிரதி நிதியமைச்சர் பந்துல குணவர்த்தன, எதிர்க்கட்சி உறுப்பினரின் கூற்றுகளை நிராகரித்தார். அமைச்சர்களுக்கு எதிராகக் குற்றம் சாட்டுவதாக இருந்தால் அவர்களின் பெயரை சபையில் தைரியமாகக் குறிப்பிடலாம். மாறாக, கௌரவமான அமைச்சர்கள் மீது சேறுபூச முனையக்கூடாது - என்று அவர் கூறினார்.

பிரதி நிதியமைச்சரின் கேள்விககு எதிரணி உறுப்பினரிடமிருந்து பதில் வரவில்லை. அதனால், அவர் தனது பேச்சை திசைதிருப்பிவிட்டார். மொனறாகல மாவட்ட பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினரான ஜகத் புஸ்பகுமார, நிதியமைச்சர் மீது நேரடியாகவே தாக்குதல்களைத் தொடுத்தார்.

நிதியமைச்சர் பல கிரிமினல்களுக்கு உதவி செய்துள்ளார்; குற்றவாளிகளுக்குரிய தண்டப்பணங்களை ரத்து செய்துள்ளார்; அமைச்சர் சட்ட விரோதமான முறையில் வரிச்சலுகைகளை வழங்கியுள்ளார் என்று பொ.ஐ.மு. உறுப்பினர் சாடினார்.

ஆனால், "நிதியமைச்சர் இவற்றை எல்லாம் நிராகரித்ததுடன், உங்களுடைய குற்றச்சாட்டுக்களை உங்களால் நிரூபிக்கமுடியுமா?" - என சவால்விட்டார். ஆனால், எதிர்க்கட்சி உறுப்பினரோ இந்தச் சவாலை ஏற்கத் தயாராக இல்லை.

அப்போது, வர்த்தக, வாணிப அமைச்சர் ரவி கருணாநாயக்க மீது எதிர்க்கட்சிகளின் ஏவுகணை திரும்பியது. இதனை அமைச்சர் அஸ்வர் கண்டித்தார்; சபையில் இல்லாத ஒருவரைப் பற்றிப் பேசமுடியாது என்றார்; நிலையியல் கட்டளையையும் ஆதாரம் காட்டினார். அத்துடன், குற்றச்சாட்டுகளுடன் துள்ளியெழுந்த புஸ்பகுமாரவுக்கும் அமைச்சர் அஸ்வருக்கும் இடையிலான தர்க்கம் முடிந்தது.



**குற்றச்சாட்டு**

ஆனால், தொடர்ச்சியாக பிரதி நிதி அமைச்சர் மீது எதிரணியினர் குற்றப்பத்திரிகைகளை வாசித்துக் கொண்டேயிருந்தனர். ஆனால், அமைச்சரோ இவற்றை எல்லாம் பொருட்படுத்தாமல் அநாயசமாக இருந்தார்.

மாறாக, எதிர்க்கட்சியினர் தன் மீது சுமத்திய குற்றச்சாட்டுக்களை ஆதாரத்துடன் நிரூபித்தால், மறுநிமிடமே தனது பதவியை இராஜினாமாச் செய்யத் தயார் என்று அவர் சவால் விட்டார். "அரச நிதியைச் சுரண்டி வாழவேண்டிய இழிநிலை எனக்கில்லை. ஒருமரத்தடியில் சில மாணவர்களுக்கு நான் பாடம் சொல்லிக் கொடுத்தாலே என்னால் வசதியாக வாழமுடியும்" - என்று பிரதி நிதியமைச்சர் பந்துல குணவர்த்தன கூறினார்.

நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரது பாராட்டுதல்களையும் தட்டிக்கொண்டார்.

நாடாளுமன்ற விவகார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான விவாதம் நடைபெற்றபோது அதற்குப் பொறுப்பான அமைச்சர் அஸ்வரின் செயல்களை அனைத்து உறுப்பினர்களும் வரவேற்றனர்; பாராட்டினர். வழமையாகவே நாடாளுமன்றத்தில் எந்த ஒரு விடயம் பரிசீலனை செய்யப்பட்டாலும், அதை மிக நுணுக்கமாக செவிமடுப்பவர் அமைச்சர் அஸ்வர்.

சபைக்கு செங்கோல் எடுத்து வரப்படுவதற்கு முன் சபைக்கு வந்து, அந்த செங்கோல் சபையில் இருந்து கொண்டுசெல்லப்படும் வரை சபையில் இருந்து சாதனை படைப்பவர் அவர்.

இந்தப் பழக்கம் தனது தலைவர் - முன்னாள் ஜனாதிபதி - போதித்த போதனையாலும் வழிகாட்டலாலும் ஏறபட்டது - என்றார் அமைச்சர் அஸ்வர்.

ஒவ்வொரு விவாதத்தின் போதும் பல ஒழுங்குப் பிரச்சினைகளை எழுப்பி "மிஸ்டர் பொயிண்ட் ஒவ் ஓடர்" - என அழைக்கப்படுபவர். அவருடைய அமைச்சுக்களை நிதி ஒதுக்கீட்டு விவாதத்தின்போது எவரும் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பவோ, ஆர்ப்பாட்டம் பண்ணவோ இல்லை.

தேசிய ஐக்கிய முன்னணி உறுப்பினர்களும், ஜேவிபியினரும் அமைச்சர் அஸ்வரை வழமையாக அப்பட்டமாக விமர்சிப்பார்கள். ஆனால், நேற்று முன்தினம் அமைச்சரை அவர்கள் பாராட்டினார்கள்.

**கவிதை பாடிய எம்.பி.**

எல்லாவற்றையும்விட தேசிய ஐக்கிய முன்னணி உறுப்பினரான சேகு இஸத்தீன், அமைச்சரைப் புகழ்ந்து சபையில் கவிதை பாடினார். அமைச்சரைப் புகழ்ந்த அதேவேளை, நாடாளுமன்றத்தில் விநியோகிக்கப்படும் உணவு தரம் குறைந்தது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அநுராதபுர மாவட்ட பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினரான புஸ்பகுமார தனதுரையின் போது செய்தியாளர்கள் மீது அக்கறை செலுத்தினார்.

நாடாளுமன்றச் செய்தியாளர்களுக்கு மேலதிகமான 'பக்ஸ்' வசதிகளையும், தொலைபேசிவசதிகளையும் வழங்கவேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்தார்.

இறுதியாக வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பின் விவாதத்தை எதிர்க்கட்சிகளின் சார்பில் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ முடித்துவைத்தார்.

அரச தரப்பில் பதிலளித்த அமைச்சர் கே.என்.சொக்ஸி கூறியதாவது :-

அரசு பல்வேறு பொருள்களுக்கான வரிகளை நீக்கியுள்ளது. அத்தியாவசிய பாவனைப் பொருள்களின் 'வற் வரி' குறைக்கப்பட்டுள்ளதால் வாழ்க்கைச் செலவைக் குறைக்க முடியும்.

வறுமையை ஒழிக்க வேண்டுமானால் சில தியாகங்களையும் செய்தே தீரவேண்டும்.

அடுத்த ஆண்டில் நிலையான பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தமுடியும். தொழில் வாய்ப்புகளை வழங்கவும், உற்பத்திகளை அதிகரிக்கவும் நாம் திட்டமிட்டுள்ளோம். இவற்றின் மூலம் ஒளிமயமான இலங்கையை உருவாக்கமுடியும் - இப்படி நிதியமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

நிதியமைச்சர் பதில் அளிக்கும் போது சபையின் இருபக்கத்திலும் சலசலப்பு ஏற்பட்டது.

சபாநாயகர், சபையில் அமைதி காக்கும்படி பலமுறை உறுப்பினர்களைக் கண்டித்தார்.

"இந்தச் சபையில் பல சபாநாயகர்களும், அவர்களுடன் அமைச்சர்களுக்காக பதில் அளிக்கப் பல அமைச்சர்களும் கூடவே இருக்கின்றார்கள். இந்த நிலையில், சபையில் எப்படி அமைதி ஏற்படும்?' - என சபாநாயகர் கடுமையாகக் கூறி தத்தமது ஆசனத்தில் அமர்ந்து சபை நடவடிக்கைகளை அவதானிக்கும்படி உறுப்பினர்களை எச்சரித்தார்.

**ஒழுங்குப் பிரச்சினை**

நிதி அமைச்சர் பதில் அளித்துக் கொண்டிருந்தபோது, எதிர்க்கட்சி உறுப்பினரான அனுரா பண்டார நாயக்கா ஒழுங்குப் பிரச்சினை ஒன்றைக் கிளப்பினார்.

"இந்தச் சபைக்குள் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் செல்லிடத் தொலைபேசிகளை உபயோகிக்க முடியாது. ஆனால், இங்கு மூன்று அமைச்சர்கள் செல்லிடத் தொலைபேசி மூலம் பேசிக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் தமது காதலிகளுடனோ, காதலர்களுடனோ சபைக்கு வெளியே சென்று பேசலாம். இந்தச் சபையின் கௌரவத்தைக் கெடுக்க சபாநாயகர் இடமளிக்கக் கூடாது" - என்றார் அவர்.

சபாநாயகரும் அநுரா பண்டார நாயக்காவின் கூற்றை ஏற்றுக்கொண்டார். சபை உறுப்பினர்கள் இதனைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று சபாநாயகர் கூறினார்.

இறுதியாக 32 மேலதிக வாக்குகளால் ஐக்கிய தேசிய முன்னணி அரசின் மூன்றாவது வரவு - செலவுத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ அரச தரப்பில் சபை முதல்வர் டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டார ஆகியோர் நன்றி தெரிவித்துப் பேசினர்.

அதேவேளை, நாடாளுமன்ற நிகழ்வுகளை சிறப்பான முறையில் கொண்டு செல்வதற்கு ஒத்துழைப்பு வழங்கிய பிரதமர் உட்பட ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும், நாடாளுமன்றச் செய்திகளை சிறப்பான முறையில் தொகுத்து வழங்கிய செய்தியாளர்களுக்கும் நன்றி தெரிவித்து புத்தாண்டு வாழ்த்துக்களையும் சபாநாயகர் தெரிவித்துக் கொண்டார்.

நாடாளுமன்றம் மீண்டும் 2004 ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி கூடும்.

---

# தேரரின் மரணத்தில் சந்தேகம் எதுவுமில்லை

சங்கைக்குரிய கங்கொடவில சோம தேரரின் மரணம் தொடர்பாக சந்தேகங்கள் எதுவும் இல்லை என்பது அவரது பிரேத பரிசோதனையின் மூலம் தெளிவாகியுள்ளது.

கம்பஹா நீதிபதி சமஹரான் விக்ரமரச்சி இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிக்கையை இன்று வெளியிடுவார்.

சங்கைக்குரிய கங்கொடவில சோமதேரரின் பூதவுடல் ரஷ்யாவிலிருந்து நேற்றுக்காலை 7.20 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது.

பெருந்திரளான பிக்குமாரும் பொது மக்களும் அங்கு கூடியிருந்தனர். சங்கைக்குரிய திருகோணமலை ஆராமயத் தேரர், அமைச்சர் லால் தர்மப்பிரிய கமகே, நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேம ஜயந்த ஆகியோர் சங்கைக்குரிய சோம தேரரின் பூதவுடல் தாங்கிய பேழையை ஏற்றுக்கொண்டனர்.

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரும் விமான நிலையத்தில் கூடியிருந்தனர்.

## சித்த மருத்துவ மாணவருக்கு!

யாழ். பல்கலைக்கழகச் சித்த மருத்துவத்துறை மாணவர்களுக்கான அவசரகலந்துரையாடல் நாளைமறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாணவர் பொது அறையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளும்படி சித்த மருத்துவ மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது. (ஏ-பி)

---

# பேராதனையில் பஸ் விபத்து!

கண்டி பேராதனை, ஈரியகமவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்தனர்; 26 பேர் காயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் காலை 9.30 மணியளவில் பயாகலையிலிருந்து கண்டி கண் வைத்தியசாலையை நோக்கி சென்றுகொண்டிருந்த பஸ்ஸே விபத்துக்குள்ளானது. பஸ் 45 நிமிடங்கள் தாமதமாகப் புறப்பட்டதனால், அதனை ஈடுசெய்ய அதிவேகமாக அது பயணம் செய்துள்ளது.

வேகத்தைக் கட்டுப்படுத்த பஸ்ஸின் 'கியர்' சரியாக வேலை செய்யாததால் லொறி ஒன்றுடன் விபத்துக்குள்ளாகி பள்ளத்தில் வீழ்ந்தது.

சம்பவத்தில் காயமடைந்த பெரும்பாலானவர்கள் கண் சிகிச்சைக்காக சென்ற 50 வயதுக்கு மேற்பட்ட கண் நோயாளர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் கண்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

---

# சட்டக்கல்லூரி பரீட்சைகள்; அறிமுக வகுப்பு இன்று!

யாழ்ப்பாணம்,டிசெ.20

இலங்கைச் சட்டக் கல்லூரியின் நுழைவுப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளோருக்கான வழிகாட்டி வகுப்புகள் மாதந்தோறும் மாத இறுதியில்வரும் சனி, ஞாயிறு தினங்களில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன.

'உதயன்' பத்திரிகை நிறுவனமும் சட்ட மாணவர் இந்து மகாசபையும் இணைந்து இந்த வழிகாட்டி வகுப்புகளுக்கு ஏற்பாடுசெய்துள்ளன.

அடுத்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள நுழைவுப் பரீட்சைக்குரிய விண்ணப்பங்கள் ஏப்ரல் மாதம் சட்டக்கல்லூரியால் கோரப்படவுள்ளன. ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் ஓர் அமர்வில் பழைய பாடத்திட்டமாக இருந்தால் 4 பாடங்களில் சித்தி (S) அடைந்தவர்களும் புதிய பாடத்திட்டமாக இருந்தால் 3 பாடங்களில் சித்தி (S) அடைந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

சட்டக்கல்லூரி அனுமதி பெறுவதற்கான தகுதி தொடர்பாக கடந்த 18 ஆம் திகதி வெளியான செய்தியில் சில தவறுகள் ஏற்பட்டுவிட்டன.

ஜி.சீ.ஈ. சாதாரண தரப்பரீட்சையில் தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தி (C) பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். இதற்கு வயதெல்லை கிடையாது.

தகுதியும் ஆர்வமும் உள்ளோர் இந்த வழிகாட்டி வகுப்பில் கலந்துகொள்ளலாம் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அறிமுக வகுப்பு எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு 'உதயன்' பணிமனை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. அதில் கலந்துகொள்ள விரும்புவோர் முற்பகல் 10 மணிக்கு முன்னர் அங்கு வருகை தரவேண்டும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ-10)

பல்வகை பழங்களினால், அவற்றின் தரச் சுவைக்கேற்ப

தயாரிக்கப்பட்டுள்ள இச் சன்குவிக் பழரசத்தை இன்றே சுவைத்து மகிழுங்கள்.




sunquick

அதிக பழங்கள் அதிக கோப்பைகள்

Grey Worldwide

## கசிப்பு வழக்கில் அபராதம் விதிப்பு

தென்மராட்சி,டிசெ.20 -

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நபருக்கு சாவகச்சேரி நீதிவான் 4 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் ஐந்து வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட மூன்று மாத சிறைத்தண்டனையும் விதித்தார்.

வரணி, கரம்பைக் குறிச்சியைச் சேர்ந்த வல்லி வீமன் என்பவருக்கே இத்தண்டனை விதிக்கப்பட்டது.

இவர், ஏற்கனவே கசிப்பு வழக்கில் நீதிமன்றினால் தண்டிக்கப்பட்டவர் எனத் தெரிவிக்கப்பட்டது.(எ-117)

## பண்டத்தரிப்பில் சைக்கிள்கள் மீட்பு!

சண்டிலிப்பாய்,டிசெ.20

பண்டத்தரிப்புச் சந்தையின் சுற்றாடலில் இரண்டு லுமாலா சைக்கிள்கள் அநாதரவான நிலையில் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்றும் -

உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் - பண்டத்தரிப்பு வர்த்தகர் சங்கத் தலைவர் து.சிங்கராசா அறிவித்துள்ளார். (எ-135)

# மதுபோதையில் மோ.சைக்கிள் செலுத்திய மூவருக்கு அபராதம்

### யாழ். நீதிமன்று விதித்தது

யாழ்ப்பாணம்,டிசெ.20

திருநெல்வேலிச் சந்தைப்பகுதியில் மதுபோதையுடன் மோட்டார் சைககிள் செலுத்திய மூன்று இளைஞர்களுக்கு யாழ். நீதிமன்றம் தலா 2 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்துள்ளது.

கடந்த புதன்கிழமை இரவு கோப்பாய் பொலீஸார் திருநெல்வேலிப் பகுதியில் வாகனச் சோதனையில் ஈடுபட்டிருந்த சமயம் இந்த மூன்று இளைஞர்களும் அவர்களிடம் சிக்கினர்.

இவர்கள் யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர்செய்யப்பட்டனர்.

மூவரையும் விசாரணை செய்த நீதிவான், மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்தியது, வாகன ஆவணங்கள் இன்றியும் ஹெல்மட் அணியாமலும் பயணித்தது ஆகிய குற்றங்களின் பேரில் தலா 2 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்தார். (எ-3)

# நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் ஓவியக் கண்காட்சி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.20

நீதி, சட்ட மறுசீரமைப்பு தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் ஏற்பாட்டில் கொழும்பு ஜோன் டி சில்வா ஞாபகார்த்த கலை அரங்கில் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த அகில இலங்கை ரீதியிலான ஓவியம், கட்டுரைப் போட்டி பரிசளிப்பு விழாவும் -

நாளை முதல் எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை வரை கொழும்பு கலாபவனத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஓவியக் கண்காட்சியும் -

அதிவண. கங்கொடவில சோமதேரரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும்வகையில் ஒத்திவைக்கப்பட்டுள்ளன என அமைச்சின் மேலதிக செயலாளர் டபிள்யூ. பீ.எஸ்.ஜயவர்த்தன அறிவித்துள்ளார்.

ஓவியக் கண்காட்சி மற்றும் பரிசளிப்பு விழா நடைபெறும் புதிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் - அவர் தெரிவித்துள்ளார்.(எ)



வலி.கிழக்குப் பிரதேச சபையின் செயலாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற எஸ்.குகதாசனுக்கு அச்சுவேலி உப அலுவலகத்தில் அண்மையில் பிரிவுபசாரவிழா நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில், பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்ட மகள் வங்கியின் அச்சுவேலி கிளை முகாமையாளர் எஸ்.சண்முகலிங்கம் உரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். எஸ்.குகதாசன், அச்சுவேலி உப அலுவலகப் பொறுப்பதிகாரி கே.மாணிக்கவாசகர் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். *(படம்: அச்சுவேலிச் செய்தியாளர்)*

## முன்பள்ளி ஆசிரியர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,டிசெ.20

தென்மராட்சி முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மாதாந்த கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

மிக முக்கியமான விடயங்கள் இதில் கலந்துரையாடப்படவுள்ளதால் அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (எ)


# டெங்குக் காய்ச்சல் வருமுன் காப்போம்!

தற்போது யாழ். குடாநாட்டில் மழைபெய்து ஓய்ந்துள்ளது. ஆனால், நுளம்புப் பெருக்கம் அதிகமாகக் காணப்படுகின்றது. நுளம்புப் பெருக்கத்திற்கு நீர் அவசியமானதொன்றாகும். நீர் தேக்கமின்றி ஒரு காலமும் நுளம்பு பெருக்கமடையமாட்டாது. மழை ஓய்ந்துள்ளபோதும் எமது சூழலிலுள்ள சிறுசிறு பாத்திரங்களில தேங்கிநிற்கும் மழை நீரானது நுளம்பு பெருக்கத்திற்குச் சாதகமாக அமைகின்றது. இவ்வாறு சிறுபாத்திரங்களில் தேங்கும் மழைநீரில் டெங்குக் காய்ச்சலைப் பரப்பும் 'ஈடிஸ்' வகை நுளம்புகளே பெருக்கமடையும்.

'ஈடிஸ்' வகை நுளம்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது நோயின தாக்கமும் அதிகரிக்கும் என்பதே உண்மை(இயல்பு). நோய்க் கட்டுப்பாட்டுச் செயற்பாட்டில் சுகாதாரப் பகுதியினரின் ஆலோசனைகளை இல்லாது ஒழித்தலே மிகச் சிறந்த முறையாகும்.

★ 'ஈடிஸ்' நுளம்பு பெருகும் இடங்கள் எவை?

01. இளநீர்க் கோம்பைகள்
02. சிரட்டைகள்
03. கைவிடப்பட்ட ரயர்கள், கூரைகளில் போடப்படும் ரயர்கள்
04. பிளாஸ்ரிக் பாத்திரங்கள்
05. போத்தல்கள்
06. வீட்டின் முகப்பிலுள்ள பிளேற் (Sun Shade Hood)
07. நீண்டநாள் கழுவப்படாத தண்ணீர்த் தொட்டிகள்
08. சைக்கிள் திருத்தும் நிலையங்களில் தொங்கவிடப்பட்டுள்ள பாவிக்காத ரயர்கள்.
09. வாழைப்பூவிலிருந்து உதிர்ந்த மடல்கள்.
10. தாழ்வாரத்திலுள்ள ஆட்டுக்கல்





நடைமுறைப்படுத்துவதன் மூலம் நோய் நிலையைக் கட்டுப்படுத்தலாம்.

மூன்று நிலைகளில் தோன்றும் 'டெங்குக் காய்ச்சலானது' அபாயகரமானது மட்டுமன்றி, மரணத்தை விளைவிக்கக் கூடியதுமாகும். இவ்வகை நுளம்புகள் காலை 07 - 10 மணிவரையும் மாலை 03 - 06 மணிவரையும் மனிதரைக் கடித்துக் குருதியை உறிஞ்சும் தன்மையது. இந்நேரத்தில் நுளம்புக்கடியிலிருந்து பாதுகாத்துக்கொள்வது மிக முக்கியமானதொன்றாகும்.

டெங்குநோயை ஒழிக்க சாத்தியமான காரியம்தான் என்ன?

இந்நுளம்பினம் பெருகக்கூடிய இடங்களை இனங்கண்டு, இவற்றை

11. மேசைக்கால்களின் அடியில் வைக்கப்படும் நீர்நிறைந்த பாத்திரங்கள்
12. மரங்களிலுள்ள பொந்துகள்
13. மிருகங்களின் கால்குழம்பினால் ஏற்படும் குழிகள் ஆகியவற்றில் தேங்கும் மழைநீர்.

★ *டெங்குக் காய்ச்சலைத் தடுப்பது எப்படி?*

01. நுளம்புக் கடியிலிருந்து பாதுகாத்தல்
02. நுளம்புப் பெருக்கத்தைத் தடைசெய்தல்

*(01) நுளம்புக்கடியிலிருந்து பாதுகாப்பது எப்படி?*

★ பகல் நேரத்தில் இவ்வகை நுளம்பு கடிப்பதனால் காரியாலயம், பாடசாலை, வீடு ஆகிய இடங்களில் முழுநீளஆடை அணிதல்வேண்டும்.

★ நுளம்புத்திரி, புல்லெண்ணெய், புகையூட்டல் ஆகியன பாவித்தல்.

★ வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறும் நோயாளிகள் நுளம்புவலை, நுளம்புத்திரி பாவிப்பதன்மூலம் ஏனைய நோயாளியைப் பாதுகாத்தல்.

★ ஜன்னல், கதவுச் சீலைகளை மருந்து தோய்வித்துப் பாவித்தல்.

*(02) நுளம்புப் பெருக்கத்தைத் தடைசெய்வது எப்படி?*

★ உங்கள் வீடு, பாடசாலை, தொழில்ஸ்தானம் ஆகியவற்றின் சூழலில் நுளம்பு பெருக்கமடையும் காரணிகளை அழித்தல்.

★ குப்பை கூளங்களை எரித்தலும், புதைத்தலும்.

★ தேவையற்ற போத்தல், பைகள, பிளாஸ்திக் கலன்களைப் புதைத்தல்.

★ மேசைக்கால்களின் அடியிலுள்ள பாத்திரங்களில், பூச்சாடி ஆகியவற்றில் சவர்க்காரம் அல்லது உப்புக் கரைத்துவிடல்.

★ கூரையில் போடப்பட்ட ரயர்களை மண்ணால் நிரப்புதல்.

★ வளர்ப்புப் பிராணிகளுக்காக வைக்கப்படும் நீரை ஒழுங்காக நாளாந்தம் அகற்றுதல்.

★ கூரைப்பீலிகளைத் துப்பரவு செய்து நீர் தடைப்படுதலைத் தவிர்த்தல்.

மேற்கூறப்பட்ட சுகாதார நடைமுறைகளை நாம் ஒவ்வொருவரும் எமது சூழலில் மேற்கொண்டு 'டெங்குக் காய்ச்சலிலிருந்து' பாதுகாத்துக்கொள்ள திடசங்கற்பம் கொள்வோம்.

*"நோய்நாடி நோய் முதல் நாடி - அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்.*

**வெளியீடு: சுகாதார சேவைகள் பணிமனை**

# மக்கள் முகம்



வட்டு.கிழக்கு, சித்தன்கேணியைச் சேர்ந்த செல்லையா ஜெயானந்தம், நீதிவான் பா.பாலசுப்பிரமணியம் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர், வழக்கம்பரை முத்துமாரி அம்மன் ஆலயம், சித்தங்கேணி சிவசிதம்பரேஸ்வரர் ஆலயம், சித்தங்கேணி மகாகணபதிப் பிள்ளையார் ஆலயம், ஆகியவற்றில் நிர்வாக சபைகளில் உறுப்பினராகவும் பதவிவகித்து வருகின்றார். (எ)

* * *



ஏழாலை கிழக்கு ஜசிந்தா இல்லத்தைச் சேர்ந்த நாகமணி அரியரத்தினம் அண்மையில் மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி ச.இளங்கோவன் முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி, பேராதனைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் பழைய மாணவரான இவர், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இளைஞர் ஒன்றியத்தின் முதலாவது தலைவரும், பல்கலைக்கழகத்தில் இருந்து வெளிவந்த 'தமிழ் இளைஞன்' பத்திரிகையின் பதிப்பாசிரியரும் ஆவார்.

கொழும்பு சென்.பீற்றேஸ் கல்லூரியிலும், வெளிநாடுகளிலும் ஆசிரியராகக் கடமையாற்றிய இவர், தற்போது ஏழாலையில் பகுதிநேர ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றி வருகின்றார். (எ)


* * *



யாழ். சைவ பரிபாலன சபை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நினைவு தினத்தை முன்னிட்டு அண்மையில் நடத்திய யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான பேச்சுப் போட்டியில் கீழ்ப்பிரிவில் பிரான்பற்று கலைமகள் வித்தியாலய மாணவன் செல்வன் த.சிவரூபன் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

இவர், கடந்த 14.12.2003 அன்று நடைபெற்ற நாவலர் குருபூசை தின விழாவில் தங்கப் பதக்கம் சூட்டப்பட்டு பாராட்டப்பட்டார். (எ-135)


* * *



ஆனைக்கோட்டையைச் சேர்ந்தவரும் யாழ். மத்திய கல்லூரியின் முன்னாள் சிரேஷ்ட ஆங்கில ஆசிரியரும், தற்போதைய பகுதிநேர ஆங்கில ஆசிரியருமாகிய பிரம்மஸ்ரீ ச.கருணானந்தசர்மா அண்மையில் மாவட்ட மேலதிக நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர், வேதாகம குருகுலத்தின் பகுதிநேர ஆங்கில ஆசிரியரும் சிறந்த சமூக சேவையாளரும், மொழிபெயர்ப்பாளரும், இலத்திரனியல் விற்பன்னருமாவார். (எ-100)


* * *



கோண்டாவில் நாராயணன் வீதியைச் சேர்ந்த அரியகுட்டி கந்தசாமி அண்மையில் யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

யாழ். பல்கலைக்கழக ஊழியரான இவர், கோண்டாவில் நாராயண கிராம முன்னேற்றச் சங்கத்தின் உபதலைவராகவும், விளையாட்டுச் செயலாளராகவும் இளைஞர் முன்னேற்றக்கழகத்தின் தலைவராகவும் பதவிவகித்துள்ளார். (எ-15)


* * *



தென்புலோலியைச் சேர்ந்த நாடகச்சக்கரவர்த்தி பரம்சோதி பரராஜசிங்கம் (பப்பா) யாழ். மாவட்ட நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் அண்மையில் அகில இலங்கைச் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

துன்னையூர் கலாசார கலாமன்றச் செயலாளராகவும், அகில இலங்கை இளங்கோ கழக ஆலோசகராகவும், புலோலி அபிவிருத்திக் கழகத் தலைவராகவும், குருக்கட்டு சித்திவிநாயகர் கலாமன்றத் தலைவராகவும் பதவிவகித்துவரும் இவர், நாடகத்துறையில் பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார். (எ-173)

* * *




புலோலி வடகிழக்கு, பருத்தித்துறையைச் சேர்ந்த நாதன் சின்னையா நீதியமைச்சினால் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டு மேலதிக மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் முன்னாள் கணக்காளரான இவர், தற்போது புலோலி வடகிழக்கு கமக்காரர் அமைப்புச் செயலாளராகக் கடமையாற்றி வருகிறார்.

உத்திராபத்தை ஞானவைரவர் ஆலய நிர்வாகத்தில் பொருளாளராகவும் யாழ். மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் உபதலைவராகவும் இவர் பதவி வகித்துள்ளார். (எ-173)


* * *



காரைநகரைச் சேர்ந்த சபாபதி பத்மநாதன் அண்மையில் யாழ். மேலதிக நீதிவான் பா.சுப்பிரமணியம் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

காரைநகர் தியாகராஜா ம.மகா வித்தியாலயம், பரமேஸ்வராக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான இவர், முன்னாள் கிரிக்கெட் மத்தியஸ்தரும், இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபருமாவார். (எ)


* * *



ஆனைக்கோட்டை உயரப்புலத்தை வசிப்பிடமாகக் கொண்ட சிலுவைராசா ஞானசீலன் அண்மையில் யாழ். நீதி, நிர்வாகப் பிரிவுக்குட்பட்ட சமாதான நீதிவானாக மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணஞ் செய்துகொண்டார்.

யாழ். பிரதம தபாலகத்தில் பிரதிப் பிரதம தபாலதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற இவர், நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபை உறுப்பினராகவும், ஆனைக்கோட்டை உயரப்புலம் ஐக்கிய சனசமூக நிலையத்தின் உப தலைவராகவும் பணியாற்றி வருகிறார். இவர், யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ)

* * *



பூநகரி ஞானிமடத்தைச் சேர்ந்தவரும், ஜெயபுரத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான இராமுப்பிள்ளை செல்வராசா சாவகச்சேரி நீதி, நிர்வாக மாவட்டத்துக்குரிய சமாதான நீதிவானாக அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

ஜெயபுரம் வழிப்பிள்ளையார் ஆலயத்தின் பரிபாலன சபைத் தலைவரான இவர், ஞானிமடம் அ.த.க. பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பூநகரி கமநல சேவைகள் நிலையம், ஞானிமடம் கமக்காரர் அமைப்பு ஆகியவற்றில் முக்கிய பதவிகளை வகித்துவருகின்றார். அத்துடன், பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச் சபை உறுப்பினராகவும் உள்ளார். (எ)

## புகையிலைச் செய்கையில் விவசாயிகள் நாட்டம்

அரியாலை,டிசெ.20

வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தில இம்முறை புகையிலைப் பயிர்செய்கையை மேற்கொள்வதில் விவசாயிகள் அதிக நாட்டம் கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நீர்வேலி, கோப்பாய் போன்ற பகுதிகளில் அதிகளவான புகையிலைக் கன்றுகள் இந்தத் தடவை நடுகை செய்யப்பட்டுள்ளன.

மேலும், புகையிலைக் கன்றுகளை நடுகைசெய்யும் பொருட்டு விவசாயிகள் தமது தோட்ட நிலங்களை உழுது சீர்செய்து வருகின்றனர். (எ-17)

## தவறணையில் தகராறு; ஒருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம்,டிசெ.20

தவறணையில் ஏற்பட்ட தகராறின போது போத்திலை உடைத்துக் குத்தியதில் ஒருவர் படுகாயமடைந்தார்.

ஓட்டுமடம் கள்ளுத்தவறணையில கடந்த புதனன்று இடம்பெற்ற இச்சம்பவத்தில், தவறணையில் விற்பனை முகாமையாளராகப் பணியாற்றும் கொக்குவிலைச் சேர்ந்த எஸ்.நித்தியானந்தன் (வயது 48) என்பவரே படுகாயமடைந்தவர் ஆவார். படுகாயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-6-7-15)

## சரசவி...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாம் வேலைவாய்ப்புப் பெற்றுக்கொடுக்கவுள்ளோம்.

இதுவரை 'சரசவி சவிய' வில் பதிவு செய்துகொள்ளாத பட்டதாரிகள் எமது பிரதேச காரியாலயங்களில் தங்களின் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளலாம்.

- இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

'சரசவி சவிய' திட்டத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர் ஜேம்ஸ் டெம்டோ அங்கு தெரிவித்ததாவது:-

இந்தத் திட்டத்தின் மூலம் நாட்டில் வேலையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கையை வெகுவாகக் குறைக்கலாம். எமக்குள்ள பிரதான பிரச்சினை, எமது திட்டத்தில் பதிவுசெய்த பட்டதாரிகள் நாம் அறிவிக்கும் நேர்முகத் தேர்வுகளுக்கு சரியாக சமூகமளிப்பதில்லை என்பதே ஆகும். இந்தத்திட்டதின் மீது இளைஞர்களுக்குள்ள நம்பிக்கையீனமே இதற்குக் காரணம்.இந்தத் திட்டத்தின் மூலம் பட்டதாரிகள் தமது எதிர்காலத்திற்கான பாதையை வகுத்துக்கொள்ள முடியும் என்பதற்கு நாம் நூறு சதவீதம் உத்தரவாதம் அளிக்கிறோம்.

எம்மூடாகத் தனியார்துறையிடம் வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்பவர்களுக்கு எமது 'சரசவி சவிய' திட்டத்தின் மூலம் மாதாந்தம் 4 ஆயிரம் ரூபாவும் நியமனம் பெறும் நிறுவனத்தால் குறைந்த பட்சம் 2 ஆயிரம ரூபாவும் வழங்கப்படும் அத்தோடு, அவர்களுக்கு தொழில் சட்டங்களுக்கமைய நியமனப்பத்திரமும் வழங்கப்படும்.

எமது பதிவுசெய்யும் பிரதேச செயலகங்கள் அநுராதபுரம், கொழும்பு, பதுளை, நுவரெலியா, குருநாகல், மாத்தறை, இரத்தினபுரி, திருகோணமலை ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. பதிவுசெய்யக்கூடிய இடங்களை மேலும் விஸ்தரித்து வருகின்றோம். யாழ். வர்த்தக சங்கத்துடன் இது தொடர்பாக நாம் கலந்துரையாடியுள்ளோம். எமது திட்டத்தில் அங்கு பட்டதாரிகள் பதிவுசெய்வதற்கான வசதிகள் செய்துகொடுக்கப்படும்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இங்கு 'சரசவி சவிய' திட்டத்தின் மூலம் வேலைவாய்ப்புப் பெற்ற பட்டதாரிகள் சிலர் தமது அனுபவங்களைத் தெரிவித்தனர்.


**ஆங்கிலக் கல்லூரி**
சந்நிதி வீதி, அச்சுவேலி

**2004 ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கான**
- ▲ பொதுஅறிவு
- ▲ நுண்ணறிவு

ஆசிரியர்:- S.உதயம்
ஆரம்பம் - 22.12.2003 திங்கள் 9.00a.m.

▲ Spoken English With Grammar
Lect - By: B.Manoharan
ஆரம்பம்:- 22.12.2003 திங்கள் 8.00a.m.

▲ CIT யின் அடிப்படைக் கணனி வகுப்பு MS Office
ஆரம்பம்:- 20.12.2003 சனி (இன்று) 4.00p.m.

Directer
B.Manoharan



**உதயன் அனுசரணையுடன்**

**சட்டக்கல்லூரி நுழைவுப் பரீட்சை**

**அறிமுக வகுப்பு**

அடுத்த வருடம் செப்ரெம்பர் மாதம் இடம் பெறவுள்ள சட்டக்கல்லூரி நுழைவுப் பரீட்சைக்கான அறிமுக வகுப்பு யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது. பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புக்கள் குறித்த விவரம் அறிமுக வகுப்பில் அறிவிக்கப்படும்.

**காலம்:** நாளை (21.12.2003) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணி.

**இடம்:** 'உதயன்' நிறுவன கேட்போர் கூடம்.

நாளைய அறிமுகவகுப்பு 'உதயன்' நிறுவன அனுசரணையுடன் சட்ட மாணவர் இந்து மகா சபையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(C/32143)(34-12-16-25) - ஏற்பாட்டாளர்.


## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் சிவானந்தசுந்தரம்

(சிவில் சேவையாளர் - லண்டன்)

காசியம்மன் கோயிலடி, கட்டுவன், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட ஆ.சிவானந்தசுந்தரம் அவர்கள் 16.12.2003 செவ்வாய்க்கிழமை லண்டனில் காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சுந்தரம் தம்பதிகளின் அருமை மகனும் சிவமணியின் அன்புக் கணவரும் றொபின், ஆதி, அச்சு, அலன் ஆகியோரின் அருமைத் தந்தையாரும், பிறிச்செற்றின் அன்பு மாமனாரும் யக்ஷ்சன், சோபிகா, ஒளிவியா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற சிவனேசசுந்தரம் மற்றும் சிவஞானசுந்தரம் (சிங்கப்பூர்), மகேஸ்வரி, இராஜேஸ்வரி (கனடா) காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் யோகேஸ்வரி, ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்லம்மா (இந்தியா), றோகினி (சிங்கப்பூர்), பரமானந்தம் காலஞ்சென்ற நல்லையா மற்றும் மதியாபரணம் (லண்டன்), பாலச்சந்திரன், காலஞ்சென்ற குமாரலிங்கம் ஆகியோரின் அருமை மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2003) சனிக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சங்குவேலி மேற்கு,*
*மானிப்பாய்*
*லண்டன் T.P.No: 208 3959237*

தகவல்:
மகேஸ்வரி பரமானந்தம் குடும்பத்தினர்,
யோகேஸ்வரி பாலச்சந்திரன் குடும்பத்தினர்.




# 40 பேரைக் கொன்ற மருத்துவத் தாதி

அதிகமான மருந்தைக் கொடுத்து 40 நோயாளிகளைக் கொன்ற சார்லஸ் கியுலன் வயது 43 என்ற ஆண் தாதி கைதானார்.

பெத்லேஹம் சேர்ந்தவர் சார்லஸ் கியுலன். இவர் அமெரிக்காவில் பென்சில்வேனியா, நியுஜெர்சி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மருத்துவத் தாதியாகப் பணிபுரிந்துள்ளார். தான் பணிபுரியும் மருத்துவமனைகளில் நோயால் அதிகமாக சிரமப்படும் நோயாளிகளுக்கு அதிகப்படியாக மருந்து கொடுத்து இவர்கொன்று விடுவார். கடந்த 1987ஆம் ஆண்டு முதல் இவர் இதுவரை 40நோயாளிகளை இதுபோன்று கொன்றுள்ளார்.

கடந்த ஜூன் மாதம் ரோமன் கத்தோலிக்க மதகுரு புளோரியான் கால் வயது 68 என்பவர் இருதய நோய் காரணமாக நியுஜெர்சி மருத்துவமனையில் சேர்ந்தபோது அவருக்கு 'டிக்கோசின்' என்ற மருந்தை அதிகப்படியாகக் கொடுத்து சார்லஸ் கொன்று விட்டார். இதைத் தொடர்ந்து சார்லஸ் கைதுசெய்யப்பட்டார்.

கடந்த 16 ஆண்டுகாலப் பணியில் 30முதல் 40பேர் வரை கொன்றுள்ளதை சார்லஸ் வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ளார். நியுஜெர்சி நீதிமன்றத்தில் சார்லஸ் மீது கொலை வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது. இவர்மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால் சார்லசுக்கு மரண தண்டனை வழங்கப்படும்.



நம்மைச் சுற்றிலும் 'ஆரா' என்ற ஒளிவட்டம் உள்ளதாக நம்பும் விஞ்ஞானிகள், அது பற்றி ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுவருகின்றனர். இந்த ஒளிவட்டங்கள் மனிதர்களின் குணாதிசயங்களைப் பொறுத்து மாறுபடுவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். உதாரணமாக தலைவர்களாக மிளிர்பவர்களைச் சுற்றி வெண்ணிற ஒளிவட்டம் காணப்படுமாம். இலை ஒன்றைச் சுற்றிக்காணப்படும் ஒளிவட்டத்தைப் படம் பிடிக்கும் முயற்சியில் விஞ்ஞானிகள் வெற்றி பெற்றுள்ளனர். ஒரு பொருளில் இருந்து வெளியாகும் கதிரியக்கமே இந்த ஒளி வட்டத்துக்குக் காரணம் என்று கருதப்படுகிறது.

## சினிமா பார்த்து சாதனை

ஜெர்மனியில் இடைவிடாமல் 67 மணிநேரம் திரைப்படம் பார்த்து அந்நாட்டு ரசிகர்கள் சாதனை செய்தனர்.

36 ரசிகர்கள் சேர்ந்துகொண்டு தெற்கு ஜேர்மனி, உவெர்ஸ்பர்க் நகரில் உள்ள ஒரு திரையரங்கில் கடந்த செவ்வாய்க்கிழமை திரைப்படத்தைப் பார்க்கத் தொடங்கினர்.

தொடர்ந்து 63மணி, 27நிமிட நேரம் திரைப்படம் பார்த்ததே சாதனையா இருந்தது. அதை முறியடித்து, 67 மணி நேரம் படம்பார்த்து ஜேர்மனி ரசிகர்கள் சாதனைபுரிந்தனர்.

கின்னஸ் சாதனை விதிகளின்படி அவர்கள் மூன்று படங்களுக்குப் பிறகு 15 நிமிடநேரம் ஓய்வு எடுத்துக் கொள்ளலாம். இந்த விதியை மீறியதால், மூன்று ரசிகர்கள் போட்டியிலிருந்து விலகிவிட்டனர்.

## இக்கரைச் சீமையிலே...



கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் புனித இடமான வத்திக்கான் நகரத்தில் உள்ள சென்.பீற்றர்ஸ் சதுக்கத்தில் கிறிஸ்துமஸ் பண்டிகையை ஒட்டி அமைக்கப்பட்ட பிரமாண்டமான பாரம்பரியம் மிக்க கிறிஸ்துமஸ் மரம், வண்ணமயமாக ஜொலிக்கிறது. 27 மீற்றர்கள் உயரம் கொண்ட இந்த மரம் 110 ஆண்டுகள் பழைமையானது.

# 78 ஆண்டுகளின் பின் கிடைத்த உறவு

அமெரிக்காவில் செனட்டராக இருந்த தர்மாண்டுவுக்கு தகாத உறவின் மூலம் பிறந்த பெண்ணுக்கு தர்மாண்டின் குடும்பத்தினர் அங்கீகாரம் அளித்துள்ளனர்.

அமெரிக்க செனட்டராக 48 ஆண்டு காலம் பணியாற்றியவர் தர்மாண்டு. வெள்ளையரான இவர் இனவெறியராக இருந்தார். தர்மாண்டு 22வயது இளைஞராக இருந்தபோது தன் வீட்டில் வேலை செய்த கறுப்பினப் பெண்ணான கேரிபட்லரிடம் தகாத உறவுகொண்டார். இதனால், அப்போது 16வயது பெண்ணாக இருந்த கேரிபட்லருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தையின் பெயர் எஸ்ஸிமா.

எஸ்ஸிமாவுக்கு தற்போது நான்கு குழந்தைகளும், 13பேரக்குழந்தைகளும், நான்கு கொள்ளுப்பேரன்களும் உள்ளனர். ஆயினும் தன்னுடைய தந்தை தார்மண்டு என இவ்வளவு காலம் தைரியமாக சொல்ல முடியாத நிலை இருந்தது. எஸ்ஸிமாவை அவர் தனது குழந்தை என பகிரங்கமாக அறிவிக்கவில்லை. இந்நிலையில் தனது 100வது வயதில தார்மண்டு சமீபத்தில் காலமானார்.

அதன்பின்னர் தர்மாண்டு குடும்பத்தினர் எஸ்ஸிமா, தர்மாண்டுவுக்கு பிறந்தவர்தான் என்பதை வெளிப்படையாகத் தற்போது ஒப்புக் கொண்டுள்ளனர். இந்த விஷயம் அமெரிக்க பத்திரிகைகளில் வெளியானது. இந்தச் செய்தியை கேள்விப்பட்ட எஸ்ஸிமா, 78ஆண்டுக்கு பிறகாவது இந்த அங்கீகாரம் கிடைத்ததே என சந்தோஷப்படுகிறார். இப்போது எனது குழந்தைகளும், பேரக்குழந்தைகளும் தர்மாண்டின் பேரக்குழந் தைகள் என்ற அந்தஸ்தைப் பெற்றுள்ளனர் என பெருமைப்படுகிறார் எஸ்ஸிமா.

இருப்பினும் தர்மாண்டின் சொத்துக்களில் ஒரு டொலர்கூட எனக்குத் தேவையில்லை என்கிறார் எஸ்ஸிமா.

தொகுப்பு : மதுமிதா




## இயக்குநர் மாதவன் காலமானார்

பழம்பெரும் தமிழ்த் திரைப்பட இயக்குநர் பி.மாதவன் வயது75 சென்னையில் காலமானார்.

அவருக்கு மனைவி சாந்தி, மகன்கள் பிரசாத், அருண்குமார், மகள்கள் சுபா, ஷோபா ஆகியோர் உள்ளனர்.

'மணியோசை' படத்தின் மூலம் இவர் இயக்குநராக அறிமுகமானார். எங்க ஊர் ராஜா, பாட்டும் பரதமும், தங்கப்பதக்கம், பட்டிக்காடா பட்டணமா உட்பட சிவாஜி கணேசனை வைத்து பல வெற்றிப்படங்களை இயக்கியவர்.

இவர் 50 படங்களை இயக்கியுள்ளார். சொந்தமாக படநிறுவனமும் நடத்தி வந்தார். திரைப்படக் கல்லூரி முதல்வராகவும் இருந்துள்ளார்.

# இறந்த சிறுமி மீளவில்லை ஜோதிடருக்கு அடி உதை

இறந்த 12வயதுச் சிறுமி உயிரோடு வருவதாகக் கூறப்பட்ட அதிசயம் நிகழாததால் ஆத்திரமடைந்த பொதுமக்கள் வன்முறையில் ஈடுபட்டனர்.

இந்தியாவின் ஆந்திர மாநிலம் பெரம்மனைகானஹள்ளியில் வசிக்கும் கமலாமஞ்சேகௌடவின் மகள் ஸ்வேதா 12 வயது

ஸ்வேதா திடீரென்று உடல்நிலை பாதிப்புற்று இறந்தாள். அவளது சடலம் புதைக்கப்பட்டது.

ஸ்வேதா இறந்ததற்கான காரணம் என்ன என்று ஜோதிடர் பாக்யாவிடம் அவரது பெற்றோர் கேட்டனர்.

பாவத்தினால் ஸ்வேதா இறந்தாள். என்றாலும் பூஜை செய்து ஸ்வேதாவை உயிரோடு வரவழைக்க முடியும் என்று பாக்யா கூறினாராம். இதையடுத்து பூஜைக்கு ஏற்பாடு செய்து நடத்தப்பட்டது.

கடந்த 16ஆம் திகதி ஸ்வேதா மீண்டும் உயிர் பெற்று வருவார் என்று ஜோதிடர் கூறியதால் அன்று சுற்றுப்புற கிராமங்களிலிருந்தும் நூற்றுக்கணக்கானோர் பாக்யாவின் வீட்டிற்கு முன் கூடினர்.

ஸ்வேதா இறந்தது இரவு 11.30 மணி. இதனால், ஸ்வேதா மீண்டும் உயிரோடு இரவு 11.30 மணிக்கு வருவாள் எனக் காத்திருந்தனர். ஜோதிடர் பூஜையை ஆரம்பித்தார்.

நள்ளிரவானது. 6ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் அப்போது குழுமியிருந்தனர். இரவு 11மணிக்கு பூஜையைத் துவக்கினார் பாக்யா. 11.30 மணியாகியும் ஸ்வேதா வரவில்லை.

அப்போது வீட்டுக்குள் செல்கிறாள் ஸ்வேதா என்று அறிவித்தார் பாக்யா.

அப்போது அங்கு குழுமியிருந்தோர் மஞ்சேகௌட வீட்டுக்குள் நுழைந்தனர். கூட்டத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆனால் வீட்டில் ஸ்வேதா இல்லை. இது கூடியிருந்தோருக்கு கோபத்தை ஏற்படுத்தியது.

பாக்யா ஏமாற்றியதை அறிந்து அந்த வீட்டை சூறையாடி வீட்டுக்குத் தீ வைத்தனர். ஜோதிடர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் உள்ளார்.



பிரபல ஓவியர் பிகாசோவின் ஓவியங்கள் இன்னும் உலகம் முழுவதும் அமோக வரவேற்பை பெற்றுள்ளன. ஸ்பெயின் நாட்டில் அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டதன் ஆண்டுவிழாவையொட்டி பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மாணவருக்கான ஓவியப்போட்டியும் நடைபெற்றது. ஏர்முவா பகுதியில் பாஸ்கி கிராமத்தில் திறந்தவெளி மைதானம் ஒன்றில் நூற்றுக்கணக்கான மாணவர் ஒன்று சேர்ந்து பிகாசோவின் ராட்சத ஓவியம் ஒன்றை வரைந்தனர்.

## விரசக் கவிஞர்கள் வீடுகளில் போராட்டம் நடத்தத் திட்டம்


தமிழர்களின் கலாசாரம், பண்பாட்டைச் சீரழிக்கும் வகையில் திரைப்படங்களில் விரசமான பாடல்கள் எழுதுவோரின் வீட்டுக்குச் சென்று போராட்டம் நடத்தத் திட்டமிட்டுள்ளோம் என்று பா.ம.க. மற்றும் பொங்கு தமிழ் வளர்ச்சி அறக்கட்டளையின் நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற பண்ணிசைப் பெருவிழாவின் நிறைவுவிழாவில் அவர் பேசியதாவது:-

பல திரைப்படப் பாடல்கள் கொச்சைத் தமிழிலும், ஆங்கிலம் கலந்தும், இருபொருள் உணர்த்தும் விரசங்களாகவும் இருந்து வருகின்றன.

இது குறித்து பலமுறை கோரிக்கை விடுத்தும் திரைப்படத் துறையினர் தங்கள் போக்கை மாற்றிக் கொள்ளவில்லை. இந்நிலை தொடர்ந்தால் அத்தகைய பாடல்களை எழுதுவோர் வீட்டிற்கே சென்று போராட்டங்களை நடத்தி, இனிமேல் விரசப் பாடல்களை எழுதமாட்டோம் என்று அவர்களிடம் உறுதிமொழி பெறத் திட்டமிட்டுள்ளோம் - என்றார்.

பந்து விளையாடும் இந்த ரோபோ, ஜப்பானின் சோனி நிறுவனம் இதைத் தயாரித்துள்ளது. உலகில் ஓடும் திறன் படைத்த முதல் ரோபோ இதுதான். டோக்கியோவில் சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.



# யாழ். பல்கலை அபிவிருத்திக்கு 10 கோடி ரூபா உடன்தேவை

யாழ்ப்பாணம்,டிசெ.20

யாழ். பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய அவசரப் புனரமைப்புப் பணிகளுக்கு பத்துக்கோடி ரூபா தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பில் நாடாளுமன்றக் கட்டடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த கூட்டம் ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

யாழ் பல்கலைக்கழக அபிவிருத்தி குறித்து ஆராய்வதற்காக மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சர் கபீர் காசிம் தலைமையில் இக்கூட்டம் இடம்பெற்றது.

யாழ். மாவட்டக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் மற்றும் கல்வியமைச்சு அதிகாரிகள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

யாழ் பல்கலைக்கழகப் பொறியியல் மற்றும் விவசாய பீடங்களை கிளிநொச்சியில் இயககுவதற்கும் வவுனியா, வளாக அபிவிருத்திக்கும், மாணவர் விடுதிகளுக்கும் கட்டடங்களை அமைக்கப் பத்துக் கோடி ரூபா தேவையென கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

பல்கலைக்கழகத்தில் ஏற்பட்டுள்ள துறைசார் கல்வியாளர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய ஓய்வு பெற்றவர்களுக்கு மீள் நியமனம் வழங்குவது குறித்து ஆராயப்பட்டது.

மருத்துவத்துறைக்கான பல்கலைக்கழக அனுமதியில் வவுனியா மாவட்டத்தில் வெட்டுப்புள்ளி உயர்வாக இருப்பதால் மாணவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த வெட்டுப்புள்ளியைக் குறைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

பல்கலைக்கழக நிர்வாகத்தைச் சீராக மேற்கொள்ள வசதியாக கூடுதல் வாகனங்களை வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது. (ஒ-3)

## கண்ணீர் அஞ்சலி

**எமது பாடசாலையிலிருந்து ஓய்வுபெற்ற ஆசிரியையும் கொழும்பு பழைய மாணவர் சங்க ஸ்தாபகருள் ஒருவருமான**

**திருமதி புஷ்பமணி சுப்பிரமணியம்**

அவரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவிகள்,
*அலுவலக ஆளணியினர்.*
*யாழ். இந்து மகளிர் கல்லூரி.*

(26067)(35-13-14-31)

## நீங்காத துயரின் 41ஆம் நாள் நினைவஞ்சலி

| காலத்தால் | | அகாலத்தால் |
|---|---|---|
| 08 . 05 . 1945 |  | 10 . 11 . 2003 |

**அமரர் இராமநாதன் ஜெயசிங்கம் J.P.U.M.**
**(Attorney-At-Law, Notary Public & Commissioner of Oaths)**
**(20.12.2003)**

சட்டத்தரணி இரா. ஜெயசிங்கம் அவர்களின் விபத்து நடந்தவேளையில் அவருக்கு உதவிபுரிந்தவர்களுக்கும், வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றவர்களுக்கும் அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் வைத்திருந்த ஆறு நாள்களிலும், இல்லத்துக்கு வருகைதந்து வழிபாடு நடத்திய குருக்கள், கன்னியர், சகோதர சமயத்தினர், புனித அன்னாள் ஆலய சமூகத்தினர், பாடசாலைச் சமூகத்தினர் மற்றும் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய யாழ். மாவட்ட நீதிமன்ற நீதிபதிகள், சட்டத்தரணிகள், நீதிமன்ற உத்தியோகத்தர், வடமாநில வங்கி முகாமையாளர்கள், ஊழியர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மேலதிக காணிப்பதிவாளர், காணிப்பதிவு உத்தியோகத்தர், அஞ்சல் திணைக்கள அதிபர், ஊழியர்கள், S.D.S. Computer ஊழியர்கள், தொலைபேசி, பத்திரிகைகள் மற்றும் தந்தி மூலமாக அநுதாபம் தெரிவித்தவர்கள், பிற நாடுகளில் இருந்தும் வெளி மாவட்டங்களிலும், தூர இடங்களிலும் இருந்து வந்து கலந்துகொண்டவர்களுக்கும், அவரது இறுதி யாத்திரையை முன்னின்று நடத்திய யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர்களுக்கும், இறுதி திருப்பலி ஒப்புக்கொடுத்த அருட்தந்தையர்க்கும் இதில் கலந்துகொண்ட அருட் சகோதரிகளுக்கும் பாடகர் குழாம் முதலியோருக்கும் இலைமறைகாயாய் நின்று உதவி செய்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

\- குடும்பத்தினர்.

*96, சந்தனமாதா வீதி,*
*கண்டிக்குளி, யாழ்ப்பாணம்.*

(26081)(31-13-14)

## மரண அறிவித்தல்

### திருமதி நடராசா கனகம்மா

புங்குடுதீவு. 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் பத்திரகாளி அம்மன் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா கனகம்மா நேற்று (19.12.2003) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவரான மருதப்பு நடராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பையா - கண்மணி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மருதப்பு - தெய்வானை தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் மகேஸ்வரி, செல்லம்மா, காலஞ்சென்ற பூரணம், அமிர்தம்மா மற்றும் யோகாம்பிகை, சரோஜினிதேவி, தவக்குமார் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2003) சனிக்கிழமை நண்பகல் 12மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சுழிபுரம், திருவடி நிலை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
S.அருணாசலம் (மருமகன்),
தவக்குமார் (சகோதரன்).

*சுழிபுரம் மத்தி,*
*சுழிபுரம்.*

(26075)(14-13-31)

## விஞ்ஞானபீட மாணவருக்கு!

யாழ்ப்பாணம்,டிசெ.20

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர்களுக்கான அவசரக் கலந்துரையாடல் ஒன்று நாளைமறுதினம திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பீடத்தின் பிரதான மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் விஞ்ஞான பீட மாணவர் அனைவரையும் சமுகம அளிக்கும்படி விஞ்ஞானபீட மாணவா ஒன்றியம் கேட்டுள்ளது. (ஒ-3)

## கூட்டுறவு அச்சகம் விரைவில் நவீனமயம்

அரியாலை,டிசெ.20

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அச்சகத்தை நவீன வசதிகளுடன் கணனி மயப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகச் சங்கத் தலைவர் சூ.சிறில் தெரிவித்தார்.

தற்போது சங்கத்தின் நிர்வாகப் பகுதியின் பணிகள் பகுதி பகுதியாகக் கணனிமயப்படுத்தப்பட்டு வருகின்றன. யாழ். ஸ்ரான்லி வீதியில் இயங்கிவரும் சங்கத்தின் அச்சகமும் அடுத்தாண்டில் நவீன வசதிகளுடன் கணனிமயப்படுத்தப்படவுள்ளது.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-17)

## வழிகாட்டல் வகுப்புகள்

குருநகர்,டிசெ.20

கணக்காளர் வகுப்பு 2 தரம் 2 பதவிக்கான ஆட்சேர்ப்புப் பரீட்சைக்கு இலவச வழிகாட்டல் வகுப்புகள் இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இவ்வகுப்புகள் யாவும் துறைசார்ந்தவர்களால் நடத்தப்படும். அக்கறை உள்ளவர்கள் வழிகாட்டல் வகுப்புகளில் கலந்துகொள்ளலாம் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளார்கள். (ஒ-51)

## சமுர்த்தி வங்கி திறப்புவிழா

கொடிகாமம்,டிசெ.20

தென்மராட்சிப் பிரதேசத்திற்குட்பட்ட சாவகச்சேரி சமுர்த்தி வங்கி திறப்பு விழா நாளைமறுதினம் திங்கட்கிழமை நண்பகல் 12மணிக்கு இடம் பெறவுள்ளது.

பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீநிவாசன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்விற்குப் பிரதமவிருந்தினராக மாவட்டத் திட்டப்பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை கலந்துகொள்வார்.

## மொழித்திறன் வகுப்புக் குறித்து ஆலோசனை

வரணி,டிசெ.20

மாகாணசபையின் அனுசரணையுடன் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் தற்போது நடைபெறும் சிங்கள மொழிப் பயிற்சி வகுப்பில் அரச உத்தியோகத்தர்கள் பங்குபற்றுகிறார்கள். அதிக எண்ணிக்கையானவர்களுக்கு வகுப்பு நடப்பதால் முறையான பயிற்சிகளைப் பெற அவர்களால் முடியாது உள்ளதாகக் கூறப்படுகிறது. இவ்வகுப்பை இரண்டு பிரிவுகளாக நடத்தும் பட்சத்தில் அதிக பயன்கிட்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-170)

## இடமாற்றம்

தென்மராட்சி,டிசெ.20

யாழ். பிராந்திய உதவி உள்ளுராட்சி ஆணையாளராகக் கடமையாற்றிய ரி.வி.கிருஷ்ணசாமி முல்லைத்தீவுக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவுப் பிராந்திய உதவி உள்ளுராட்சி ஆணையாளர் வீ.இராசையா யாழ்ப்பாணத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளுராட்சி திணைக்களம் இந்த இடமாற்றங்களை மேற்கொண்டுள்ளது. (ஒ-117)

## தவறிவிட்டது

சந்நிதி வீதி, பத்தமேனி, அச்சுவேலியைச் சேர்ந்த பிரான்சிஸ்பிள்ளை அன்ட்ரூ ஜெயசீலன் என்பவருடைய கைபடக்கத் தொலைபேசி நொக்கியா (சுவிஸ்கொம்), நேற்று கல்வியங்காட்டிலுள்ள மதுபானசாலை முன்பாகத் தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க் காணும் முகவரிக்கு தகவல் தரவும்.

பிரான்சிஸ்பிள்ளை
அன்ட்ரூ ஜெயசீலன்.
சந்நிதி வீதி, பத்தமேனி,
அச்சுவேலி.

(26070)(35-13-14-31)



தீவுப்பகுதிகளைச் சேர்ந்த ஊனமுற்றோர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் தொண்டர்களுக்கான பயிற்சிநெறி அண்மையில் வேலணை பல நோ.கூ.சங்க மண்டபத்தில் நடைபெற்றது. பயிற்சி நெறியை ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவுக்கான கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் க.ஸ்ரீபதி மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதைப்படத்தில் காணலாம். மேலதிக அரச அதிபர் திருமதி ப. திலகநாயகம், சமூகசேவை அலுவலர்களான எஸ்.கிருபாகரன், எஸ். தபேந்திரன், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சுந்தரலிங்கம் ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

*(படம்:- கொக்குவில் செய்தியாளர்)*

## கூறுவிலை கோரல்

### யா/மகாஜனக்கல்லூரி- தெல்லிப்பழை

**மகாஜனக்கல்லூரி தேநீர்ச்சாலை நடத்துவதற்கு கூறுவிலை கோரப்பட்டுள்ளது. கூறுவிலை கோருவோர் 29-12-2003 திங்கட்கிழமை காலை 11 மணிக்கு கூறுவிலைகளுடன் அதிபரைக் கல்லூரியில் சந்திக்கவும்.**

வை.சிவராசா
செயலாளர்(பா.அ.ச). (26073)(36-18-14-31)

பொ.சுந்தரலிங்கம்
அதிபர்

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவபாக்கியம் யோகசுந்தரம்

திருமதி சிவபாக்கியம் யோகசுந்தரம் அவர்கள் 28.11.2003 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் மீசாலை மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சுப்பிரமணியம் யோகசுந்தரத்தின் அன்பு மனைவியும் சின்னையா - செல்லாச்சியின் மகளும் காலஞ்சென்ற பொன்னம்பலம் (ஆசிரியர்), பரமேஸ்வரி(கனடா), இரத்தினபூபதி (மீசாலை), நாகராசா (சாவகச்சேரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவயோகம் (கனடா), சிவசாந்தி (சுவிஸ்), சிவயோகி (கனடா), சிவரூபி (கனடா), யோகானந்தி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் வில்லியம் றோபேட்(கனடா), தர்மகுலசிங்கம் (சுவிஸ்), சுந்தரலிங்கம் (கனடா), கிருஷ்ணமூர்த்தி (கனடா), காந்தன் (லண்டன்), அழகன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்ற நவரத்தினம் சிவபாக்கியம் நல்லம்மா, சரஸ்வதி (லண்டன்), சுப்பிரமணியம் (கனடா), சற்குணநாதன் (T.A.மீசாலை), இராசேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05.12.2003 அன்று கனடாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி இரத்தினபூபதி
சற்குணநாதன்.

மீசாலை. (26054)(35-21-16)

### சின்னத்தம்பி மயில்வாகனம்

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் புளியங்கூடலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி மயில்வாகனம் அவர்கள் 18.12.2003 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் பார்வதிப்பிள்ளை (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் தணிகாசலம், தையல் அம்மை (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற செல்லையா - அன்னப்பிள்ளையின் அன்பு மருமகனும் ஞானாம்பிகை (ஜேர்மனி), ஞானசேகரம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஞானசௌரி மற்றும் ஞானேஸ்வரி (புளியங்கூடல்), ஞானசக்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சண்முகராஜா (ஜேர்மனி), மைதிலி (பிரான்ஸ்), செபாஸ்கரன் (புளியங்கூடல்), பாஸ்கரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் டிவொயினி, சுஸ்மினி (ஜேர்மனி), விதுசா, விதுசன் (புளியங்கூடல்), வினோசன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேரனும் நாகேஸ்வரி, சிற்றம்பலம், அன்னலட்சுமி, புவனேஸ்வரி (கொழும்பு), பரமேஸ்வரி (ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி, பாலசிங்கம் மற்றும் துரைபாலசிங்கம் (கோப்பாய்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஞானேஸ்வரி (மகள்).

*புளியங்கூடல்.* (26066)(35-13-14-31)

### கந்தையா சுப்பிரமணியம் (மணியம்)

அச்சுவேலி, வளலாய் மேற்கைப் (வடகாடு) பிறப்பிடமாகவும் சந்நிதிவீதி, வருணன், அச்சுவேலியை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (19-12-2003) வெள்ளிக்கிழமை காலை 9.05 மணியளவில் இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரு கந்தையா-சின்னப்பிள்ளை தம்பதிகளின் ஏகபுத்திரனும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை - சின்னம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற சரஸ்வதிப்பிள்ளையின் அன்புக் கணவரும் கமலேஸ்வரி (இந்தியா), கமலநாதன், கமலநாயகி (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் துரைராஜா (இந்தியா), செல்வராணி, சிவசுப்பிரமணியம் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20-12-2003) சனிக்கிழமை அச்சுவேலியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 1.00 மணியளவில் பத்தமேனி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு.சிவசுப்பிரமணியம் (மருமகன்),
அ.கமலநாதன் (மகன்).

*வருணன்,*
*அச்சுவேலி.* (26080)(32-13-14-31)

SALE பண்டிகைக்கால மலிவுவிற்பனை SALE

★ கவறிங் கோல்ட் நகைகள்,
★ மேக்கப் செற்,
★ பரத நாட்டிய செற்,
★ சாறி பேடர்,
★ லேஸ் நூல் வகைகள்

SALE 'கிறிஸ் மஸ் றீ' மற்றும் SALE

சோடனைப் பொருள்களை மிகவும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ள.

அம்பிகாபதி
(AMBIHAPATHY FANCY GOODS)
66, பெரியகடை, யாழ்ப்பாணம்.

(சி-32003) (25-12-16)


## பெற்றோல் தீப்பற்றி ஒருவர் படுகாயம்!

தென்மராட்சி,டிசெ.20

நிலத்தில் சிந்திய பெற்றோலை தீக்குச்சி எரித்து பார்த்த போது திடீரென தீப்பற்றிக் கொண்டதில், இளம் குடும்பஸ்தர் ஒருவர் எரிகாயங்களுக்கு இலக்கானார்.

கடந்த புதனன்று மாலை கச்சாய தெற்கில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த சேதுலிங்கம் அற்புதநாதன் (வயது 25) என்பவரே எரிகாயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஜெனரேற்றருக்குள் பெற்றோல் விட்டபோது பெற்றோல் கான் கீழே தவறி வீழ்ந்து நிலத்தில் சிந்தியதாகவும் -

நிலத்தில் சிந்திய பெற்றோலைப் பார்க்க தீக்குச்சியை எரித்தபோதே தீப்பற்றி தொடை மற்றும் மம உறுப்பு ஆகியவை எரிகாயங்களுக்கு உள்ளானதாகவும் தெரிவிக்கப்பட்டது.(எ-117)

## நடமாடும் விற்பனை நிலையத்தில் சோதனை

சாவகச்சேரி,டிசெ.20

சாவகச்சேரி நகரில் சுகாதார விதிகளைப் பின்பற்றாமல் சிற்றுண்டி வகைகளைத் தயாரித்து விற்பனை செய்த நடமாடும் வியாபார நிலையம் ஒன்று கடந்த வியாழனன்று நகர சுகாதாரப பரிசோதகரின் திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இதன்போது சுகாதாரத்திற்குக் குந்தகம் விளைவிக்கக் கூடிய வகையில் உணவுப்பொருள்கள் தயாரிக்கப்பட்டு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதுடன் பொருள்களும் பறிமுதல் செய்யப்பட்டன. இதனுடன் தொடர்புபட்ட நடமாடும் வியாபார நிலையத்தின் உரிமையாளரும் எச்சரிக்கையின் பின்னர் விடுதலை செய்யப்பட்டார். (எ-31)


## சிறுவர் உளநலத்திற்கு உதவுதல்

விடயம்: ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களுக்கான உளவளத்துணை பயிற்சியில் சித்தியடைந்தோர்களுக்கு யாழ்.பல்கலைக் கழக புறநிலைப்படிப்புகள் அலகின் மூலமாக சான்றிதழ் வழங்கும் வைபவம்.

இடம்: கைலாசபதி அரங்கு

காலம்: நாளை (21.12.2003) ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.30 மணி

சான்றிதழ் வழங்குபவர்:
யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர்
பேராசிரியர் சு.மோகனதாஸ் அவர்கள்

கலைநிகழ்வு: "நான் யார்க்கும் சொல்லவில்லை"

※ ஆர்வலர்கள் அனைவரும் கலந்துகொள்ளலாம்.

GTZ-BESP-BECAre,
Vavuniya. (26038)(34-12-16)

சாந்திகம்,
15, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.



பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின புதிய தலைமைப் பணிமனைக் கட்டடத்தின் கீழ்தளம் நிர்மாணிப்பதற்கான

## கூலி வேலைக்கான கூறுவிலை கோரல்

மாடிக்கட்டடங்களை நிர்மாணிப்பதில் அனுபவமுடைய கூலி ஒப்பந்தகாரர்களிடமிருந்து மேற்படி பணிமனை நிர்மாணிப்பதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது.

தகுதியுடையோர் சங்கத்தால் விநியோகிக்கப்படும் கேள்விப் பத்திரத்தினைப் பெற்று பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்தினை எதிர்வரும் 15.01.2004இற்கு முன்னதாக தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்கலாம். மேலதிக விவரங்களை சங்கத்தின் தலைமைப் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

– பொதுமுகாமையாளர்

கிராமக்கோட்டடி,
புலோலி.

(C/32130)(35-12-21)



INFORMATION TECHNOLOGY PARK
MINISTRY OF REHABILITATION, RESETTLEMENT & REFUGEES.
National Housing Secretariat Building (in front of Kacheheri),
Kandy Road, Jaffna, Sri Lanka.

## தொழில்சார் பயிற்சிநெறி வழங்கல்

குறுகிய காலத்துள் குறைந்த கட்டணங்களில் நிறைந்த பலனைப் பெற்றுக்கொள்வதற்கு அரிய சந்தர்ப்பம்

பின்வரும் தொழில்சார் பயிற்சி நெறிகளை எமது நிறுவனம் 2004ஆம் ஆண்டிற்கான மேலும் புதிய பயிற்சி நெறியாக அறிமுகப்படுத்தவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

இப் பயிற்சிநெறிகளைப் பூர்த்திசெய்வதன்மூலம் சுயமாகவோ அல்லது இத்துறை சார்ந்த தொழில்நிறுவனங்களில் தொழில்புரிபவராயின் மேலும் வினைத்திறமையுடன் எதிர்காலத்தை வளப்படுத்த முடியும்.

### தொழில்சார் பயிற்சி நெறிகள்

1. Computer Application Assistant
2. Desktop-Publisher
3. Data Entry Operator
4. Graphic Designer
5. Web Page Designer
6. Hardware Technician
7. Network Administrator
8. Programmer
9. Internet Browsing Center Operator
10. Personal Assistant / Secretary

மாதிரி விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்திசெய்து எதிர்வரும் ஜனவரி மாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் மேற்படி முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மாதிரி விண்ணப்பப் படிவம்

முழுப்பெயர் : ..................
முகவரி: .................. வயது ..........
கல்வித்தகைமை: ..................
..................
தெரிவுசெய்யும் பயிற்சிநெறி : ..................

தொழில் புரிபவராயின்

தொழில் வகை: ..................
தொழில்செய்யும் முகவரி: ..................
தொழில் செய்யுமிடத்து அதிகாரியின் அத்தாட்சி:

குறிப்பு: ஒவ்வொரு பயிற்சிநெறிகளுக்குரிய மாணவர் தொகை 20ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தகவல்:பணிப்பாளர் தொலைபேசி:021-222 3641, 3643



சேவை நலன் பாராட்டு விழா

61ஆவது அகவையில் | 60ஆவது அகவையில்





செல்லையா செல்வரத்தினம்
(செயலாளர்)

சுப்பையா குருக்கள் ஸ்ரீதரசர்மா
(பிரதம எழுதுநர்)

நல்லூர் பிரதேச சபையின் முதுகெலும்பாக இருந்து சபையின் வளர்ச்சிக்கும், உயர்வுக்கும் அரும் பணியாற்றி எமக்கெல்லாம் ஊக்கமும், ஆக்கமும் தந்து சிறப்புடனே நாம் பணியாற்றிட வைத்த எமது அன்புக்கும், பெரு மதிப்பிற்கும் உரிய பெருந்தகைகளே உங்களை என்றும் எம் வாழ்நாளில் மறவோம். நீவிர் இருவரும் எங்கிருந்தாலும் சகலநலன்களும் பெற்று வாழவேண்டுமென்று இறைவனை இறைஞ்சி வாழ்த்தி விடை கூறுகின்றோம்.

(26035)(34-21-17-12) அன்புடன் வாழ்த்தும்: நல்லூர் பிரதேச சபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.



## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 19 - 08 - 1925



மறைவு 30 - 12 - 2002

திருமதி
### மங்கையர்க்கரசி நவரத்தினம்
(கோப்பாய் மத்தி)

அன்போடும் பண்போடும் எமை ஆதரித்து
அரவணைத்த அன்னையே!
பண்பு பாசம் அறிவு புகட்டி உலகம்
போற்றிட வாழ்ந்தீரே!
ஆயிரம் சொந்தங்கள் அவனியில் இருந்தாலும்
அம்மா என்றழைக்க நீங்கள் இல்லையே!
ஆறாத்துயரில் எமை ஆழ்கவிட்டு – நீங்கள்
மீளாத்துயில் கொண்டு ஓராண்டு சென்றதம்மா!
உம் நினைவு எம் உள்ளத்தில் – என்றும்
நிலைத்து மலரும் அம்மா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் உங்கள் நினைவுடன்:
குடும்பத்தினர்

V.T.S. லேன்,
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய் (25923) (34-21-12)



உதயன்



Lend a Hand

அனுசரணையுடன்
யாழ் றோட்டறிக்கழகமும்
நல்லூர் றோட்டரக்ட் கழகமும்
இணைந்து நடத்தும்

மரநடுகையும் ஊக்குவிப்பு போட்டியும்

போட்டியில் சமூக அமைப்புக்களும், பாடசாலைகளும் பங்குபற்றலாம்.
எம்மால் வழங்கப்படுகின்ற ஆகக்குறைந்தது பத்து மரங்களை நடுகைசெய்து அவற்றை ஒரு வருடத்திற்குப் பராமரித்தல் வேண்டும்.

காலம் : தை 2004 - தை 2005 வரை

நடப்பட்ட மரங்கள் நல்லூர் றோட்டரக்ட் கழகத்தால் மாதாந்தம் பார்வையிடப்பட்டு மதிப்பிடப்படும்.

| | |
|---|---|
| முதல் பரிசு | - ரூ. 5,000/= |
| இரண்டாம் பரிசு | - ரூ. 3,000/= |
| மூன்றாம் பரிசு | - ரூ. 2,000/= |

பங்குபற்ற விரும்பும் நிறுவனங்கள் 23.12.2003ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். மரங்கள் 27ஆம் திகதி விநியோகிக்கப்படும்.

இடம்: உதயன் பணிமனை, யாழ்ப்பாணம்.

குறிப்பு: போட்டியில் பங்குபற்றாத பொதுஸ்தாபனங்களும் விண்ணப்பித்து மரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

செயலாளர்,
நல்லூர் றோட்டரக் கழகம்,
மே/பா - சிவன் மோட்டோர்ஸ், ஸ்றோஸ்
70/1 மாணிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

செயலாளர்,
யாழ். றோட்டறிக் கழகம்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-32137) (34-17-12)

**Sale Sale Sale நெற் Sale Sale Sale**

**வருட இறுதி விலைக்கழிவு**

PI, PII, PIII, PIV வகையான சகலவித கணனி வகைகளையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளவும்.
சகலவிதமான MOBILE PHONE களைப் பெற்றுக் கொள்வதோடு Un Locking மற்றும் திருத்த வேலை களையும் உடனுக்குடன் செய்துகொள்ளவும்,
குறைந்த செலவில் குறுகிய காலத்தில் கணனிகளின் சகல விதமான திருத்த வேலைகளையும் செய்து கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்

**NET (PVT) LTD,**
34, சட்டநாதர் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி.இல: 021-2223786

20,000/=க்கு மேல் கொள்வனவுசெய்யப்படும் கணனிகளுடன் அன்பளிப்புக்கள் வழங்கப்படும்.
இந்தச்சலுகை டிசம்பர் 18-31 வரை மட்டுமே!

**NORTH EAST TECHNOLOGIES (NET)**

(C/32129) (35-21-12)


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 12 - 05 - 1920 | 22 - 12 - 2000 |

**அமரர் சிதம்பரப்பிள்ளை பொன்னையா**

திதி:20.12.2003

அன்பின் பிறப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய் எம்மை வாழவைத்த தந்தையே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நிரந்தர முகவரி: சிவன்கோயில் வீதி. எழுதுமட்டுவாழ் தெற்கு.
தற்காலிக முகவரி: சங்கத்தானை சாவகச்சேரி. (25980)(35-21-12-17)

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## மீளாத்துயரில் ஈராண்டு



| அன்னை மடியில் | இறைவன் அடியில் |
|---|---|
| 15 - 06 - 1935 | 21 - 12 - 2001 |

**அமரர் மரியாம்பிள்ளை வயிற்றஸ்**

(இளைப்பாறிய தபாலதிபர், நாவலயடி)

கண் விழித்த காலம் முதல்
கலைப் பொழுதும் பிரியாது
மனம் சிறக்க கல்வி தந்தீர்
மகிழ்வுடனே அரவணைத்தீர்
பொன் மொழிகள் பல பொழிந்தீர்
பொறுப்புணர்ந்து நடக்கச் செய்தீர்
அன்பான வாழ்வமைத்தீர்
அமைதியுடன் சென்று விட்டீர்
நினைவுகள் அடிநெஞ்சில்
நெருப்பாக எரிகின்றது
மனையதோ உம் பிரிவில்
மௌனமாய் இருக்கிறது
மீள உம் வரவுக்காய்
மனம் ஏங்கித் தவிக்கின்றது
இறைவன்பால் இறைஞ்சுகின்றோம்
உன் ஆன்ம இளைப்பாற்றுக்காய்

இன்று (20.12.2003) சனிக்கிழமை இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக மாலை 5.30மணிக்கு போயிட்டி இளவாலை அர்ச்.லூர்து அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

சுவிஸ்லாந்து (35-21-17-12)
மகன், மனைவி, மருமக்கள், பேரப்பிள்ளைகள். (25987)

## சிமெந்து விநியோகம்

வட்டுக்கோட்டை,டிசெ.20

வட்டுக்கோட்டைப் பகுதியில் வசிக்கும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களின் வீடுகளைப் புனரமைக்க வென இந்து கலாசார அமைச்சினால சிமெந்து வழங்கப்பட்டு வருகின்றது.

இப்பகுதியில் உள்ள சமூக சேவை மற்றும் ஆலயம் சார்ந்த அமைப்புகள மூலம் இவை விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (எ-161)

## உதவி செய்தவர் உதைவாங்கினார்

தென்மராட்சி,டிசெ.20

மிதிவெடியில் அகப்பட்டு காலை இழந்த மாட்டினை அழைத்துவரச் சென்ற பெண்மணி, காயமடைந்த மாட்டினால் உதைக்கப்பட்ட சம்பவம் கடந்த செவ்வாயன்று மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்துக்கு அருகில் இடம்பெற்றது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:

மேய்ச்சலுக்காக காணியொன்றில விடப்பட்டிருந்த பசுமாடு மிதிவெடியில் அகப்பட்டு காலை இழந்தது. காயமடைந்த நிலையில் நடந்து வந்த மாட்டினை அழைத்துச் செல்ல முயன்ற பெண்ணொருவர் அதன் கயிற்றினை பிடித்து இழுத்தார் என்றும் -

அப்போது மாடு, சம்பந்தப்பட்ட பெண்ணை வயிற்றில் உதைத்து வீழ்த்தியது என்றும் - கீழே வீழ்ந்த பெண்ணின் தலை கல்லுடன் மோதி காயத்துக்கு இலக்கானது என்றும் கூறப்பட்டது.

மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த மார்க்கண்டு கமலாதேவி (வயது 56) என்பவரே இவ்வாறு காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ-112)

## வழக்கு விசாரணை மேல் நீதிமன்றுக்கு

யாழ்ப்பாணம்,டிசெ.20

பலாலியில் பணிபுரியும் றிசேர்வ் உப பொலீஸ் இன்ஸ்பெக்டருக்கு எதிரான வழக்கு யாழ்.மேல்நீதிமன்றத்தில் இருந்து கொழும்பு மேல்நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

1996ஆம் ஆண்டு பலாலியில் சட்டபூர்வ அதிகாரம் இன்றி தீங்கு விளைவிக்கும் கைக்குண்டு ஒன்றையும், மூன்று தோட்டாக்களையும் தன்வசம் வைத்திருந்ததாகக் கூறி றிசேவ் உப பொலீஸ்இன்ஸ்பெக்டரான ஞானதிலகே அல்விஸ் என்பவருக்கு எதிராக சட்டமா அதிபரால் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு விசாரணை யாழ். நீதிமன்றத்தில் இடம்பெற்ற சமயம் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கட்டளைக்கு அமைய வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது (எ-3-5)

## வீதி பலத்த சேதம்

நவாலி,டிசெ:20

ஆனைக்கோட்டை சங்கரப்பிள்ளை வீதி நீண்டகாலமாகப் புனரமைக்கப் படாமையினால் குண்டுங்குழியுமாகக் காணப்படுகின்றது. இதனால் இந்த வீதியால் பயணம் செய்வோர் பெருஞ் சிரமங்களை அனுபவிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் - மேற்படி வீதியைப் புனரமைத்துத் தருமாறு ஆனைக்கோட்டை திருவள்ளுவர் சனசமூக நிலையம் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு மகஜர் அனுப்பிவைத்துள்ளது. (எ-100)


**தேவை**

யாழ். நகர மத்தியில் இயங்கும் எமது சன்றைஸ் மெடிக்கிளினிக் வைத்திய நிலையத்திற்கு பெண் தாதி, பெண் தாதி உதவியாளர்கள், கணனி இயக்குநர் தேவை.
நேர்முகத் தேர்வு 23.12.2003, 24.12.2003 பகல் 12 மணிமுதல் 2 மணிவரை.
முன்கூட்டியே பதிவுசெய்ய:
388, ஆஸ்பத்திரி வீதியில்
யாழ். ஸ்பிரிட்ஸ் & பார்மசி.

**தேவை**

கச்சான் அல்வா தொழிற்சாலைக்கு முன் அனுபவம் உள்ளவர்களுக்கும், பழக விரும்புகின்றவர்களுக்கும் வெற்றிடங்கள் உள்ளன.
31-12-2003 இக்கு முன்னர் நேரில் வரவும்.
பவானி விலாஸ் கச்சான் தொழிலகம்
32/1, கல்லூரி வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.
(25975) (21-16)

## நூல்கள் விற்பனைக்கு

சகலரும் அறிந்திருக்க வேண்டியது
இலங்கை மீன்வளம் - பயன்படுத்தலும் அபிவிருத்தியும்
சகலரும் செய்ய வேண்டியது
கால்நடை அபிவிருத்தி - இலங்கைத் தமிழர் பிரதேசம்
ஆசிரியர் - கலாநிதி அ.சோமசுந்தரம்பிள்ளை
பி.ஏ., எப்.சி.ஏ., பட்டயக்கணக்காளர்
விலை: பிரதி ரூபா 100/-
கழிவு: 10 பிரதிகளுக்குமேல் வாங்குபவர்களுக்கு 20%

கிடைக்குமிடம்:
மேர்ச்சன்ற் பினான்ஸ் லிமிட்டெட்,
555, நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.
திங்கள் - வெள்ளி
காலை 9 - 12 மணிவரை.
(34-12-17-21) (24935)


## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 07 - 11 - 1935 | 12 - 12 - 2001 |

**அமரர் வேலுப்பிள்ளை திருநாவுக்கரசு**


திதி : 20.12.2003

அன்பும் பண்புமுடைய அப்பா!
ஆசையுடன் வளர்த்த எம்மைவிட்டு
இறைவனடி சேர்ந்ததென்ன?
ஈசனுடன் இணைந்து நல்லாசிகள்
எமக்குத் தருவாய்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

கருணாநிதி ச.ச.நிலையம்,
வல்வெட்டி, வல்வெட்டித்துறை.
- குடும்பத்தினர். (25881)(35-21-17-12)

## முதலாம் ஆண்டு நினைவுதினம்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 13 - 12 - 1968 | 31 - 12 - 2002 |

**அமரர் பொன்னன் ஞானேஸ்வரன்**

(பிளாக் பெல்ட் கராத்தே பயிற்சியாளர்)

கடல் அடி ஓயுதே ஞானம்
கரை தேடி ஓடுகின்றோம் நாமும்
உன் இடி ஓயவில்லை இங்கே
தாய் மடி தேடுது இங்கே
உனைத் தாங்கிய உள்ளங்கள் எல்லாம்
தவித்தெல்லோ வாடுது இங்கே!

இன்று (20.12.2003) சனிக்கிழமை நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அரசடி,
தொண்டைமானாறு.
(35-21-12-17)

சகோதர, சகோதரிகள், மைத்துனர், மைத்துனிகள்,
பெறாமக்கள், மருமக்கள்,
அமரர் பொன்னன் குடும்பத்தினர்,
உறவினர்கள், நண்பர்கள் மற்றும்
கராத்தே ஆசிரியர் கணேசமூர்த்தி. (25924)

# ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தண்டனை விதிப்பது நீதியின்பாற்பட்டதல்ல

## கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பில் தெரிவிப்பு

குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையில் எதிரிக்கு தண்டனை விதிப்பது நீதியின் பாற்பட்டதல்ல; சட்டத்துக்கு அமைவானதும் அல்ல என்று கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு நாவலடியில் மூன்று மின்மாற்றிகள் அழிக்கப்பட்ட சம்பவத்துக்கு உதவியும் ஒத்தாசையும் வழங்கினார் என்று இளைஞன் மீது தொடரப்பட்ட வழக்கில் கொழும்பு மேல் நீதிமன்றம் வழங்கிய 5 வருட கடுழியச் சிறைத் தண்டனையை எதிர்த்து மேன்முறையீட்டு நீதிமன்றில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதில் நேற்றுத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

அதிலேயே நீதிபதிகள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர். இளைஞனை விடுதலை செய்து தீர்ப்பளித்தனர்.

1996 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி மட்டக்களப்பு நாவலடியில் இருந்த அரசுக்குச் சொந்தமான மூன்று மின்மாற்றிகளை விடுதலைப் புலிகள் அழித்தமைக்கு ஒத்தாசையும் உதவியும் வழங்கியதாக தம்பையா ரவிச்சந்திரன் (வயது 28) என்ற இளைஞனுக்கு எதிராக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கொழும்பு மேன் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கை 1999 ஆம் ஆண்டு விசாரணை செய்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பி.விஜயரத்தின, பிரஸ்தாப இளைஞன் அளித்த குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை ஏற்று அவருக்கு ஐந்து வருட கடுழியச் சிறைத்தண்டனை விதித்திருந்தார்.

இந்தத் தீர்ப்பை ஆட்சேபித்து அவர் சார்பில் சட்டத்தரணி என்.சிறிகாந்தா மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அப்பீல் செய்திருந்தார்.

இந்த அப்பீல் மனு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான சந்திரதாஸ நாணயக்கார, காமினி அபயரத்தின ஆகியோர் முன்னிலையில் கடந்தவாரம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அச்சமயம் சட்டத்தரணி சிறிகாந்தா தமது தரப்பு வாதத்தை முன்வைத்தார். அவர் தெரிவித்ததாவது:-

ஒருவரின் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையில் அவருக்கு தண்டனை விதிப்பது சட்டத்துக்கு முரணானது. அந்த வாக்குமூலத்தில் எதையும் எப்படியும் சொல்லிவிடலாம். அது உண்மையானது என்று அர்த்தமல்ல.

குற்றச்சாட்டு நிரூபிக்கப்படுவதற்கு சம்பந்தப்பட்ட திகதிகளில் 3 மின்மாற்றிகளும் இருந்தன என நிரூபிக்கப்படவேண்டும். அரசுக்கு அவை சொந்தமானவை என நிரூபிக்கப்படவேண்டும். அத்திகதியில் அழிக்கப்பட்டன என்பதை நிரூபிக்கவேண்டும். ஒப்புதல் வாக்குமூலத்துக்கு மேலதிகமாக வேறு சாட்சிகள் மூலம் இவை நிரூபிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இந்த வழக்கில் எந்தச் சாட்சியும் முன்வைக்கப்படவில்லை.

மின்மாற்றி அழிக்கப்பட்டமை தொடர்பாக பொலீஸில் பதிவுகள் ஏதும் இல்லை. விசாரணைக் குறிப்புக்களும் இல்லை. வெறுமனே குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை வைத்து எதிரிக்குத தண்டனை விதிப்பது சட்டத்துக்கு ஏற்புடையதல்ல. நீதியும் அல்லர் என்று சிறிகாந்தா தெரிவித்தார்.

இதையடுத்து தீர்ப்பை ஒத்திவைத்த நீதியரசர்கள் வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட சமயம் பிரஸ்தாப இளைஞனை விடுதலை செய்து வழக்கை தள்ளுபடி செய்தனர்.

குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரிக்கு தண்டனை விதித்தது நீதியின் பாற்பட்டதல்ல. சட்டத்துக்கு அமைவானதும் அல்ல என நீதியரசர்கள் தமது தீர்பில் தெரிவித்தனர்.

கடந்த 7 வருடங்கள் களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அந்த இளைஞன் நேற்று விடுதலையானார்.

இவ்வழக்கில் சட்டத்தரணி ஜெயதேவிராயப்பு சார்பில் சட்டத்தரணி என்.சிறிகாந்தா ஆஜராகியிருந்தார்.


## பிள்ளைகள் இல்லம்

சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய்.

### 2004 ஆம் ஆண்டுக்கான பிள்ளைகள் அனுமதி

ஆறு (06) வயது முதல் பத்து (10) வயதுக்குட்பட்ட பெண்பிள்ளைகள் அனுமதிக்கப்படுவர்.

**விண்ணப்ப தகைமைகள்:**

I. பெற்றோரை இழந்த பிள்ளைகள்.
II. யுத்த சூழ்நிலையில் தகப்பனை இழந்த பிள்ளைகள்.
III. வறுமைக்கோட்டின் கீழ் உள்ள குடும்பங்கள்.

பிறப்பு அத்தாட்சிப்பத்திரமும், கிராம சேவையாளர் சிபார்சும் தேவை.

கியுமடிகா,
இலங்கை (26077)(18-11-13-32) -நிர்வாகம்.


## யாழ்ப்பாணம் மாநகரசபை
## வரவு-செலவுத்திட்டம்-2004

2004 ஆம் ஆண்டுக்கு கிடைக்கக்கூடிய மாநகர வருமான மதிப்பீட்டையும் உத்தேச செலவின விவரங்களையும் உள்ளடக்கிய மாநகர சபையின் வரவு-செலவுத்திட்டம் 2003 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் ஏழு நாள்களுக்கு மாநகர சபை அலுவலகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படுமென மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 252,212) "பி"பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் தரப்படுகிறது.

மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
19.12.2003. (சி-32152)(32-11-13)

இ.இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



**அமரர் அருணாசலம் தாமோதரம்பிள்ளை**
(ஓய்வுபெற்ற சுங்கத்திணைக்கள உயர் அதிகாரி)

அன்னாரின் அந்தியேட்டி 19.12.2003 வெள்ளிக்கிழமையும் வீட்டுக்கிருத்தியம் 21-12-2003 ஞாயிற்றுக்கிழமை அவரது அராலி குலனை இல்லத்திலும் நடைபெற இருக்கின்றன.

தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து 21.12.2003 ஞாயிற்றுக கிழமை நடைபெறவிருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

அராலி வடக்கு,
குலனை. (26087)(36-11-13-32) -மனைவியும் மக்களும்.


## முண்டோ காஸ் (Mundo Gas)

"முண்டோ காஸ்" விற்பனை முகவர்கள் இன்றுமுதல் தங்களிடமுள்ள வெற்று சிலிண்டர்களை உடனடியாக எம்மிடம் ஒப்படைத்து காஸ் நிறைந்த சிலிண்டர்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை அறியத்தருகின்றோம்.

த பெனின்சுலா குறூப்,
127/10 கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.
(26076)(32-11-13)

## தேவை

எமது தொலைத்தொடர்பு நிலையத்துக்கு O/L கல்வித் தகைமையுள்ள ஒருவர் தேவை.

நாளை (21.12.2003) ஞாயிறு 9.00-1.00 மணிக்குள் நேரில் வரவும்.

**சுதன்**
தொலைத்தொடர்பகம்,
புகையிரத நிலைய வீதி,
மிருசுவில். (26079)

## THE ROYAL COLLEGE OF JAFFNA

ஆண்டு 1இல் இருந்து 11 வரை எல்லாப் பாடங்களும் சிறந்த அனுபவ ஆசிரியர்கள். Spoken English, Grammar மேற்படிப்புவரை. ஒவ்வொரு வகுப்பிலும் 15மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர். பதிவுக்கு: அதிபர்.

(26083) 426(302)K.K.S. வீதி,யாழ்ப்பாணம்.

## நாகம்ஸ் சுன்னாகம்

சூர்யா, ஜோதிகா மற்றும் பலர் நடிக்க
காக்க காக்க (சினிமா)
தினசரி காட்சி : 11.00, 3.00, (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு - இரவு 7மணி
(C31620)(32)

## லஷ்சுமி சினிமா இணுவில்

விஜயகாந்த், கிரண், நாசர் நடித்த
தென்னவன் (சினிமா)
காட்சி நேரம் : 10.30, 2.30, 6.30. (பி.நே.)
(25943)(32)

## லிபேட்டி அச்சுவேலி

மாதவன், ஜோதிகா, ஸ்ரீதேவி, மணிவண்ணன் நடிக்க
பிரியமான தோழி
காட்சிநேரம்: 2.00, 7.00.
சனி, ஞாயிறு : 11.00, 2.00, 7.00 (பி.நே.) (சினிமா)
திங்கள் முதல் திருமலை
(C31621)(12)

## நிறைஞ்சனாஸ் சங்குவேலி

ரஜனி, ரோஜா, மீனா நடித்த
வீரா (சினிமா)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி சனி ஞாயிறு JACKIE CHAN நடித்த WHO AM I? (கராட்டிப்படம்)
இரவு 8.45 இக்கு (பி.நே.)
(C-31619)(32)

## ராஜா யாழ்ப்பாணம்

தருண், த்ரிஷா, விவேக், மணிவண்ணன் நடிக்க
எனக்கு 20 உனக்கு 18 (சினிமா)



காட்சிகள்:
10.30,2.30,6.30,9.30 (பி.நே.)
ஆசனங்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளலாம்.


### நள்ளிரவில் சிகிச்சைக்கு வந்த நால்வரால்

# பாணந்துறையில் தனியார் டாக்டர் கழுத்து வெட்டிப் படுகொலை!

கொழும்பு,டிசெ.20

பாணந்துறையில் இயங்கும் தனியார் வைத்தியசாலை ஒன்றில் பிராதான மருத்துவ அதிகாரி நேற்று முன்தினம் நள்ளிரவு இனந்தெரியாத நபர்களினால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார்.

டாக்டர் பீட்டர் பெர்னாண்டோ இவ்வாறு படுகொலை செய்யப்பட்டார். இவர் தனது வீட்டில் வைத்து நோயாளகளுக்குச் சிகிச்சையை வழங்குவார். நேற்றுமுன்தினம் நள்ளிரவு அவசரமாக சிகிச்சை பெறவேண்டும் என்று கூறிவீட்டினுள் நுழைந்த இனந்தெரியான நான்கு பேர் கூரிய ஆயுதமொன்றினால் வைத்தியரின் கழுத்தை வெட்டிக் கொலை செயதுள்ளனர்.

இந்தக் கொலைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனவும், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பாணந்துறைப் பொலீஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி கருணாதிலக போபிட்டிய தெரிவித்தார்.

## களப்பயிற்சி

யாழ்ப்பாணம்,டிசெ.20

யாழ்.பல்கலைக்கழக சமூகவியற்றுறை மாணவர்கள் இன்று சனிக்கிழமை காலை 9மணி முதல் பிற்பகல் 5மணிவரை பண்ணை முதல வசந்தபுரம் வரையான மேற்குப் பகுதியில் கலைப்பயிற்சியில் ஈடுபடவுள்ளனர்.

பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை தலைமையில் இடம்பெறும் இக்கலைப்பயிற்சியில் மாணவர்கள் வீடமைப்பு, வறுமை, குடிதண்ணீர், வடிகால் மற்றும் சமூக மேம்பாடு தொடர்பான பயிற்சிகளை மேற்கொள்ளவுள்ளனர். (ம-9)

# மரண அறிவித்தல்கள்

## சதாசிவம் சின்னையா
(ஆச்சாரியார்)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் சின்னையா நேற்று (19.12.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அம்மன் வீதி,*
*காளிகோயிலடி,*
*திருநெல்வேலி கிழக்கு.* (சி-32155) (32-11-13)

தகவல்:
ச.சிவபாக்கியம்
(மனைவி)

## திருமதி மேரி மெற்றில்டா யோசேப் (கில்டா)

சில்லாலையைப் பிறப்பிடமாக கொண்டவரும் நியூஸிலாந்தில் வசித்து வந்த வருமான திருமதி மேரி மெற்றில்டா யோசேப் நேற்று (19.12.2003) வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற வின்சேன் டி போல் யோசேப்பின் அன்பு மனைவியும் ஷேளி மேவின் (நியூஸிலாந்து), காலஞ்சென்ற லிசி யோசேப்பு மற்றும் யக்குலின் ஜெயககுமார் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் றஞ்சித், டினேஸ் (நியூஸிலாந்து), நிருசி, பிறவீன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும காலஞ்சென்ற கிராமசேவகர் வேதநாயகத்தின் சகோதரியும் காலஞ்சென்ற புனிதம் வேதநாயகம், அருட்சகோதரி யோசேப்பின் (அமலிவனம், அச்சுவேலி), அருட்சகோதரி பெற்றோனிலா (தி.கு.க -தியத்தலாவை), காலஞ்சென்ற கிறேஸ் அருளானந்தம், அருட்சகோதரி நிஸெற்றா (தி.கு.க- முல்லைத்தீவு), அலோசியா விக்டர், போல் சாமிநாதர் ஆகியோரின் மைததுனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.12.2003) சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு சில்லாலை கதிரைமாதா ஆலயத்தில் இரங்கற்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு கொழும்பு A.F. றேமன் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு புதன்கிழமை 24ஆம் திகதி காலை கனத்தை மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சில்லாலை,*
*பண்டத்தரிப்பு.* (26092)(11-13-32)

தகவல்:
அன்ரன் செல்வராஜா

## பொன்னையா பொன்னுத்துரை

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும், பாண்டியன்குளத்தை வசிப்பிடமாகவும் தற்சமயம் தொல்புரத்தில் வசித்து வந்தவருமான பொன்னையா பொன்னுத்துரை நேற்று (19.12.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் பாக்கியலக்சுமியின் அன்புக்கணவரும், சாந்தகுமாரின் (ஜேர்மனி) அன்புத்தந்தையும், சுகந்திமனோவின் மாமனாரும் துளசியின் பேரனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இவான் வீதி,*
*தொல்புரம்.* (26090)(11-13-32)

தகவல்:
பொ. கயிலைநாதன்
(சகோதரன்)

## நாகலிங்கம் நல்லையா

ஊர்காவற்றுறை, தம்பாட்டியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் நல்லையா 18.12.2003இல் சிவபதம் எய்தியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-தங்கம்மா ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஊர்காவற்றுறை, புருத்தியடைப்பைச் சேர்ந்த ஆறுமுகம்-சிவக்கொழுந்து (லோஞ்சு உரிமையாள) ஆகியோரின் அன்பு மருமகனும் சிவகெங்கையின் அன்புக்கணவரும், சிவசம்பு, விசாலாட்சி, தாமோதரம்பிள்ளை, நல்லம்மா, கோவிந்தம்மா, குணரெத்தினம், பூவதியோகம்மா, புனிதவதி ஆகியோரின் சகோதரரும் சிவாகினி (பிரான்ஸ்), சிவறஞ்சினி (பிரான்ஸ்), நகுலேஸ்வரி (பிரான்ஸ்), மாலதி (பிரான்ஸ்), தசனி, சங்கீதா (பிரான்ஸ்), சிவராஜினி, சிவந்தனி, சிந்துஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் புவனேந்திரன் (பிரான்ஸ்), சிவநேசன் (பிரான்ஸ்), யோகேந்திரன் (பிரான்ஸ்), பவந்தரன (பிரான்ஸ்), தமிழ்செல்வன் (தம்பாட்டி) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிரோஜினி, செந்தூரன், பிரதோஸ், ஸ்னேகா, அபிலாஸ், ஜோதிகன் (பிரான்ஸ்), ஜிந்துஜன், பிரசாந் (தம்பாட்டி) ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2003) சனிக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தம்பாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தம்பாட்டி*
*ஊர்காவற்றுறை.* (26089)(11-13-32)

தகவல்:
நா. சிவசம்பு (சகோதரன்)

# அதி உயர்பாதுகாப்பு வலயப் பகுதிகளிலிருந்து எந்த இராணுவ முகாமும் அகற்றப்படவில்லை

## நடவடிக்கைத் தலைமைச். செயலகம் விளக்கம்

கொழும்பு,டிசெ.20

யாழ். குடாநாட்டிலுள்ள இராணு வத்தினரால் அதி உயர்பாதுகாப்பு வலயங்களிலிருந்து எந்த ஓர் இராணுவ முகாமும் அகற்றப்படவில்லை என்று இராணுவ நடவடிக்கைகளின் தலைமைச் செயலகம் தெரிவித்திருக்கிறது.

யாழ் அதி உயர் பாதுகாப்பு வலயப் பகுதி ஒன்றிலிருந்து கடந்த மாதம் 21ஆம் திகதி இராணுவ முகாம் ஒன்று அகற்றப்பட்டது என்று நேற்றுமுன் தினம் சிங்களப் பத்திரிகை ஒன்று வெளியிட்ட செய்தி தொடர்பாகவே நடவடிக்கைத் தலைமைச் செயலகம் மேற்படி அறிவித்தலை விடுத்துள்ளது.

நடவடிக்கைத் தலைமைச் செயலகம் இது தொடர்பாக விடுக்கப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ்ப்பாணத்தின் தற்போதைய பாதுகாப்பு நிலைவரத்தின் அடிப்படையில் அங்கு கைவிடப்பட்டிருந்த - பின் தங்கிய கஷ்டப் பிரதேசங்களில் அமைந்திருந்த - சில கட்டடங்களே மக்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளன.

இராணுவத்தின் 55ஆவது படைப்பிரிவின் 551ஆவது அணி அமைந்துள்ள முகாமுக்கு அருகிலுள்ள மக்களின் வாழ்க்கை மேம்பாட்டை நோக்காகக் கொண்டும், இராணுவம் - மக்கள் பரஸ்பர நல்லுறவை வளர்க்கும் நோக்குடன் குறிப்பிட்ட பிரதேசத்திலுள்ள சில அரச கட்டடங்கள் மக்கள் பாவனைக்கு வழங்கப்பட்டுள்ளன.

பொது மக்களுக்கு இந்தக் கட்டடங்களை வழங்குவதன் மூலம் உயர் பாதுகாப்பு வலயத்துக்கோ, இராணுவத்துக்கோ எத்தகைய அச்சுறுத்தலும் ஏற்படாது.

- இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரபா - ஹக்கீம் உடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாங்கள் தீர்மானிப்போம் என்ற ஒரு சரத்தை அந்த வரைவில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளோம்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் யாழ். குடாநாட்டிலிருந்து முஸ்லிம் மக்களை வெளியேற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதற்காக எமது வருத்தத்தைத் தெரிவிக்கின்றோம்.

சிங்களப் பேரினவாதம் எங்கள் மத்தியில் பெரும் பிளவுகளை - மோதல்களை - சிக்கல்களை - தோற்றுவிக்க முயன்ற வேளையில், அவற்றை எதிர்கொள்வதற்கு மாற்றுவழி எதுவுமே இல்லாத சூழலில் - அப்படியான ஒரு துரதிர்ஷ்டவசமான - தவிர்க்க முடியாத - முடிவை எடுக்கும் நிலைக்கு நாம் தள்ளப்பட்டோம்.

அந்த முடிவு வடக்கில் வாழும் முஸ்லிம் மக்களின் மனதை வெகுவாகப் பாதித்ததை நாம் உணர்வோம். எமது அந்த நடவடிக்கையை நாம் நியாயப்படுத்த முனையவில்லை.

ஆனால், இன்று நாம் பலமடைந்து - எமது மக்களின் உரிமைகளை நிலைநாட்டுகின்ற ஒரு வலுவான சக்தியாக வளர்ந்திருக்கும் இன்றைய சூழலில் - முன்னைய நிலையை மாற்றியமைக்க முடியும் என்ற நம்பிக்கை எமக்கு ஏற்பட்டுள்ளது.

அண்மையில், திருகோணமலை போன்ற இடங்களில் தமிழர் - முஸ்லிம்கள் இடையே மோதல்கள், நெருக்கடிகள் ஏற்பட்டமை சம்பந்தமாக நாம் ஆராய்ந்துகொண்டிருக்கிறோம்.

இவ்விடயத்தில் பேரினவாத சக்திகளின் தலையீடுகள் மிக அதிகமாக உள்ளன. ஜே.வி.பி., சிஹல உறுமய போன்றவை திருகோணமலையிலும் தமது நடவடிக்கைகளை வலுவாகத் தொடங்கியிருக்கின்றன.

இந்தச் சக்திகள் இன்று தமிழர்-முஸ்லிம்கள் இடையே உறவு விரிசலையும் பிரச்சினைகளையும் மோதல்களையும் ஏற்படுத்தவும், அவற்றுக்கு அப்பால் சென்று ஒட்டுமொத்த யுத்த நிறுத்த உடன்பாட்டையே குழப்பி மீண்டும் ஒரு யுத்த சூழ்நிலையை உருவாக்கவும் வேகமாகவும், தீவிரமாகவும் முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதை நாம் பார்க்கின்றோம்.

அமைதித் தீர்வைக் காண்பதற்கான சமாதானப் பேச்சுக்களில் ஓர் இணக்கப்பாடு ஏற்படுகின்ற சூழலில், முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளையும் - அதற்கான தேவை ஏற்படும் போது - ஒரு தரப்பாக நாங்கள் பேச்சுக்குள் உள்வாங்கிக் கொள்வோம். அதுவே அந்தநேரத்தில் நாங்கள் எங்களுக்குள் பரிமாறிக் கொண்ட கருத்து.

எமது தலைவருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு சம்பந்தமாக, முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ஹக்கீம் உட்பட முஸ்லிம்களின் பல அரசியல் தலைவர்கள் பல இடங்களில் பல்வேறு கேள்விகளை எழுப்பியிருந்தனர். ஏற்கனவே அது செயலற்றுப்போய்விட்டதாக அது குறித்து பத்திரிகைகளில் பல செய்திகளை நாம் பார்த்திருக்கிறோம். அது அந்த நேரத்திலேயே செயலிழந்து போய்விட்டது.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் வெளியேற்றப்பட்டதும், அக்கட்சியில் பிளவுகள் ஏற்பட்டதும், அதையடுத்து கிழக்கில் நிகழ்ந்த சில சம்பவங்களின் போது முஸ்லிம் காங்கிரஸ் தலைவரே அந்த இணக்கப்பாடு உடைந்து போனதாகவும் அது செயலிழந்து போனதாகவும் பல தடவைகள் அறிவித்திருக்கின்றார்.

அத்தகைய நிலையில், இன்று அந்த உடன்பாட்டை முதன்மைப்படுத்திக் கொண்டு அதில் அப்படித்தான் கூறப்பட்டுள்ளது என்று சொல்லிக் கொண்டு வருவதன் தாற்பரியம் எங்களுக்கு விளங்கவில்லை.

முஸ்லிம் மக்களுக்கும் சில குறிக்கோள்கள், அரசியல் அபிலாஷைகள் இருப்பதை நாங்கள் உணர்ந்து கொண்டுள்ளோம். அவர்களின் எதிர்காலம், பாதுகாப்பு, உறுதிப்பாடு என்பவை தொடர்பாக அவர்களுக்கு உத்தரவாதம் வழங்கும் வகையிலான ஒரு தீர்வை நாம் எட்டுவது பிரச்சினைக்குரிய விடயமல்ல.

ஆனால், அந்த விவகாரத்தை இன்று அரசியல் அதிகாரங்களை எட்டுவதற்கு அல்லது அரசியல் செல்வாக்கை நிலைநிறுத்திக் கொள்வதற்காகப் பயன்படுத்திக் கொள்வது தான் வேதனையானது.

முஸ்லிம்கள் மற்றும் தமிழர்களின் அரசியல் எதிர்காலம் சம்பந்தமாக நாங்கள் பேசி முடிவெடுத்துச் செயற்படுவது ஒரு பெரிய விடயமில்லை. ஆனால், ஸ்ரீலங்காவின் அரசியல் அதிகாரத்துக்கு உட்பட்டு, தங்களுடைய நலன்களை மையப்படுத்தி நிற்கின்றபோது இது சாத்தியமானதல்ல - என்றார் அவர். (ம)



ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் சென்றுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறை யாழ். மாவட்டப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, ஜெனிவாவில் புதனன்று சுவிஸ் வெளிவிவகார அமைச்சின் இலங்கைக்கான பணிப்பாளர் மார்க்கஸ் ஹெனிகரை சந்தித்துப் பேசினார். 90 நிமிடங்கள் இடம்பெற்ற இந்தப் பேச்சின்போது விடுதலைப் புலிகளின் சுவிஸ் பொறுப்பாளர் குலம் மற்றும் சுவிஸ் அரசியற் பொறுப்பாளர் அன்ரன் ஆகியோரும் உடன் இருந்தனர்.

## வன்னியிலும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேசி இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

புதிய பரிவர்த்தனை நிலையம் அமைக்கப்பட்டுள்ளதால் வன்னிப் பகுதிக்குள்ளும் இனி 'மொபைல்' தொலைபேசிகளைப் பயன்படுத்த முடியும்.

விசேட ஏற்பாட்டின் கீழ் ஏற்கனவே கிளிநொச்சியில் பாவனையில் உள்ள 60 தொலைபேசி இணைப்புக்களும், இந்தப் புதிய தொலைத் தொடர்பு வலையமைப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன என்று ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுஹைர் அனான் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் அரச செயலகம், தபாலகம், விடுதலைப் புலிகளின் அரசியல்துறை, சமாதானச் செயலகம் உட்பட முக்கிய துறை சார்ந்த சில அலுவலகங்களுக்கு மட்டுமே இதுவரை தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன.

பரந்தனில் உள்ள புதிய தொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலையத்திலிருந்து பொதுமக்கள், வர்த்தகர்கள் எனப் பலதரப்பட்டவர்களுக்கும் இனி தொலைபேசி இணைப்புகள் கிடைப்பதற்குரிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

ரெலிக்கொம் அதிகாரி இது பற்றி மேலும் கூறியதாவது:-

அடுத்த திட்டமாக, முல்லைத்தீவு மாவட்டத்திற்கும், மடுப்பிரதேசத்திற்கும பரிவர்த்தனை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

ஒரு தொலைபேசி இணைப்பிற்கு 400 அமெரிக்க டொலர்கள் செலவாகின்றன. பரிவர்த்தனை நிலையத்துக்காக 100 மீற்றர் உயரமுடைய கோபுரம் ஒன்று கிளிநொச்சியில் அமைக்கப்பட்டது. இதன்மூலம் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பகுதிக்கும் 'மொபைல்' தொலைபேசி சேவையை வழங்குவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

இந்தியாவுடன் நெருங்கிய தொலைத் தொடர்பை ஏற்படுத்துவதற்காக தலைமன்னார், செட்டிக்குளம் ஆகிய பிரதேசங்களை இணைத்து நுணலைத் தொலைத் தொடர்பு இணைப்பை இராமேஸ்வரத்துடன் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவிருக்கின்றன.

இதன் மூலம், இந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பு மேலோங்க வழியேற்படும்.

- இப்படி அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

## தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ். மாவட்ட செயலகம் திறப்பு

தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ் மாவட்டச் செயலகம் நேற்றுக்காலை 10 மணியளவில் கோண்டாவில் - இருபாலை வீதியில் உள்ள கட்டடத்தில் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

செயலகத்தை தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவையின் பொறுப்பாளர் சஞ்சய் நாடாவெட்டித் திறந்துவைத்தார். பொதுச்சுடர் ஏற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானது. பொதுச் சுடரினை வீரவேங்கை சேரனின் தந்தை நதர்மலிங்கம், அருட்திரு. எம்எக்ஸ் கருணாரட்ணம், மௌலவி இப்ராகிம், விடுதலைப் புலிகளின் அரசறிவியல் கல்லூரிப் பொறுப்பாளர் அரசன்னா ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தேசியக் கொடியை தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் இபாப்பா ஏற்றிவைத்தார். செயலகத்தின் பெயரப் பலகையை அருட்திரு. எம்.எக்ஸ். கருணாரட்ணம் திரைநீக்கம் செய்து வைத்தார். வாழ்த்துரையை அருட்திரு. ஏ.சகாயதாஸ் நிகழ்த்தினார்.

தொடர்ந்து சிறப்புரைகள் இடம்பெற்றன. தேசிய எழுச்சிப் பேரவையின் கொள்கை முன்னெடுப்பாளர் மா.க.ஈழவேந்தன், தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா, அரசறிவியல் கல்லூரியின் பொறுப்பாளர் அரசன்னா, யாழ். செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கே.பாலகிருஸ்ணன் ஆகியோர் உரையாற்றினார்கள். (ம-10)

## கருத்தரங்கு பிற்போடப்பட்டது

யாழ் மாவட்ட விசேட கல்வி ஆசிரியர்களுக்கு இன்று சனிக்கிழமை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடைபெறவிருந்த செயலமர்வு தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என்று யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.(ம-ரி)

## சுகாதார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பில் கலந்துகொண்டனர்.

வடக்கு - கிழக்கிலுள்ள சுகாதார ஊழியர்கள், வைத்தியர்களின் பற்றாக்குறை நிலை தொடர்பாகவும், வைத்தியசாலைகளில் நிலவும் வசதியீனங்கள் மற்றும் தொண்டர் சேவை ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது குறித்தும் இதில் கலந்துரையாடப்பட்டதாகக் கூறப்பட்டது.

மட்டக்களப்பில் புற்றுநோய் மருத்துவ நிலையம் மற்றும் இரத்தப் பரிசோதனை நிலையம் என்பவற்றை அமைத்துத் தரவேண்டும் என்று தமிழ் எம்.பிக்கள் சுகாதார அமைச்சரிடம் வலியுறுத்தினர் எனக் கூறப்பட்டது.

## மகாநாயக்கர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வும் அறிவுரை வழங்குமாறு இக்குழுவினர் மகாநாயக்கரைக் கேட்டுக் கொண்டனர்.

அப்பொழுது மேற்கண்டவாறு கூறிய மகாநாயக்கர், நாடாளுமன்றத்திலுள்ள சிங்கள எம்.பிக்கள் ஒன்றுபடுவார்களேயானால் அரசமைப்புச் சட்டத்தை மாற்ற முடியும். ஆயினும், யாருக்கும் அதில் அக்கறையில்லை எனவும் தெரிவித்திருக்கிறார்.

## இந்தியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வது தடை இருக்குமாக இருந்தால் அதனை இப்போதே அகற்றிவிட வேண்டும் - இப்படி சந்திரசேகரன் கூறினார்.

நேற்றுக்காலை விமானம் மூலம் பலாலி வந்த அமைச்சர், அங்கிருந்து யாழ். செயலகம் சென்று அரச அதிபரைச் சந்தித்து யாழ். குடா நாட்டின் நிலைமைகள் தொடர்பாகக் கலந்துரையாடினார்.

சாவகச்சேரி மற்றும் யாழ். நகரப் பகுதிகளையும் சுற்றிப்பார்வையிட்டார். (ம-9-5)


விற்பனையாகின்றது
ஆசிரியர் போட்டிப் பரீட்சை
வழிகாட்டி நூல்
P.உமாசங்கர் B.Com. Spl.,Trd.Com.
மாதிரி வினா-விடை முக்கிய விடயங்களுடன்
சகல புத்தகசாலைகள், ஆசிரியரது வகுப்பு நடைபெறும் இடங்கள்.
(26091)

ஆசிரியர்
போட்டிப் பரீட்சை
வழிகாட்டி நூல்
த. தவசீசகர் B.Sc.
★ பரீட்சைக்கான முக்கிய விடயங்களை உள்ளடக்கி '25.12.03இல் வெளிவருகின்றது. (25999)

ஆசிரியர் போட்டிப் பரீட்சை
வழிகாட்டல் வகுப்புகள்
P. உமாசங்கர்.
B.Com, Spl. Trd.Com.
கலைவாணி கல்வி நிறுவனம்
கோப்பாய்
Mon.,Wed. - 7.30 (N.T.)
உடன் பதிவுசெய்து வழிகாட்டி நூலைப் பெறுக.

தென்னிந்தியாவில் இருந்து





மூன்றாவது முறையாக யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு வருகைதந்துள்ள பரம்பரை சோதிடக் கலையில் புகழ்பெற்ற சிவபால ஜோதிடர் புத்தாண்டை முன்னிட்டு 2004ஆம் ஆண்டு புதுப்பலன்கள் அறிவதற்கு மீண்டும் யாழ். மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க வருகைதந்துள்ளார்.
பார்க்கும் நேரம் : காலை 9 - 6 மணிவரை.
கைரேகை மட்டும் காலை 9 - 1 மணிவரை.
ராஜகுருசாமி அவர்கள்
★ கைரேகை ★ ஜாதகம் ★ எண்கணிதம்
★ பெயர்ராசி ★ திருமணப்பொருத்தம்
இவற்றில் பல வருட அனுபவமும் புகழும் பெற்றவர்.
ராஜகுருசாமி T.P. 5867
மிலேனியம் மல்ரி கொம்பிளக்ஸ்
60/1 [112], TEMPLE ROAD [Near ICRC], JAFFNA.
(26088)

IIS
புலமைப்பரிசில் திட்டம் - 2004
போட்டிப் பரீட்சை
மேற்படி புலமைப்பரிசில் திட்டத்திற்குரிய போட்டிப் பரீட்சை (நுண்ணறிவு, பொது அறிவு) நாளை (21.12.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இத்தெரிவுப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் யாவும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.
அனுமதி அட்டை கிடைக்கப் பெறாத மாணவர்களுக்கு இல. 100, மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள IIS தலைமையகத்தில் பரீட்சைக்கான விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.
இயக்குநர்:
IIS, யாழ்ப்பாணம்.

இலங்கை கணக்காளர் சேவை
தரம் II இற்கான
போட்டிப் பரீட்சை
மேற்படி பரீட்சைக்கான விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
"அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன"
விபரங்களுக்கு:
இயக்குநர்,
பட்டப்படிப்புகள் கல்லூரி,
57/13, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
ஆரம்பம்: 03.01.2004 8 மணி
28 ஆவது வருட சேவை
A/L 2006
கலை, வர்த்தக வகுப்புகள்
Acc. - திரு.பாலவாசன்.
Logic - திரு.சயந்தன்.
Geo. - திரு.பாபு.
P/Science. - திரு.மிரஞ்சகுமார்.
Eco. - திரு.உதயன் (பிரிவு 1) திரு.விக்கி (பிரிவு 2)
Tam. - திரு.குழந்தை (பிரிவு 1) திரு.மாணவ லிங்கம் (பிரிவு 2)
Hin. - திரு.N.T. சுதன்.
H/C - திரு.பத்மராஜா.
Com. - திரு.யசோ.
Hist. - திரு.சுதன், திரு.பதுமன்
Drama. - திரு.ராஜ்.
Chri. - திரு.வசந்தன்.
அன்றும், இன்றும், இனி என்றென்றும், பொருளியல் - திரு.K.உதயன்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.12.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.